# TIRUVALLUVAR TIRUNAL MALAR

IB66T:g
p7.T5

# திருவள்ளுவர் திருநாள் மலர்

## வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள்

### தமிழினத்தை ஒன்றுபடுத்தும் ஒருநாள்

ஆண்டுதோறும்
ஒவ்வொரு வீட்டிலுங் கொண்டாடுக.

**தமிழ் மறைக் கழகம்,**
இல. 44, 33ஆம் ஒழுங்கை, கொழும்பு - 6
வைகாசி க, தி. ஆ. கக௯அ௬.
(15—5—55)

சென்ற மூன்று ஆண்டுகளிலும் இத்திரு நாளைப் பற்றி ஐந்து அறிக்கைகள் வெளியிட்டுத் தமிழ் மக்கள் வாழும் இடங்க ளெங்கும் இந்நாளைக் கொண்டாடச் செய்தோம். ஐம்பதுக்கு மேற்பட்ட பத்திரிகைகள் எம்முடைய அறிக்கைகளை வெளி யிட்டும், இந்நாளைப் பற்றி ஆசிரியர் உரை, குறிப்புரை முதலி யன எழுதியும் எமது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கின. தமிழ் நாடு, வட இந்தியா, இலங்கை, பர்மா, மலாயா, சிங்கப்பூர், தென் ஆபிரிக்கா முதலிய பல இடங்களிலுமுள்ள நூற்றுக்கணக் கான சங்கங்கள் இந்நாளைச் சிறப்பாகக் கொண்டாடின. சிங்கப் பூர், கொழும்பு, திருச்சி, சென்னை வானொலி நிலையங்கள் இந் நாளன்று சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பின. சாதி மத அரசியற் கட்சி வேறுபாடுகளின்றித் தமிழ்ப் பெருமக்கள் பலர் ஆதரவளித் தனர்.

## அறிஞர்களின் பெருமுயற்சி

இத்தகைய தொருபெருமுயற்சி 1935ஆம் ஆண்டிலும் நடை பெற்றது. திருவள்ளுவர் திருநாட்கழகத்தினர் அவ்வாண்டிலே வைகாசி அனுடத்தைத் திருவள்ளுவர் திருநாளாக எங்குங் கொண்டாடச் செய்தற்குப் பெரு முயற்சி செய்தனர். அவர்கள் செய்த முயற்சி களையும், அவர்கள் வேண்டிக் கொண்டபடி, வைகாசித் திங்களிலே திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடிய சங்கங்கள் பலவற்றையும், இன்னும் பல செய்திகளையும் அவர்கள் 1935இல் வெளியிட்ட திருவள்ளுவர் நினைவு மலர் குறிப்பிடுகின்றது. பல்வேறு கட்சிகளையுஞ் சேர்ந்த தமிழ்ப் பேரறிஞர்கள் அக்கழகத் தினரின் பெருமுயற்சிக்கு ஆதரவு நல்கினர். முன் ஒருபொழு தும் நிகழாத முறையில், தமிழ் மக்கள் யாவரும் ஒன்றுபட்டு 1935இல் கொண்டாடிய திருவள்ளுவர் திருநாள் விழா அடுத்த ஆண்டுகளிலே பல இடங்களில் நடைபெறவில்லை.

"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்,"

எனும் வள்ளுவர் வாய்மொழியை நாம் மறந்து, மடிக்கும் மறதிக் கும் ஆளானோம். இனிமேலாவது இவ்வாறு நிகழாமல் யாவரும் ஒன்று சேர்ந்து, ஆண்டு தோறும் ஒவ்வொரு வீட்டிலுஞ் சிறப்பாகக் கொண்டாடும் ஒரு பெருநாளாகத் திருவள்ளுவர் திருநாளை நிலைத்திடச் செய்தல் நமது கடமையாகும். தமிழைப் பேசும் மக்களின் இன உணர்ச்சியும், தாய்மொழி ஆர்வமும், திருக்குறட்பற்றும் யாவரையும் இந்த நாளைக் கொண்டாடச்

செய்து, உயர்ந்த வாழ்வை வாழ வழிப்படுத்தும் என்னும் நம்பிக்கை எமக்குண்டு. வள்ளுவரைத் தந்த தமிழினம்—வள்ளுவரால் உலகப் புகழ் பெற்ற தமிழினம்—வள்ளுவரைப் போற்றி அவருடைய திருநாளைக் கொண்டாடுதற்கு ஒன்று படும் என்றும் எண்ணுகிறோம்.

## வேண்டுகோள்

தமிழைப் பேசும் மக்கள் யாவரும் ஒன்றுபட்டு ஆண்டு தோறும் ஒவ்வொரு வீட்டிலுங் கொண்டாடுந் திருநாளாகத் திருவள்ளுவர் திருநாள் நிலைத்திடுதற்குச் செய்யவேண்டிய பணிகள் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுகிறோம். தமிழினத்தின் ஒற்றுமைக்காகவும், தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகவும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும் இவற்றைச் செய்தருளுமாறு அன்பர்கள் யாவரையுங் கேட்டுக் கொள்கிறோம்.

1. பத்திரிகைகளும், சங்கங்கள், கல்விச் சாலைகள் முதலிய பொது நிலையங்களும் வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாக ஒவ்வொரு வீட்டிலுங் கொண்டாடுமாறு வற்புறுத்திக் கூறிக் கொண்டாடச் செய்தல். [இத்திரு நாளுடன் சில நாட்களையும் சேர்த்து வள்ளுவர் வாரமாகவுங் கொண்டாடலாம்.]
2. பத்திரிகைகள் யாவும் திருவள்ளுவர் திருநாள் மலர் வெளியிடுதல்.
3. சங்கங்கள், மன்றங்கள், கழகங்கள், கல்விச்சாலைகள் முதலியன திருவள்ளுவர் திருநாளன்று பெரும் விழாக்களை நடத்தல்.
4. வள்ளுவர் திருநாளாகிய வைகாசி அனுடத்தை அரசினர் விடுமுறை நாளாக்குவித்தல்.
5. நாட்குறிப்பு, நாட்காட்டி, பஞ்சாங்கம் முதலியன வெளியிடுவோர், இவற்றிலே வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாக ஆண்டுதோறுங் குறித்தல்.
6. யாவரும் திருவள்ளுவர் தொடர் ஆண்டை வழங்குதல்.

(இந்த ஆண்டின் திருவள்ளுவர் திருநாள் வைகாசித் திங்கள் உக ஆம் நாளாகிய [4-6-55] சனிக்கிழமை ஆகும். இந்த நாளை யாவரையுங் கொண்டாடுமாறு செய்தற்கு இப்பொழுது தொடக்கமே முயலுதல் இன்றியமையாதது.)

"அரியஎன்று ஆகாத இல்லைப். பொச்சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்." —தமிழ் மறை 537.

# உலகம் முழுவதையும் ஒன்றுபடுத்தலாம்

" ஆயிரக்கணக்காய் குழுமியிருக்கும் உங்கள் எல்லோருக்கும் நான் நல்வரவு கூறுகிறேன். உங்களிடை எத்தனையோ வேற்றுமைகள் இருக்கக்கூடும். சமய வேற்றுமை, மொழி வேற்றுமை, குல வேற்றுமை, கருத்து வேற்றுமை முதலிய பல வேற்றுமைகளால் இயற்கையாய்ப் பிரிவு பட்டிருக்கும் நீங்கள் இன்று ஒரு மனப்பட்டு இங்கே கூடியிருப்பது போற்றத் தகுந்ததொரு செயலாகும். இவ்வாறு வேற்றுமை மலிந்துள்ள நம் நாட்டு மக்களெல்லோரையும் ஒன்றுபடுத்த வேண்டுமென்பதே இன்றைய விழாக் கொண்டாட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடுமட்டுமல்லாமல், இந்தியா முழுவதும், உலகம் முழுவதும் எத்தகைய வேற்றுமையுமின்றி ஒருமைப்பட்டு உலக நன்மை கருதிச் செயலாற்ற வேண்டுமென்பதே இக் கழகத்தின் கொள்கையாகும். அக் கொள்கைக்கு எவ்வாற்ருனும் உகந்த ஆசிரியர் திருவள்ளுவரே. "

—1935இல் நிறுவப்பட்ட **திருவள்ளுவர் திருநாட்கழக தலைவர் கா. நமச்சிவாய முதலியார்** அவர்கள் சென்னையில் அவ்வாண்டு மேத் திங்கள் 18, 19ஆம் நாட்களில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாட் கொண்டாட்டத்தின் போது நிகழ்த்திய உரையில் ஒரு பகுதி.

* * * *

" பல்வேறு வகைகளில் சிதறிக் கிடக்கும் தமிழ் மக்கள் நம் தெய்வப் புலவரின் நல்வழியாகிய ஒருநெறிப் படுவார்களாயின், அதன் வழித்தாய்ப் பிற்காலத்துண்டாம் பெரும் பயனை அளவிட்டுரைக்க இயலாது. எல்லா மக்களையும் ஒருமுகப்படுத்தற்கு இதுவே சாலச் சிறந்த முறையாம். எல்லா மக்களும் பல துறையிலும் ஒரே கருத்துடையராய் விளங்குவராயின், அதைவிட நாட்டிற்கு நலம் பயப்பது வேறியாது? இதன் உண்மை உணர்ந்து மக்கள் இக் கொள்கையை மேற்கொள்வார்களாஞல் சிறப்பாகத் தமிழ் மக்கட்கும், பொதுவாக எல்லா நாட்டவர்க்கும் மேன்மேல் இன்பம் பொங்கி வளர்தல் ஒருதலை. வேண்டிய வேண்டியாங்கெய்தற்கு உறுதுணையாக விளங்கும் ஒற்றுமை என்னுஞ் செல்வத்தை உடனே அடையலாம். பின்னர் ஒவ்வொன்ருக நினைத்தவனைத்தும் கைகூடப் பெறலாம். நம் நாடு தெய்வத் திருநாடாக விளங்கும். செந்தமிழ் மாது நம்மிடையிலே அகங்களி துளும்ப, முகமலர்ச்சி எய்தத் திருநடம் புரிவாள். உலகமெல்லாம் இன்பவெள்ளம் ஊற்றெடுத் தோடக்காணலாம். "

—திருவள்ளுவர் திருநாட்கழக அறிக்கையில் ஒரு பகுதி.

# பத்திரிகைகளின் கருத்துரைகள்

எமது வேண்டுகோளினைப் பொருட்படுத்திப் பல பத்திரிகைகள் திருவள்ளுவர் திருநாளைப் பற்றி, ஆசிரியருரை குறிப்புரை முதலியன எழுதி எம்மை ஊக்கின. இவற்றுள்ளே எமக்குக் கிடைத்தனவற்றை யீண்டுத் தருகிருேம். விரிவஞ்சிச் சில பகுதிகளை இடையிடையே நீக்கிவிட்டுச் சுருக்கியுள்ளோம்.

## கல்கி—ஏப்ரல் 12, 1953.

ஒரு நாட்டின் மக்கள் தம் நாட்டில் பிறந்த பெரியோர்களைப் போற்ற அறிந்திருப்பார்களாஞல், அவர்கள் நாளுக்கு நாள் முன்னேற்ற மடைவது நிச்சயம். பெரியோர்களைப் போற்றி வழிபடுவதற்கு அறியாத எந்தச் சமூகமும் நாளுக்கு நாள் நலிந்துபடும்.

" அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் "

என்பது திருவள்ளுவர் அருளிய தமிழ் மறை.

திருவள்ளுவர் அமரரான தினம் மாசி உத்தரம் என்று சிலரும் வைகாசி அனுடம் என்று சிலரும் கருதுவதால், ஆங்காங்கே இந்த இரு தினங்களிலும் கொண்டாடுகிருர்கள். அல்லது திடீரென்று சில இடங்களில் தமிழன்பர்கள் விழித்தெழுந்து தமிழுக்கேதேனும் செய்யவேண்டுமென்று ஊக்கம் கொண்டு, ஏதேனும் ஒரு நாளில் வள்ளுவர் திருவிழா நடத்துகிருர்கள்.

குறிப்பிட்ட ஒரு தினத்தில் பெரியோர்களுடைய திருவிழாவைக் கொண்டாடுவதில் பல அனுகூலங்களுண்டு. அன்று மக்கள் அனைவருடைய நினைவும் அப் பெரியாரின் பக்கம் திரும்பி நிற்கும். அந்தத் தினத்தை முன்னிட்டுக் கொண்டு விழாவுக்கான முன்னேற்பாடுகளைச் சரிவரச் செய்யவும் சௌகரியமாயிருக்கும்,

ஈழ நாட்டிலுள்ள தமிழர்கள் தமிழன்பு மிகுதியும் கொண்டவர்களல்லவா? தமிழ் வளர்க்கும் அமைப்புக்கள் பலவற்றை நடத்திவருகிருர்கள். அவற்றில் "**தமிழ் மறைக் கழகம்**" ஒன்ருகும். இக் கழகத்தின் தலைவரான பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம் ஏ., பி. ஓ. எல். திருவள்ளுவர் திருநாளைத் தமிழர்கள் அனைவரும் ஒரே தினத்தில் கொண்டாடுவது பொருத்தமாயிருக்கு

மென்று கருதித் தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலுமுள்ள பல தமி ழறிஞர்களின் கருத்தை அறிய முற்பட்டார். காலஞ்சென்ற மறைமலை அடிகள் வைகாசி அனுடத்தையே திருவள்ளுவர் திருநாளாகக் கருதியதாக அறிந்தார். இன்னும் தமிழறிஞர்களில் பெரும்பாலோரின் கருத்து அதை யொட்டி இருந்தது. ஆதலின் வைகாசி அனுடத்தையே தமிழர்கள் வாழுமிடங்களிலெல்லாம் திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாட வேண்டுமென்று பிர சாரம் செய்து வருகிறார்.

மகான்களுடைய திருநாட்களைக் கொண்டாடவேண்டியது அவசியம். "என்றைக்குக் கொண்டாடினாலென்ன ?" என்னும் கேள்விக்குத் திருப்திகரமான விடையிறுப்பது கடினமான காரி யம். ஆயினும், நாடெங்கும் ஒரே தினத்தில் கொண்டாடுவதில் சில அனுகூலங்களுள்ளன என்பதை மறுக்க முடியாது. அவ் விதம் ஒரு தினத்தைக் குறிப்பிட வேண்டுமென்று ஏற்படும் போது, மறைமலையடிகள் போன்றவர்கள் ஒப்புக்கொண்ட வைகாசி அனுடத்தையே வைத்துக்கொள்வது சாலச் சிறந்த தாகும்.

தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலும் தமிழ் மக்கள் வாழுமிடங் களிலெல்லாம் ஒவ்வொரு ஆண்டிலும் வைகாசி அனுடத்தில் திருவள்ளுவரின் திருநாள் கொண்டாட வேண்டுமென்னும் யோசனையை நாம் முழு மனத்துடன் ஆதரிக்கிறோம். விஜய வருடத்தில் வைகாசி மாசம் 15௳ (28—5---53) யன்று திருவள்ளு வர் திருநட்சத்திரமாகிய அனுடம் வருகிறது. அன்று திரு வள்ளுவர் திருநாளைத் தமிழர்கள் சிறப்பாகக் கொண்டாடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

## செந்தமிழ்ச் செல்வி—வைகாசி 1953.

திருவள்ளுவர் திருநாள் பல அறிஞர்களின் முயற்சியால் இவ்வாண்டு மயிலாப்பூரில் திருவள்ளுவர் திருக்கோவிலில் 23-5-53 முதல் 6 நாட்கள் வரை மிகச் சிறப்புற நிகழ்ந்தது போற்றத் தக்க ஒன்றாகும். இந்நாட்கள் பொன்னாட்களாகப் போற்ற வேண்டிய நன்னாட்களாகும். இதில் பல பேரறிஞர் கள் கலந்து கொண்டு வள்ளுவர் பெருமையை, அவர் நூலின் தனிச் சிறப்பை யெடுத்து விளக்கி விரிவுரை நிகழ்த்தினர்.

இனி, ஆண்டுகள் தோறும் தவறாது இத்திருநாளை வைகாசித் திங்களில் வரும் பனை (அனுட) நன்னாளில் சிறப்

புடன் கொண்டாடுமாறு தமிழக மாந்தர்களையும், கழகங்களையும், நூல் நிலையங்களையும், பள்ளிகளையும், பிற பொது நிலையங்களை யும் வேண்டுகின்றேம். வள்ளுவர் ஒரு நாட்டுக்கோ ஒரு தேசத்துக்கோ அன்றிச் சமயத்துக்கோ சாதிக்கே உரியவரல்லர்; எல்லா நாட்டுக்கும் பொதுவானவர். ஆதலால் இதில் சமயமோ சாதியோ பிறவேறுபாடோ உள் நுழைய இடனில்லை. எனவே ஒருமித்த கருத்தினராய் இவ்விழாவைக் கொண்டாட வேண்டு வது தமிழ் மாந்தர்களின் கடமையாகும்.

இவ் விழாவை அரசினரும் ஏற்றுக்கொண்டு, இத் திரு நாட்கு விடுமுறை நாளொதுக்கி விடுமுறை நல்கும்படி சென்னை மாநில அரசியலாரை வேண்டுகின்றேம். இவ் விழா தமிழினம் தலை நிமிர்ந்து நிற்க வீறுதரும் நல்விழா. இவ் விழாவைத் தமிழக மெங்கணும் மூலை முடுக்குகளிலெல்லாம் கொண்டாடுதல் வேண்டும். அக் கொண்டாட்டத்திற்கு அரசியலார் கைகண் ணுக உதவுதல் இன்றியமையாதது. ஆதலால், அரசியலாரும் இவ் விழாவிற் பங்கெடுத்துக் கொண்டு ஆவன புரிந்து ஒன்றே குலனும் ஒருவனே தேவனும் என்னும் இன்னுரைக்கு இலக் காக இலகும் செந்நாப் போதார் திருமுறையை, உலகியல் ஒழுக்க நூலை, அரசியற் சட்ட ஆழியை, பொருள் வளங்காட்டும் அருள் வழியை, இன்பந்தரும் இயற்கைக் கருவூலத்தை எங்கும் பரப்பி நாட்டுப் பண்பையும் தமிழர் நாகரிகத்தையும் வீரத்தையும் மானத்தையும் அறிவையும் ஆக்கத்தையும் ஊக்கத்தையும் உலகினர் உணர உணர்த்தி ஒருமைப்பாடு காண ஒல்லும் வகை கடனுற்ற ஒருப்பட்டுதவுமாறு வேண்டுகின்றேம்.

## ஆத்ம சோதி—வைகாசி 1953.

திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவதின் முக்கிய நோக்கம் அவரது வாழ்க்கையிலும் வாக்கிலும் நாம் பிறவி எடுப் பதே என்பதை மறந்துவிடக் கூடாது. அப்படிச் செய்வதற்கு எந்நாளும் பொன்னுளேயாம். தமிழர் இனத்தைப் பொறுத்த மட்டில் தினம் ஒரு குறட்பாவையாவது சிந்தியாவிடின் அந்த நாள் அவர்கட்குப் பிறவா நாளேயாகும். நிற்க, எல்லாரது கவனத்தையும் கருத்தையும் ஈர்க்கு முறையில் ஒரு நாளைச் சிறப்பாகக் கொண்டாடுவது நற்பயனளிக்கு மென்பதில் ஐயமில்லை. அவ்வித விழாவிற்குப் பெரும்பாலார் ஏற்றுக் கொண்ட வைகாசி அனுடமே பொருந்தியதெனலாம். மாசி

உத்தரத்தை வள்ளுவர் பரகதியடைந்த நாளாகப் பாவிப்பதில் குற்றமொன்றுமில்லை.

இலங்கை வாழ் தமிழர்கள் அதிஷ்டசாலிகள். அவர்கள் விண்ணப்பம் செய்து கொள்ளாமலே வைகாசி அனுடம் புத்தர் பெருமானின் பேரால் அரசாங்க விடுமுறை நாளாய்விட்டது. வைகாசி விசாகத்தை விடுமுறை நாளாக்கத் தீர்மானித்துள்ள இந்திய அரசாங்கம் அதற்கு அடுத்த நாளையும் அப்படியே செய்து தமிழ் நாட்டின் நன்றிக்கு உரித்தாகுக.

## வீரகேசரி—28-5-53.

இதுவரை என்றுமே இல்லாதபடி திருவள்ளுவருக்கு இப்போது மிக நல்ல காலம் பிறந்துள்ளது போல் தெரிகிறது. அதாவது நமக்குத்தான். இன்று அவர் ஜயந்தி விழா பல பல இடங்களிலும் நடக்கின்றது. எனக்குக் கிடைத்துள்ள அழைப்புகளையும் இந்த வைபவங்களின் நிகழ்ச்சி நிரல்களையுங் காணும் போது சந்தோஷமும் ஆச்சரியமுமாக வுள்ளது.

திடீரென்று இப்படித் திருவள்ளுவர் பற்றி மறுமலர்ச்சி இங்கு ஏற்பட முக்கிய காரணஸ்தர் பண்டிதர் கா. பொ. இரத்தினம்தான். அவர் தலைமையில் சில மாதங்களுக்கு முன் தமிழ்மறைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டுத் திருவள்ளுவர் ஜயந்தியை எங்கும் கொண்டாட விசேஷ முயற்சிகள் செய்யப்பட்டன. அதன் பயனே இன்று எங்கும் வள்ளுவர் நாமமும், குறள் ஒலியும் ஒலிக்கின்றன.

## குமுதம்—20-4-54.

வருகிற 18-5-54 அன்று தமிழ் மறை தந்த தெய்வத் திருவள்ளுவரின் பெருநாள் வருகிறது. அத்தினத்தை, விசேஷப் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், சொற்பொழிவுகள் மூலம் அமோகமாகக் கொண்டாட வேண்டுமென்று தமிழ் மறைக் கழகத்தினர் எல்லாத் தமிழர்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். இந்தக் கூட்டங்களில் திருக்குறளின் சிறப்பைப் பரப்புவதுடன் நில்லாது, **அன்றைய தினத்தை விடுமுறை நாளாக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்தவும் வேண்டுமென்று** இக் கழகத்தினர் கோருவதைத் தமிழபிமானிகள் அனைவரும் ஆதரிப்பார்களென்பது திண்ணம்.

## திருவள்ளுவர்—மே, 1953.

உத்தர வேதம் உரைத்த கடவுளார் நம் வள்ளுவர் திரு நாள் மாசித் திங்கள் உத்தரம் என்றும், வைகாசி அனுடம் என்றும் இருவகையாகக் கூறப்பட்டாலும், மறைமலையடிகளார் போன்ற பேரறிஞர்கள் பலரும் வைகாசி அனுடத்தையே துணிந் துள்ளார்கள். ஆதலின், வரும் வைகாசி அனுடமே பொருந்து மெனக் கொள்கின்றோம். மயிலாப்பூரிலுள்ள வள்ளுவராலயத் தில் விசேட விழாக் கொண்டாடப்படுவதும் வைகாசி அனுடமே யாதலால் இக் கொள்கை மேலும் வலியுறுவதாகின்றது. அன்று தமிழர்கள் செயற்பாலான:-வீடுகளில் தூய்மையுடன் வள்ளுவர் படம் அல்லது குறள் நூலை அலங்கரித்து வணங்கி வழிபடுதல். திருக்குறளில் ஓரதிகாரத்தையேனும் ஓதி உரைகூறிச் சொற் பொழிவாற்றல். சிறுவர்கள் பத்துக் குறளைப் பாடம் பண்ணி ஒப்புவித்தல், வள்ளுவர் நூல் நயத்தைப்பற்றிக் கூடுமானல் மேடைகளில் சொற்பொழிவாற்றுவித்தல், திருவள்ளுவர் படத் துடன் ஊர்வலம் வருதல். யாவரும் ஒன்றுகூடி வள்ளுவர் கூறியுள்ள பலவகை அறங்களில் இயன்ற ஒரு சிலவற்றை இன்றிலிருந்து யாம் கடைப்பிடித்து மேற்கொண்டு கைவிடாது ஒழுகுவோம் என்ற நியமம் பூணல்.

## ஆனந்தன்—மாசி, 1954.

தமிழ் மறைக் கழகத்தின் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத் தினம் அவர்களின் அறிக்கை யொன்று இந்த இதழில் வெளியா கியுள்ளது.

தமிழனுடைய பெருமையின் 'எவறெஸ்ற்' திருக்குறள் என்றே சொல்லலாம். வள்ளுவரைக் கொண்டாடக் கொண் டாடத் தமிழ் வளம் பெறும்; தமிழ் வாழ்வு வளம்பெறும். ஆகவே தமிழுக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் உழைப் பதாகச் சொல்லிக் கொள்ளும் ஒவ்வொருவரும் வள்ளுவர் திருநாள் கொண்டாடுவதில் இயன்றளவு முயற்சி எடுக்க வேண்டும்.

## கதிரொளி—பங்குனி, 1954.

அறநெறியுரைக்கும் திருக்குறளைப் பல மொழியிலும் மொழி பெயர்த்து இருக்கின்றார்கள். பல மொழிகள் இதனால் புனித மடைந்துள்ளன. பல மொழியாளரும், தம் மொழியில் ஆக்கிப்

போற்றும் இந்நூலை உலகிற்களித்த தெய்வப் புலவன் திருவள்ளுவன் தினத்தைத் தேசாபிமானம், மொழியபிமானம் மிக்கோர் கொண்டாட வேண்டும். வீடுதோறும் இக்குறள் ஒலிக்க ஆவன செய்யவேண்டும். 1330 குறள் வெண்பாக்களும் தமிழர் இல்லங்களில் இருந்து ஒளி வீசவேண்டும். இதனால் இவர்கள் வாழ்வும் வளம் பெறவேண்டும். நம் நாட்டில் கல்வியறிவில்லாது இருப்போரும் வள்ளுவன் குறள் ஒன்றிரண்டு தெரிந்திருக்க நாம் முயல வேண்டும். அதற்கு வழி வள்ளுவன் தினத்தை ஒவ்வொரு நிலையங்களும் பேதமின்றிக் கொண்டாடுதலேயாம்.

## தமிழோசை—ஏப்ரல், 1954. (சிங்கப்பூர்)

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றார் பாரதியார். இப்பெருமைக்கு உரியவர், இவ்வையத்துள் பரந்து வாழ்ந்து வரும் தமிழர் என்பதில் ஐயமில்லை. தமிழர் உலகிலே பரந்து வாழ்ந்தாலும் அவர்கள் தமிழகத்தின் தனித் தமிழ்த் தோன்றல்களே. இவர்கள் தமிழ் மொழியின் சேய்களுமாவர். இவர்கள் தம் பெருமைக்கும் புகழுக்ும் எடுத்துக் காட்டாக இற்றைக்கு ஏறக்குறைய இண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தமிழகத்தில் தோன்றி மாந்தர் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி வகுத்து, அவ்வாறே ஒழுகிப்போந்த வள்ளுவர் பெருந்தகையின் திருநாள் வரும் வைகாசித் திங்கள் 5 ஆம் (18 - 5 - 54) நாளாகும்.

குறளின் பெருமை மிகப்பெரிது. தமிழர் பெற்ற செல்வத்துள் செல்வம் திருக்குறள். இத்தகைய பெருஞ் செல்வத்தை ஈந்த திருவள்ளுவர் திருநாளை நினைவு கொள்க. இத் திருநாளைத் தமிழரனைவரும் தத்தம் இல்லங்கள், கழகங்கள், சங்கங்கள், கல்விச் சாலைகள் தோறும் கொண்டாடுக. இன உணர்ச்சி கொண்டு இணைந்து நின்று எழுச்சி கொள்ளுக!

## குறள் மலர்—12-3-54

திருவள்ளுவர் திருநாள் பற்றிய தமிழ் மறைக் கழகத்தினரின் அறிக்கையைப் பிறிதோரிடத்தில் வெளியிட்டிருக்கிறோம். அவர்கள் திருவள்ளுவர் திருநாள் எப்போது, எவ்விதம் கொண்டாடப் பெறுதல் வேணடும் என்பதைப்பற்றி விரிவாக விளக்கியிருக்கிறார்கள்.

நாம் தமிழ் நாட்டில் திருவள்ளுவர் விழாவினைத் தைத் திங்கள் முதல் நாள் அன்று தமிழ்த் திருவிழாவாகக் கொண்டாடிப்

பொங்கற் பெரு நாளையும் சிறப்பிக்கிறோம். அன்றைய முதலிலே திருவள்ளுவர் ஆண்டின் புதுவருடப் பிறப்பாகவும் கொள்கிறோம்.

இதற்குப் புறம்பாக அவர்கள் கூறும் நாள் இருப்பதை அன்பர்கள் கவனிப்பார்கள். ஒரு பெரியாரை, உலக அறிஞரை எப்போது எம்முறையில் கொண்டாடினால் தான் என்ன? வருடம் முழுவதுமே ஒருநாள் கூடத்தவறாமல் கொண்டாடினாலும் தகும். கொண்டாடப் பெறவேண்டும் என்பதே நமது விருப்பமாகும். இம்முறையில் முரண்பாடு என்று எதையும் கொள்ள வேண்டாம்.

குறள் வளரவேண்டும். அதுவே நமது முக்கிய குறிக்கோள் அல்லவா? அதற்காகப் பாடுபடும் கொழும்பு தமிழ் மறைக் கழகத்தினரைப் பாராட்டுகிறோம்.

## வானொலி—7-5-54.

இம்மாதம் 18 ஆம் திகதி வான்மறை தந்த தெய்வ வள்ளுவர் தினமாகும். உறுதிப்பொருள்களான அறம் பொருள் இன்பம் மூன்றையும் தெள்ளத் தெளிய ஆராய்ந்து நுண்மதியால் வகுத்து, கடுகைத் துளைத்துக்கடலைப் புகுத்திக் குறுகத் தறித்த குறள் தந்தவர் வள்ளுவர். சுருங்கச்சொல்லி விள்ங்க வைத்தல் என்பது எழுத்துக்கும் சரி பேச்சுக்கும் சரி ஏற்ற இலக்கணம். கருத்துச் செறிவும் சொற்செட்டும் கலந்த பேச்சும் எழுத்தும் தான் பயன் மிகுந்ததாகும். சிறிய பனித்துளி எதிரிலுள்ள மலையைப் பிரதிபலிப்பது போல், சின்னஞ்சிறிய விதைக்குள்ளே ஆல விருட்சம் அடங்கியிருப்பது போல், ஒருவரியும் அதையடுத்து அரைவரியுமான குறள் பாக்களில் "இதில் இல்லாத பொருள் இல்லை" யெனுமளவுக்கு வள்ளுவர் பொதுமறை அருளிவிட்டார். திருவள்ளுவர் தினத்தையொட்டி மே 18ஆம் தேதி யன்று திருச்சியிலிருந்து பல விசேஷ நிகழ்ச்சிகள் ஒலி பரப்பாகும்.

## தர்ம சக்கரம்—சித்திரை, 1953

தமிழகத்தின் அமரச்செல்வங்களுள் தலையாயது திருக்குறள். மிக மிக உத்தம இலக்கியத்திற்கான இலக்கணங்கள் யாவும் பொருந்தியது அது என்பது யாவரும் அறிந்ததொன்று. தமிழ் நாட்டு இளைஞர் திருக்குறளில் ஊறி வளருமாறு செய்வது அனைவருடைய கடமையாகும். தனி மனிதருடைய வாழ்வில் எழும்

பிரச்னைகளுக்கும் சமுதாய வாழ்வினில் தோன்றும் சோதனை களுக்கும் குறளில் விளக்கமும் வழியும் காண்பது சாத்திய மாகின்றது.

பண்டிகைகளும் திருவிழாக்களும் பெரிய பண்பை இளைஞருடைய மனத்தின் கண் பதிய வைப்பதற்குப் பேருதவி செய்வன வாகும். திருவள்ளுவரையும் திருக்குறளையும் தமிழகத்தின் நடுநாயகமாகவும் கலங்கரை விளக்கமாகவும் இருக்குமாறு செய்ய வேண்டின் வள்ளுவர் நாளைச் சிறந்த முறையில் கொண்டாடுவது அவசியமாகின்றது. ஏதோ சில இலக்கியக் கழகங்கள் மட்டும் ஒருசிலரைக் கூட்டிவைத்து இவ்விழாவைக் கொண்டாடினால் போதாது. தமிழ் மக்கள் அனைவரும், வீடுதோறும், பள்ளிதோறும் ஒரு தேசீய விழாவாக இந்நாளைக் கொண்டாட வேண்டும். வள்ளுவர் நாளை அரசாங்கத்தார் விடுமுறை நாளாகச் செய்யவில்லையே என்று ஏங்கி நிற்பது பேதமை. 'பொது மக்களுடைய கருவிதான் அரசாங்கம்.' பேருக்கத்துடனும் பெரு முயற்சியுடனும் வள்ளுவர் நாளை மக்கள் கொண்டாட ஆரம்பித்து விட்டால் அரசாங்கம் அந்த நாளை விடுமுறை நாளாக்கியே தீரவேண்டிய நிலைமை தானே எழுந்துவிடும். ஒரு ஊரில் பெரிய விழாவைப் பொது மக்கள் கொண்டாட ஆரம்பித்து விட்டால் உடனே இரயில்வே நிர்வாகத்தினர் விசேட வண்டிகள் விடவும் பிரயாணிகளுக்கான வசதி செய்யவும் தாமே முற்படுகின்றனரல்லவா? அப்படித்தான் அரசாங்கமும் செய்ய வேண்டிவரும். பொது மக்களின் ஊக்கத்தைக் கிளரச் செய்ய வேண்டியதே நமது முதன் முயற்சியாகும்.

வைகாசி அனுடத்தன்று வள்ளுவர் நாளைக் கொண்டாடலாம் என்பது பலருடைய அபிப்பிராயமாக இருந்து வருகின்றது. இவ்வாண்டு அது வைகாசி 15ஆம் திகதி (28-5-53) அன்று அமைகின்றது. ஆனால் பள்ளிகளும் கல்லூரிகளும் அப்பொழுது விடுமுறைக்காக மூடிக்கிடக்குமாதலால் வீடுகளிலும் சபைகளிலும் ஊர்களிலும் வைகாசி அனுடத்தன்று கொண்டாட்டங்கள் நடை பெறலாம். பள்ளிகள் திறந்தவுடன் ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் மாணவர்கள் அதைக் கொண்டாடுமாறு ஏற்பாடுகள் செய்தல் நலமாகும். தமிழகத்திற்கு அப்பால் வேறு ராஜ்யங்களிலும் நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களும் ஆங்காங்கு இந்நாளைக் கொண்டாடி வருவது அவர்தம் கடமையாகும். தமிழ் நாட்டில் தோன்றித் தரணிக்கே ஒளிவிளக்கான வள்ளுவர்

நாளைத் தக்க முறையில் தமிழர் கொண்டாட ஆரம்பித்தால் பின்னர் தரணியிலுள்ள மாந்தரும் அதைக் கொண்டாட ஆரம்பிப்பது திண்ணமாகும்.

## தர்மசக்கரம்—சித்திரை 1954.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

என்பது பாரதியார் வாக்கு. தாயினையும் தாய் நாட்டினையும் போற்றுபவனே நல்லதோர் குடி மகன் ஆவான். இவ் விரண்டின் மேல் பற்றுக் கொள்ள மூல காரணமாயிருப்பது தாய் மொழிப் பற்று. ஆகவே தாய் மொழிப் பற்றுள்ளவனே தாயின் மேலும் தாய் நாட்டின் மேலும் பற்றுள்ளவனுயிருப்பான் என்பது உறுதி.

பிற நாட்டு மக்கள் தத்தம் தாய் மொழி மேல் பற்றுள்ளம் கொண்டுள்ள அளவு இன்று தமிழனுக்குத் தாய் மொழிப் பற்று இல்லை. ஆகவே எழுத்தாலும், சொல்லாலும் பிரசாரம் தேவை. அதற்கு ஏற்ற தோர் முறை வள்ளுவர் விழாவினைக் கொண்டாடுதலாகும். உலகத்திலுள்ளவற்றுள் தலை சிறந்த இலக்கியமாகிய குறள் தமிழிலே இருப்பதும் அதனை யாத்த பெரியோன் தமிழ் மகனுக விருப்பதும் தமிழ்ச் சமுதாயத்திற் கோர் தனிப் பெருமையாகும். இப் பெருமைக்குப் பாத்திரமாகத் தம்மை ஆக்கிக் கொள்வதற்குரிய வழி தமிழர் தாம் வாழும் மூலை முடுக்குகளிலெல்லாம் வள்ளுவர் விழாக் கொண்டாடுவதாகும்.

ஆகவே, இவ்வாண்டு வைகாசித் திங்கள் ஐந்தாம் நாளாகிய (18—5—54) திருவள்ளுவர் திருநாளன்று தமிழ் வாழும் இடங்களிலுள்ள அறிவு நிலையங்கள், ஆடலரங்குகள், அலுவலகங்களாய அத்தனையும் திருவள்ளுவர் நாளைக் கொண்டாட வேண்டும். இதுவே தமிழன் பெற்ற தாய்க்கும் பிறந்த பொன்னுட்டிற்கும் செய்கின்ற ஒப்பற்ற தோர் சேவையாகும்.

## கலைமகள்—வைகாசி 1954.

தமிழ் மறைக் கழகத்தின் ஆதரவில் இலங்கையில் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறுர்கள். அதன் தலைவராகிய பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் திருவள்ளுவர் திருநாளைப் பற்றி ஓர் அறிக்கை விட்டிருக்கிறுர். வைகாசி மாதம் அநுஷ நட்சத்திரத்தில் மயிலையில் உள்ள திரு

வள்ளுவர் கோயிலில் குருபூசை நிகழ்கிறது. அந்த மரபை ஒட்டி வைகாசி அநுஷத்தையே திருவள்ளுவர் திரு நாளாக நாடெங்கும் கொண்டாட வேண்டுமென்று தமிழ் மறைக் கழகத் தினரின் விருப்பம். எல்லா நாளிலும் திருவள்ளுவரைக் கொண் டாட வேண்டியதுதான். ஆயினும் எல்லோரும் ஒரு முகமாக ஒரு நாளில் விழாக் கொண்டாடுவதனல் நல்ல பயனுண்டாகும். இந்த ஆண்டு மே மாதம் 18-ஆம் தேதி வள்ளுவர் திருநாள் வருகிறது. எதிலும் வரையறையோடு செய்வது அவசியமாத லின் திருவள்ளுவரையும் திருக்குறளையும் பாராட்டிப் பயன் பெற எண்ணும் அன்பர்கள் இந்த மரபைப் பின்பற்றி விழாக் கொண்டாடலாம்.

## சமூகத் தொண்டன்—13-4-53

தமிழனின் முழுச் சக்தியும் நிரம்பிக் கிடப்பதும் தமிழ்ப் பண்பாட்டை மலர்வித்துப் பொங்கப் பண்ணும் உயிர்த் தன்மை யுடையதும் தமிழ் வேதம் எனப்படும் திருக்குறளாகும். அறத் துப் பால் பொருட் பால் காமத்துப் பால் என்னும் முப்பாலில் தமிழ்ப் பெரும் தலைமகன் வள்ளுவன் அன்று பொங்கி வைத்த அறிவுப் பொங்கல் இந்தக் குறள்மறை. இந்த முப்பாற் பொங் கல் தமிழினத்தை மாத்திரமல்ல உலகம் முழுவதையுமே இன்று பொங்குவிக்கின்றது.

தமிழ் மறைக் கழகம் நிறுவிய தலைவர் வித்துவான் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கட்குத் தமிழினம் கடமைப்பட்டிருக் கின்றது. அவர்கள் திருவள்ளுவர் தினத்தைப் பற்றி எழுதி யுதவிய கட்டுரை இவ்விதழில் வருகின்றது. 28—5—53 திரு வள்ளுவர் திருநாள். இந்த நாளை எல்லா நிலையங்களும் கொண்டாடி முப்பாலின் பொங்கலால் சன சமூக நிலையங்களில் தமிழினத்தின் வாழ்க்கை பொங்கி வழிய வேண்டுமென்று வற்புறுத்துகின்றோம்.

சுதந்திரன், தமிழ் நாடு, தினமணிக் கதிர் முதலிய பத்திரி கைகளும் ஆசிரியருரை, குறிப்புரை முதலியன எழுதியுள்ளன, இவற்றுள் பின் வரும் பத்திரிகைகளும் எமது கழகத்தின் அறிக்கைகளை வெளியிட்டு எமது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கம் நல்கின.

காவேரி, குமரகுருபரன், சங்கப்பலகை, சித்தாந்தம், செங் கோல், செட்டிநாடு, திருப்புகழமிர்தம், திராவிடன், திராவிடநாடு, தினமணி, தொண்டன், விந்தியா, அமுதசுரபி, மாணவர் சோதி, உதயம், தமிழ் முழக்கம், ஈழகேசரி, தினகரன், தமிழ் முரசு, தமிழ் நேசன், கோலாலம்பூர் மகாமாரியம்மன் கோயில் வெளி யீடு, Hindu Organ, Tamil culture.



தமிழ்மறைக் கழக ஆட்சி மன்ற உறுப்பினர்—1955.

இருப்போர் (இடமிருந்து வலம்) :—கு. பூர்ணனந்தன், பி. ஏ., சுதந்திரன் ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம், ஆசிரியர் இ. சி. சோதிநாதன் (செயலாளர்), பண்டிதர் கா. பொ. இரத்தினம், எம். ஏ., பி. ஓ. எல். (தலைவர்), பண்டிதர் மு. ஆறுமுகன் (பொருளாளர்), வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம், பண்டிதர் க. முருகேசு.

நிற்போர் :—நா. ப. பாலசந்திரன், இ. இரத்தினம் பி. ஏ., சி. க. நடராசா, வித்துவான் ச. சபாபதி, ஆசிரியர் கு. வி. செல்லத்துரை.

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

திருவள்ளுவ நாயனரை மாசி உத்தரகாரர்களுடனும் சேர்ந்து கொண்டாடுகிறேன்; வைகாசி அனுஷகாரர்களுடனும் கொண்டாடுகிறேன். நாயனரோடு தொடர்புபட்டு இன்னும் பல நட்சத்திரங்கள் பிரபலம் அடைந்தாலோ என்றும் வாயூறு கின்றேன். தமிழுக்கு அழகு செய்த—தாரணிக்கே வழி செய்த -தேவர்பிரானை இருபத்தேழு நட்சத்திரங்களிலும் கொண்டாடினுலும் கொண்டாடித் தீராது. மாசி உத்தரத்தை அடைந்த குருபூசைத் தினமாகக் கொண்டாடுவதில் தங்களுக் கும் பிறருக்கும் அபிப்பிராய பேதமில்லாத போது வைகாசி அனுடத்தை அவதரித்த தினமாகக் கொண்டாடுவதில் நிறை யன்றிக் குறையொன்று மில்லையே. தேசத்தை அணி செய்த மகானுக்கு நல்லதொரு வசந்த காலமும் வாய்த்திருக்கிறது. இந்த நல்ல காலத்திலே தாய் நாடும் சேய் நாடும் ஒன்றுபடுவதாக. சேய்நாட்டிலே கீழ்நாடும் வடநாடும் ஒருமை உறுக. (13-6-53)

## பெங்களூர் மத்திய கல்லூரிப் பேராசிரியர் எஸ். உருத்திரபதி எம். ஏ.

தங்கள் முயற்சியானது மிகவும் சாலப் பொருத்தமான நன் முயற்சியாகும். பொதுவாகப் பிளவுபட்டுக் கிடக்கும் மனித சமூகத்தையும், சிறப்பாகத் தமிழர் இனத்தையும் ஒன்றுபடுத்தி யுயர்நிலைக்கேற்றுதற்குத் திருவள்ளுவராகிய உலக மகா குருவைத் தவிர வேறு யாருமில்லை. (19-7-54)

## பாலம் கோட்டைப் புனித சவேரியார் கல்லூரிப் பேராசிரியர் திரு. ஆ. அருளப்பன் பி. ஏ.,

திருக்குறள் என்னும் பேரிலக்கியத்தைத் தந்த திரு வள்ளுவரைத் தமிழ் மக்களும் பிறரும் எல்லாவகையினும் ஏத்துதல் கடனும். அக்கடனைத் தாமும் உணர்ந்து, பிறர்க்கும் உணர்த்துதல் அவ் விலக்கியக் கருவூலத்துக்கு உரிமையுடைய தமிழரது அரும் பொறுப்பாம். அப் பொறுப்பை விருப்பொடு ஏற்றுத் தக்க வகையில் தொண்டாற்ற ஊக்கங்கொண்டு உழைத்து வரும் தமிழ் மறைக் கழகத்தையும், அதன் தலைவர் உயர் திரு. பண்டிதர் கா. பொ. இரத்தினம், எம். ஏ., பி. ஓ. எல். அவர்களையும் மனமாரப் போற்றி, வாயார வாழ்த்தி மெய்யார அவ்வழியே செயற்படுதல் நமது கடன் என்பதற்கு ஐயமின்று.

இச்சீரிய செயற்கு முதற்படி திருவள்ளுவரது திருநாளை ஒவ்வொரு தமிழனும், தமிழ்க் குடும்பமும், தமிழ் நாடும் பெரு விழா நாளாகக் கொண்டாடுதலே 1935 முதல் வைகாசி அனுட நாள் அந்நன்னாளாக அமைந்துவிட்டது எனலாம். ஆதலின் அதனை நிலைத்திடச் செய்தல் நன்றே. (19-8-54)

# வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள்

(திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் திரு கா. பொ. இத்தினம் அவர்களுக்குத் திருவள்ளுவர் திரு நாள் பற்றிச் "சுதந்திரன்" பத்திரிகையில் ஒரு 'பகிரங்கக் கடிதம்' விடுத் தார். அதற்கு மாற்றுரையாகப் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் இவ்வுரையினை வெளியிட்டார். இவ்வுரையில், அறிஞர்கள் முன்னரே கூடிச் செய்த முடிபின்படி பல்லாண்டுகளாகத் திரு வள்ளுவர் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருவது வைகாசி அனுடமே என்பது நிலைநாட்டப்பட்டுளது; தமிழினத்தின் ஒற்றுமையையும் உயர்வையும் உண்மையில் விரும்பும் எவரும் மரபுவழி வந்த இந்த நாளுக்கு மாறாக எதனையுஞ் செய்யமாட்டார்கள் என்பதும் காட்டப்பட்டுளது.)

சுதந்திரன் 28-3-54 இதழிலே அன்பர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் வெளியிட்ட பகிரங்கக் கடிதத்தைக் கண்டேன். அன்பர் விசுவநாதம் அவர்கள் எனக்கு நேரே எழுதியிருந்தால் எமது கழகத்தின் கொள்கையை யான் அவருக்கு விளக்கி யிருப்பேன். பத்திரிகையிலே பகிரங்கக் கடிதமாக வெளியிட்டதால், வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாக எங்குங் கொண்டாடச் செய்யும் எமது முயற்சியை ஆதரித்தும் போற்றியும் தமிழ் நாட்டறிஞர் பலர் எழுதிய உரை களையும் பிறவற்றையும் அன்பர் விசுவநாதம் அவர்களுக்கு மாத்திரமன்றி, ஏனைய அன்பர்களுக்கும் அறிவித்தற்கு இப் பொழுது வாய்ப்புக் கிடைத்துளது. இன்னும் "அனுசம் வடமொழி" என்று கூறுகிறவர்களை, அதனைப் "பனை நாள்" என்று தமிழிலே கூறிக்கொண்டு மாறுபாடின்றி எங்களுடன் ஒத்துழையுங்கள் என்று கேட்பதற்கும், திருவள்ளுவர் திரு நாளைத் தை முதல் நாளிற் கொண்டாடுகிறவர்களை, வைகாசி அனுடமே தனிச் சிறப்புடைய நாள்; மறைமலையடிகள், டி. கே. சிதம்பரநாத முதலியார், திருவாளர்கள் இராசகோபாலாச்சாரி யார், ஈ. வே. இராமசாமி நாயக்கர், சி. என். அண்ணாத்துரை, சேர் பி. டி. இராசன், ஆ. கசபதிநாயகர் முதலிய பெரியோர் களும் சேர்ந்து கொண்டாடிய திருநாள்; ஆகையால், இந்த வைகாசி அனுடத்தையே கொண்டாட ஒற்றுமையுடன் சேருங்கள் என்று அழைத்தற்கும் வாய்ப்புக் கிடைத்துளது. இந்த வாய்ப்புக்களை உண்டாக்கியமைக்காக அன்பர் விசுவநாதம் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

## வைகாசி அனுடத்தைப் பலரும் ஆதரித்தனர்

வைகாசி அனுடத்தைச் சென்ற ஆண்டிலே தமிழகத்திலும் ஏனைய இந்திய மாகாணங்களிலும், இலங்கை, மலாயா, தென் னாபிரிக்கா, பர்மா முதலிய இடங்களிலுங் கொண்டாடினார்கள். தமிழகம் தவிர்ந்த ஏனைய இடங்களிலே வள்ளுவர் திருநாளைத்

தை முதல் நாளிலே யாரேனுங் கொண்டாடியதாகத் தெரிய வில்லை. தமிழகத்திலே தை முதல் நாளைச் சிலர் கொண்டாடு கிருர்கள் என்பதை அன்பர் விசுவநாதம் இப்பொழுதுதான் கூறுகிருர்.

தமிழகத்திலுள்ள செந்தமிழ்ச்செல்வி, திராவிட நாடு, குறள் மலர், தமிழ்நாடு, கல்கி, திருவள்ளுவர், சித்தாந்தம், தொண்டன், குமர குருபரன், செட்டிநாடு, தர்மசக்கரம் முதலிய பல பத்திரிகை கள் எமது கழகத்தின் அறிக்கைகளை வெளியிட்டும் ஆசிரியருரை முதலியன எழுதியும் எமது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கின. வைதிகக் கொள்கை, தனித் தமிழ்க் கொள்கை, திராவிடக் கொள்கை முதலிய பல கொள்கைகளை யுடைய இந்தப் பத்திரிகைகளின் ஆதரவு கிடைத்தமை எமக்குக் பேரூக் கத்தைத் தந்தது. திருக்குறளைப் பரப்பும் முயற்சிக்குத் தமிழ் மக்கள் எவ்வித வேறுபாடுமின்றி ஒற்றுமையாக ஆதரவளிப் பார்கள் என்று யாம் எண்ணியது எண்ணியவாறு பெரும்பாலும் நிறைவேறியது.

இந்தப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளைப் படித்து மகிழ்ந்து எமக்கு எழுதி ஊக்கம் ஊட்டிய தமிழ் நாட்டறிஞர் பலராவர். ஒருவரேனும் வைகாசி அனுடத்தை விட்டுவிட்டுத் தை மாதம் முதல் நாளைக் கொண்டாட வேண்டும் என்று எமக்கு எழுதவுமில்லை; யாமறிந்த அளவில் பத்திரிகை களிலே பகிரங்கக் கடிதத்தையோ, பிறவற்றையோ வெளியிடவு மில்லை.

## வானெலி நிலையங்களின் ஒத்துழைப்பு

சென்ற ஆண்டிலே, திருச்சி வானெலி நிலையத்தார் அனுட நாளைக் கொண்டாட ஏற்படுத்திய நிகழ்ச்சிகளிலே 'வள்ளுவர் கனவு' என்பதும் ஒன்று. இந்த நிகழ்ச்சிக்குக் குன்றக்குடி அடிகளார் தலைமை தாங்கினுர். அன்பர் விசுவநாதம் அவர்களுடன் திருவாளர்கள் ஜெகவீர பாண்டியன், செய்யது இஸ்மாயில், ரெவரெண்ட் மொரெய்ஸ் எனும் மூவரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியிலே கலந்து கொண்டமையாலேதான், அன்பர் விசுவநாதம் அவர் களுக்கு யாம் இம்முறை எமது கழக அறிக்கையினை அனுப்பினேம்; அவருடைய கருத்தையும் அறிய விரும்பினேம்.

சென்ற ஆண்டிலே வைகாசி அனுடத்தன்று, திருவள்ளுவர் திருநாளுக்காகச் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யுமாறு சென்னை திருச்சி வானெலி நிலையங்களுக்கு யாம் எழுதினேம். எமது கேள்விக்கிசைந்தே அந்நிலையங்கள் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தன. இதற்காக யாம் மாத்திரமன்றித் திருக் குறளைப் போற்றும் அன்பர்கள் யாவரும் அந்நிலையங்களுக்கு நன்றி கூறல் வேண்டும். இந் நிலையங்களுடன் கொழும்பு,

சிங்கப்பூர் நிலையங்களுங்கூட விசேட நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தன. இந்த ஆண்டுத் திருவள்ளுவர் திருநாளன்றும் (18-5-54) இவை யாவும் விசேட நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வ தாகவும் அறிவித்துள. இந்தி மொழியிலும் பிறமொழிகளிலும் திருக்குறளைப் பற்றிய பேச்சுக்களை 18-5-54-இல் ஒலி பரப்ப வேண்டுமென்று 'டெல்லி' வானொலி நிலையத்தையுங் கேட் டுளோம். சென்ற ஆண்டிலே நாம் கேட்டுக்கொண்டதற் கேற்ப எமது இலங்கை வானொலி நிலையம் சிங்களத்திலும் ஆங்கிலத் திலும் திருக்குறளைப் பற்றிய பேச்சுக்களை ஒலிபரப்பியது.

சென்னை வானொலி நிலையத்திலே சென்ற ஆண்டுத் திரு வள்ளுவர் திருநாளன்று "வள்ளுவம்" என்பதைப் பற்றிப் பேசியவர் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு ஆ. கசபதி நாயகர் ஆவார். இப்பெருமகனர் வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாகக் கொண்டாடும் திருமயிலைத் திருவள்ளுவர் கோயி லின் அறநிலைப் பாதுகாவலருமாவார்.

மேலும் இப்பெரியாரே பல கட்சியினரும் கலந்து சென்னை யிலே 20-12-53 இல் நடத்திய தமிழ் ஆட்சி மொழி மாநாட்டுக் குத் தலைமை தாங்கியவர் என்பதையும் குறிப்பிடவிரும்புகிறேன். அம்மாநாட்டுக்குத் திரு. ஆ. கசபதி நாயகரைத் தலைவராக வழி மொழிந்து அன்பர் விசுவநாதம் பின்வருமாறு பேசியுளர். "தலை வர் அவர்கள் இம்மாநாட்டுக்குத் தலைமை தாங்க மிகப் பொருத் தம் உடையவர். அவர் ஒரு சட்ட நிபுணர்; மாவட்ட நீதிபதி யாகவும் செஷன்ஸ் நீதிபதியாகவும் தனி நீதிபதியாகவும் இருந் தது மட்டுமன்றிப் பல இடங்களில் திருவள்ளுவர் கழகங்களை நிறுவித் தமிழுக்கே வேலைசெய்து வருகிறார்" ஆகவே இந்தப் பெரியார் கசபதி நாயகரை அன்பர் விசுவநாதம் தமிழ்ப் பகைவர் கூட்டத் திற் சேர்க்கமாட்டார் என்றே எண்ணுகிறோம். இந்தப் பெரியார் அவர்களும் வைகாசி அனுடத்தையே வள்ளுவர் திருநாளாகக் கொண்டாடுமாறு அறிக்கைவிட்டுத் தமிழ்மக்களைக் கேட்டுளர் என்பதை அன்பர் விசுவநாதம் அறியார்போற் பேச முற்பட்டது பெரும் விந்தையாகும்,

எனவே திருவள்ளுவர் திருநாட்டொடர்பில் வானொலி நிலை யங்களைப்பற்றி அன்பர் விசுவநாதம் கூறுபவற்றை எவரும் ஏற்றுக் கொள்ளுதல் முடியாது, அன்பர் விசுவநாதம் கேட்க மறுத்துவிட்டு, யாம் கேட்க அவை உடன்பட்டன என்றால் அதற் குரிய காரணத்தை ஆராய்ந்து அதை நீக்க முயற்சித்தல் அவர் கடன். இதைவிடுத்துத் தோல்விமனப்பான்மையைக் காட்டு தலும், பிறர்மேல் சந்தேகப்படுதலும் பொருத்தமற்றன. அரசியற் கட்சி வேறுபாடுகளைத் திருவள்ளுவர் திருநாளுடன் மோதச் செய்யாதிருக்குமாறு தமிழ் மக்கள் யாவரையும் வேண்டிக் கொள்கிறோம்.

இனி, திருவள்ளுவர் திருநாளைப் பொறுத்த அளவில் தமது கருத்திலேதான் பெரும் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதை அன்பர் விசுவநாதம் இப்பொழுதாகுதல் உணர்வார் என்று எண்ணுகிறோம். தமிழ் நாட்டுப் பேரறிஞர்கள் பலருடைய கூற்றுக்கள் அவருக்கு உண்மை நிலைமையைக் காட்டி எம்முடன் ஒத்துழைக்கவுஞ் செய்யும் என்றுங் கருதுகிறோம்.

## அறிஞர்களின் ஆதரவுரைகள்

வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாகத் தமிழைப் பேசும் மக்கள் ஒவ்வொருவருடைய வீட்டிலும் கொண்டாடுவிக்க யாம் செய்யும் முயற்சிகளை ஆதரித்தும் போற்றியும் தமிழ்நாட்டுப் பேரறிஞர்கள் எமக்கு அனுப்பிய செய்திகளிற் சிலவற்றை ஈண்டுத் தருகிறோம்.

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை **24-2-54**இல் எழுதியது:

திருவள்ளுவர் திருநாள் தமிழ்நாட்டிற் பெரும்பாலும் வைகாசி அனுடத்திலேதான் நடைபெறுகிறது. இந்த ஆண்டில் 18-5-54 தொடங்கி அத்திருநாள் பல திருவள்ளுவர் கழகங்களில் நடைபெறவிருக்கின்றது. சென்னை அரசாங்கம் வள்ளுவர் திருநாளை விடுமுறை நாளாக்குதற்கு இன்னும் சில காலம் செல்லும். தென்காசியில் 18-5-54இல் நடைபெறவிருக்கும் திருவள்ளுவர் திருநாள் நிகழ்ச்சிகளைச் சென்னை வானொலி நிலையம் அஞ்சல் செய்யும். நானும் சிறிது பேசுவேன்.

சென்னை மாநிலத் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞான கிராமணியார் **15-3-54**இல் எழுதியது:

தங்கள் அறிக்கை வரப்பெற்றேன். திருவள்ளுவர் திருநாள் பற்றித் தாங்கள் கொண்டுள்ள கருத்தை வரவேற்கின்றேன். வைகாசி அனுடத்தில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடுவதில் நானும் தமிழரசு இயக்கத்தாரும் பரிபூரணமாக ஒத்துழைப்போம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் பண்டிதர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் 20-3-54 இல் எழுதியது:

உலகப் பொது நூலாகிய திருக்குறளை இயற்றி வழங்கிய திருவள்ளுவர் திருநாளை ஆண்டுதோறும் கொண்டாடவும், திருக்குறளை எல்லாரும் படித்துப் பயன்பெறவும் தாங்கள் ஆவன செய்வது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். தங்கள் தொண்டு பெரிதும் பாராட்டுதற்குரியதாகும்.

மதுரைத் தியாகராயர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனர் 12-3-54 இல் எழுதியது :

தாங்கள் மேற்கொண்டுள்ள முயற்சி-திருவள்ளுவர் திருநாள் கொண்டாட்டம்-மிகவும் பாராட்டத்தக்கது. தங்கள் தமிழ்ப்

பற்றும் தமிழ் மறையின்பால் தாங்கள் கொண்டுள்ள நன்மதிப்பும் போற்றத்தக்கன. தங்களது பெருமுயற்சிக்கு எனது வாழ்த்தும் ஒத்துழைப்பும் உரியதாகுக.

சாத்தூர் வழக்கறிஞர், சித்தாந்த சிரோன்மணி ரி. எஸ். கந்தசாமி முதலியார் 16-3-54-இல் எழுதியது :

துன்பத்தால் புய்க்கப்பட்டுள்ள இவ்வுலகினுக்கு அமைதியும் நலனும் அளிக்கவல்லது வள்ளுவர் வகுத்த மாட்சிமிக்க அறநெறியே ஆகும். ஆதலால் வள்ளுவர் நெறி உலகின் எம் மருங்கினும் முழங்குமாறு செய்தல் தமிழர் கடன். இந்நெறியிலிறங்கித் தங்கள் கழகம் பணி செய்து வருவது கண்டு பெருமகிழ்ச்சி யுடையேன். திருவள்ளுவர் திருநாள்பற்றியும் இரண்டு வேறுபட்ட கொள்கைகள் சென்ற ஆண்டுவரை இருந்தன என்பது உண்மையே. ஆனல் தங்கள கழகத்தின் பெருமுயற்சியால் வள்ளுவர் திருநாள் வைகாசித் திங்கள் அனுட நாள என்பது உறுதியாய் நிலைபெற்றுவிட்டது. தங்கள் கழகம் உலகத் தமிழ் மறைக் கழகமாக விளங்கிப் பல்வகையினும் தொண்டாற்றவேண்டுமென்பது என் அவா. வள்ளுவர் வாய்மொழியை உலகத்திற் சிறந்த மொழிகளிலாயினும் மொழி பெயர்த்து, அவ்வந்நாட்டில் பரப்புதல் வேண்டும். அந்நெறியைக் கடைப்பிடித்தல் வேண்டுமெனத் தாங்கள் கருதுவது பாராட்டப் படக்கூடியது.தாங்கள் மேற்கொண்டுள்ள திருப்பணியில் நானும் கலந்து கொள்கிறேன்''

கவியோகி சுத்தானந்த பாரதியார் 15-3-54-இல் எழுதியது :

தமிழ்க் கலையின் உயிர் திருக்குறள்; உள்ளம் திருவாசகம். வள்ளுவர் பொதுமறையை உலகில் பரப்பும் முயற்சி மிக நன்று. திருக்குறளை ஆங்கிலம் ஐஞ்சீர் முச்சீர்களில் மொழி பெயர்க்க வேண்டும். திட்பநுட்பமாக மொழிபெயர்த்தல் நலம். பொது மறையைப் பொதுமையுணர்வு ததும்ப மொழிபெயர்த்தால் நலம். இதன்பால் எனது தொண்டைத் தாங்கள் எதிர்பார்க்கலாம். புலவர் மலிந்த நாவலர்—இலங்கை பொதுமறைத் தொண்டு செய்தலே பொருத்தமானது.

'' முயல்க முயல்க முயல்க மேன்மேலும்
பயன்களை வைத்தீசன் பதம்''.

சேரமங்கலம், ஆசிரியர் புலவரேறு அ. வரதநஞ்சையன் 24-3-54இல் எழுதியது :

மக்கள் வாழ்க்கை நிகரற உயர்ந்து நாடு மேம்பட்டு வாழ வேண்டுமெனில் திருக்குறள் வழிச் சென்றே தீர வேண்டும். தாங்கள் மேற்கொண்டிருக்கும் திருப்பணிக்கு ஏற்ற காலமும் இதுவே. தமிழ்நாட்டின் வறுமையும் சிறுமையும் தீர்த்தற் கேற்ற நல்லதோர் வழியைக் கண்டு ஊக்கத்துடன் செயலிற் காட்ட முனைந்த தங்கள் அடிச் சுவட்டைப் பின்பற்றி ஒழுக எம் போல்வார் பெரிதும் கடப்பாடுடையவர்களேயாவர்.

தங்கள் கழகத்தின் ஆதரவாளர்களில் எளியேனும் ஒருவ ளுக இருந்து அவ்வப்போது தங்கள் கட்டளைப்படி இயன்றன செய்யத் துணிந்துள்ளேன்,

தருமபுர ஆதீன வித்துவான் "பாலகவி" வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் விசய, மாசி 30ல் எழுதியது :

உலக மகாகவியாகிய வள்ளுவர் பெருமானது திருநாளை அவர் தோன்றிய தமிழகமெங்கணும் வீடுகள்தோறுங் கொண்டாடப்பெறுதல் வேண்டும் என்பது குறித்துத் தாங்கள் மேற்கொண்டுள்ள நன்முயற்சிகளை அறிந்து நான் மிக மிக மகிழ்கின்றேன்.

தமிழ்மறை தந்த பெருமுனிவர்க்கு அமைக்கப்பெற்றுள்ள தமிழ் நாட்டுத் திருக்கோயில்களுள் மயிலைத் திருக்கோயில் முன்னணியில் இருப்பது. ஆங்குத் திருவள்ளுவர் திருநாள் வைகாசி அனுடத்தில் கொண்டாடப் பெற்று வருவதொன்றே தங்கள் கருத்திற்குப் போதிய சான்ருகும். எவ்வாற்ருனும் திருவள்ளுவர் பெருமானைத் தமிழகத்தார் நெஞ்சில் இடையீடின்றி நிலைநிறுத் தற்கான தொண்டு புரியும் தங்களுக்குத் தமிழகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது.

காஞ்சிபுரம் க. வச்சிரவேல் முதலியார் 15-3-54இல் எழுதியது:

காஞ்சி மெய்கண்டார் கழகத்திலும்...கச்சித் தமிழ்க் கழகத்திலும் தாங்கள் குறிப்பிடும் நாளிலே கொண்டாடச் செய்வோம். தங்கள் கழகத்தின் அரிய முயற்சியைப் பாராட்டுகிறேன். தங்கள் முயற்சி இயற்கைத் தூய உணர்வும் பொருள்சேர் புகழும் உள்ள செம்பொருளாகிய இறைவன் இன்னருள் துணையால் யாவர்க்கும் நலன் பயக்க.

பாண்டிச்சேரி ரா. தேசிகன் 20-3-54இல் எழுதியது:

திருவள்ளுவர் திருநாளைத் தமிழர்தம் வீடுகளிலே கொண்டாட வேண்டிய கடமையைத் தமிழ் மக்கள் அனைவரும் உணர்வர் என்பதில் ஐயமில்லை. தமிழர் மாத்திரமேயன்றித் திருக்குறளைப் பிறமொழிகளின் வாயிலாகக் கற்றுணரும் வேற்றினத்தாரும் திருவள்ளுவரைக் கொண்டாடும் நிலை உண்டாக வேண்டுமென்பது என் உள்ளக்கிடக்கை

கோவை சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் 14-3-54 இல் எழுதியது :

தங்கள் முயற்சி மிகுந்த நலம் பெருக்கும் முயற்சியாக இருக்கின்றது. இதனைத் தமிழ்நாடு ஏற்றுக் கொண்டு வெற்றி திகழ நடைமுறையில் ஈடுபடும் என்று நம்புகிறேன்.

பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன் **17-3-54**இல் எழுதியது :

தமிழினம் இனித் திருக்குறளை ஒட்டியும் திருவள்ளுவரைப் போற்றியும் ஒன்றுபட்டால்தான் வாழ முடியும்.

தங்கள் முயற்சியைப் போற்றுகிறேன். 'ஆக்கம் அதுவிஞய்ச் சேர்வதாக.'

சுவாமி சித்பவானந்தா அவர்கள் 13-3-54இல் எழுதியது :

தாங்கள் எடுத்துள்ள முயற்சி மிக மேலான முயற்சியாகும். இது நன்கு நடைபெற இறைவனைப் பிரார்த்திக்கிறோம். திருவள்ளுவர் திருநாள் கொண்டாடுவது பற்றிச் சென்ற ஆண்டு தர்மசக்கரத்தில் குறிப்புகள் என்னும் தலைப்பில் வெளியிட்டோம். இவவாண்டும் சித்திரை முதல் தேதி வெளியாகும் இதழிலும் வெளியிடுவோம்.

பொய்யா மொழிப் பூஞ்சோலை ஆசிரியர் அ. முத்துசாமிப்பிள்ளை 24-3-54இல் எழுதியது :

கொழும்புத் தமிழ் மறைக் கழகம் திருவள்ளுவர் திருநாளை ஒரு தனிப்பெரும் விழாவாகச் சிறப்பான முறையில் கொண்டாடும் பொருட்டு மேற்கொண்ட முயற்சி மிகமிக இன்றியமையாத தொன்றேயாம். தங்கள் முயற்சி நன் முயற்சி; நன்மை பயக்கும் இனிய முயற்சி. இவ்வரும் பணியைத் தங்கள் கழகம் மேற்கொண்டது தமிழ் நாட்டின தவப்பேறேயாம். இம்முயற்சியில் கழிபேருவகையுடன் அடியேன் முழுமனதுடன் கலந்துகொள்ளுகிறேன் ;

புதுக்கோட்டைத் திருக்குறள் கழகச் செயலாளர் புலவர் சி. இலக்குவனர் 23-3-54இல் எழுதியது :

தங்கள் வேண்டுகோளின்படி மே 18 இல் (வைகாசி 3 இல்) திருவள்ளுவர் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றோம். திருக்குறள் இசையரங்கும், சொற்பொழிவுகளும் முதன்மையிடம் பெறும். பிற நிகழ்ச்சிகளைப் பின்னர் அறிவிக்கின்றோம்.

ஆங்கு நிகழப்பெறும் திருக்குறள் பற்றிய தொண்டுகளை அறிவித்தால் எமது வார வெளியீடாம் குறள் நெறியில் வெளியிட்டுத் தமிழுலகம் அறியுமாறு செய்கிறோம்.

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் 6-3-54 இல் எழுதியது :

இந்நாட்டில் இயற்கையாகவே வைகாசி அனுடத்தில் இந்நாள் பலராலும் கொண்டாடப் பெறுகிறது. தமிழினம் ஒன்று சேர்ந்து போற்றவேண்டிய இந்நாளிற்கூடச் சிலரிடையே கருத்து வேறுபாடு ஏற்படுவது தமிழனின் துரதிஷ்டமே போலும்.

சோம. லெ. இலக்குமணச் செட்டியார் 12-3-54 இல் எழுதியது :

வைகாசி அனுடத்தைத் திருவள்ளுவர் நாளாகக் கொண்டாடுவதே சாலச் சிறந்தது. அவ்வாறு கொண்டாட மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை, சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம், காரைக்குடி திருக்குறள் கழகம் முதலியவற்றின் வாயிலாக ஆவன செய்வேன்.

சைவ சித்தாந்த மகாசமாசச் செயலாளர் **ச. சிவகுமாரன் 15-3-54** இல் எழுதியது :

தங்களது திருக்குறள் வளர்ச்சி முயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்றேன். ஒல்லும் வகை யானும் அவ்வழியே இங்கு உழைக்க முயல்வேன்.

வேதாரணியம் சர்தார் அ. வேதரத்தினம் **27-3-54** இல் எழுதியது :

தமிழ் மறைக் கழகம் ஆற்றிவரும் அரிய தொண்டுகளை அறிய மனதிற்கு மிகச் சந்தோஷமாக இருக்கிறது. தாங்கள் ஆற்றிவரும் பணிக்கிணையாயது பிறிதொன்றில்லை. தமிழ் மொழிக்கோர் விழா நடத்திய ஈழத்தில், தமிழ் மறைக்கு விழா நடத்த முன் வந்ததில் வியப்பில்லை. மிகுந்த சிரமத்துடன் தமிழ் மறை வெளிவந்துள்ள மொழிகள் பற்றிய விபர அறிக்கை வெளியிட்டிருப்பது பாராட்டத்தக்கது.

கும்பகோணம் அரசினர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் அ. கிருஷ்ணமூர்த்தி **28-3-54** இல் எழுதியது :

1935 இல் சென்னையில் கொண்டாடிய வள்ளுவர் விழாவை யொட்டி எனதூர் ஐயம்பேட்டையில், ஐயம்பேட்டைத் தமிழ்ச் சங்கச் செயலாளன் என்ற முறையில் அவ்விழாவை யானும் அஞ்ஞான்று நடத்தினேன். ஒல்லும் வகையெல்லாம் இது காறும் அப்பணியை நெடிது செய்து வந்திருக்கிறேன். அச் சென்னை விழாவை முன்னிகழ்ச்சியாகக் கொண்டு இந்நாடு தொடர்ந்து இப்பணி புரிய முனைந்திருப்பது தமிழுலகின் பெருந் தவப் பயன் என்றே கொள்ளல் வேண்டும்.

தமிழ் வளர்ச்சிக் கழகச் செயலாளர் ம. ப. பெரியசாமித்தூரன் **22-3-54** இல் எழுதியது :

திருவள்ளுவர் நெறி பரவுதற்குத் தாங்கள் செய்யும் முயற்சியை நான் பெரிதும் பாராட்டுகிறேன். தங்கள் முயற்சி ஓங்குக.

தென்காசி வழக்கறிஞர் ஏ. எஸ். சண்முகநயினர் **29-3-54** இல் எழுதியது :

இவ்வூரில் நாங்களும் இயன்ற அளவு திருவள்ளுவர் பணி செய்து வருகின்றோம். 27 ஆண்டுகளுக்கு முன் ஒரு கழகம் (தென்காசித் திருவள்ளுவர் கழகம்) நிறுவப்பட்டு ஒவ்வொரு ஆண்டிலும் வைகாசி அனுடத்திலிருந்து மூன்று நாட்கள் திருவள்ளுவர் விழா நடந்து வருகிறது. தமிழைப் பேசும் மக்கள் யாவரும் தத்தம் வீட்டில் திருவள்ளுவர் நாளைக்கொண்டாடுவது மிக முக்கியமானதோர் கடமை. இக்கடமையை நிறைவேற்றினல் பொதுமறையாகிய திருக்குறள் எல்லா மக்களிடமும் பரவியிருக்கிறதென்பது விளங்கும். இப்பெரு முயற்சியில் தங்கள் கழகம் ஈடுபட்டு வேலை செய்து வருவது மிகவும் போற்றத் தகுந்தது.

காரைக்குடி வித்துவான் வ. சுப. மாணிக்கம் அவர்கள், 5-2-54 இல் எழுதியது:

வள்ளுவத் தோன்றலுக்கு நாளொன்று காண அரும்பாடு படும் தங்கள் எண்ணம் நன்கு நிறைவேறுக.

அறிஞர் பொ. திரிகூடசுந்தரம் பிள்ளை அவர்கள், 26-3-54 இல் எழுதியது:

தமிழ் மறைக் கழகத்தின் முயற்சியினை அறிந்து கழிபேருவகை எய்துகிறேன். உலகமெங்கும் வள்ளுவர் மறையின் ஒளி பரவுமாறு எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றேன். 1891 இல் டால்ஸ்டாய் இந்தியப் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையின் தலைப்பில் திருக்குறள்கள் சிலவற்றை எடுத்து எழுதியிருப்பது மிகுந்த மகிழ்ச்சி தருவதாகும்.

கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன், 26-5-54 இல் எழுதியது:

"குறள்நூலை வேதமெனக் கொண்டுதிரு வள்ளுவரைக்
கொண்டா டற்குத்
திறமுறுநாள் வைகாசி அனுடமென மரபறிந்து
சிறப்ப ஏற்றே
அறமுறையும் பொருள் நெறியும் காமவிய லதுவுமவன்
அருநூல் சொல்லுந்
துறைவழியே நனியுணர்ந்து பேசுவதற்கும் வாழ்வதற்கும்
சூழ்ந்து நின்றார்.

அன்னவர்யா ரெனிலிலங்கை துன்னுதமிழ் மறைக்கழகத்து
அன்பர் அன்னார்
முன்னவர்கள் மயிலையினில் வள்ளுவனார் ஆலயத்தில்
முறையின் ஆற்றி
நன்னர்வழி பாடுசெய்யும் திருநாளே திருநாளா
நாட்டு கின்றார்.
இன்னசெயல் மிகவோங்கித் தமிழுலகம் போற்றும்வகை
எழுக வாழ்க."

கலைவாணர் என், எஸ். கிருஷ்ணன் 26-5-53 இல் எழுதியது:

தங்களின் அருமுயற்சிக்கு எனது பாராட்டுதல்கள். வாழ்க வள்ளுவன்! வழங்குக அவன் குறள் வையமெல்லாம்!!

இரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் 28-1-53 இல் எழுதியது:

திருவள்ளுவர் திருநாளை மிக்க சிறப்போடு நடத்துகிறீர்கள். பலரும் கலந்துகொள்கிறார்கள். என் சந்தோஷத்தைத் தங்களுக்கும் மற்றத் தொண்டர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடுமலைப்பேட்டை திருவள்ளுவர் மன்றச் செயலாளர் ச. சொக்கலிங்கன் 19-2-53 இல் எழுதியது:

திராவிடன் இதழொன்றில் தாங்கள் விடுத்திருந்த அறிக்கையினைக் கண்டு பெருமகிழ்வெய்துகின்றோம். தமிழகம் எங்

கணும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவதில் நாங்களும் பங்கு கொள்கிறோம்.

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர், 'கல்கி' ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி, 18-2-54 இல் எழுதியது :

திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவதற்குத் தாங்கள் செய்துவரும் முயற்சியைப் பாராட்டுகிறேன்.

அகில மலாயாத் தமிழ்ப் பண்ணைத் தலைவர், கா. இராமநாதன் 25-3-54 இல் எழுதியது :

அரிய பணிகள் தொடர்ந்து நடைபெறுவது மிக மகிழ்ச்சி. சென்ற ஆண்டிற்போல இங்குத் தமிழ்ப் பண்ணையிலே 18-5-54 வள்ளுவர் விழாக் கொண்டாட முயலுகிறோம். சீன மொழி ஒன்றில் சில குறள்களை மொழி பெயர்க்க வேண்டுமென்று சில ஆண்டுகளாக எண்ணியுள்ளேன். தாங்கள் ஆங்குச் செய்து வரும் அரும் பணிக்கு என்னால் இயன்ற ஆதரவைத் தரக் காத்திருக்கிறேன்.

சிங்கப்பூர் 'தமிழோசை' ஆசிரியர் செ. ஐயாத்துரை 1-3-54 இல் எழுதியது :

திருவள்ளுவர் திருநாளை ஒவ்வொரு இல்லத்திலும் கொண்டாடுவிக்க இயன்ற பணி செய்ய என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம். திருவள்ளுவர் திருநாள் மலர் வெளியிடுதற்கு ஏற்பாடு செய்து வருகிறோம்.

* * *

வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாகத் தமிழ் மக்கள் வாழும் இடமெங்கும் கொண்டாடச் செய்துவரும் எமது கழகத்தின் முயற்சியைப் போற்றி ஆதரவளிக்க முற்பட்டுள்ள தமிழறிஞர் இன்னும் பலராவர்.

வைகாசி அனுடத்தையே வள்ளுவர் திருநாளாகத் தமிழ் நாட்டிலுள்ள தமிழ்க் கழகங்கள் பலவும் கொண்டாடுகின்றன. 18-5-54 ஐக் கொண்டாடுவதாக எமக்கு எழுதி யறிவித்த தமிழ் நாட்டுக் கழகங்களும் பலவாகும். பம்பாய்த் தமிழ்ச் சங்கம், பாரதி தமிழ்ச் சங்கம் கல்கத்தா, குண்டக்கல் தமிழ்ச் சங்கம், அகில மலாயத் தமிழ்ப் பண்ணை, அகில பர்மாத் தமிழர் சங்கம் முதலியன வும் கொண்டாட முன்வந்துள்ளன.

## வைகாசி அனுடத்தை யாவரும் முன்னரே ஏற்றுளர்

வைகாசி அனுடத்தைத் திருவள்ளுவர் திருநாளாக யாம் கொண்டாடுதற்குரிய காரணங்களை எமது கழகத்தின் இரண்டாவது அறிக்கையிலே கூறியுள்ளோம். இந்த அறிக்கை பல பத்திரிகைகளிலே வெளிவந்துள்ளது. வைகாசி அனுடமே வள்ளுவர் திருநாள் என்பதுதான் மறைமலை அடிகள் போன்றோர்

கருத்து என்பதைத் தமிழகப் பெரியார்களே ஏற்றுக் கொண்டுளர். 1935 இல் வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாகக் கொண்டாடிய திருவள்ளுவர் திருநாட் கழகத்தின் அருஞ்செயலை எமது நான்காவது அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளோம். இந்தத் திருவள்ளுவர் திருநாள் விழாவுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்த பெரியாரும் மறைமலை அடிகளேயாவார். இந்த விழாத் தமிழகத்தின் பல இடங்களிலும் நிகழ்ந்தது. இதனைப் பற்றிய பல செய்திகளைத் திருவள்ளுவர் திருநாட் கழகத்தினர் வெளியிட்ட திருவள்ளுவர் நினைவு மலர் குறிப்பிடுகிறதென்றுங் கூறினோம்.

அக்காலத்திலே தமிழ் நாட்டிலிருந்த தமிழ்ப் பேரறிஞர்கள் யாவரும் அந்த ஆண்டில் சாதி, மத, அரசியற் கட்சி வேறுபாடுகளின்றி ஒன்று சேர்ந்து கொண்டாடினார்கள். தமிழ் நாட்டிலுள்ள பல கட்சித் தலைவர்களும்—பெரியார் ஈ. வெ. இராமசாமி நாயக்கர், அறிஞர் சி. என். அண்ணாத்துரை முதலியோருங் கூட—அவ்வாண்டில் நடைபெற்ற கொண்டாட்டங்களிலே கலந்து கொண்டனர். அன்பர் விசுவநாதம் அப்பொழுது அந்த விழா நாளை வேண்டாம் என்று கூறியதாகவோ தை முதல் நாளைத்தான் கொண்டாட வேண்டுமென்று கூறியதாகவோ அறிய முடியவில்லை; அவர் கூறியிருக்க மாட்டார் என்றே நாம் கருதுகிறோம். அப்பொழுது தை முதல்நாளிலேதான் வளளுவர் திரு நாளைக் கொண்டாட வேண்டுமெனும் புதுக் கருத்து மரபு வழி வந்த வைகாசி அனுட நாளுக்கு மாறாகத் தோன்றவில்லை. அவ்வாண்டிலே வைகாசி அனுடத்தைத் தமிழ் மக்கள் கொண்டாடியபொழுது எவ்வித கருத்து வேற்றுமையும் ஏற்படவில்லை என்பதை அவ்வாண்டு வைகாசித் திங்களில் ஒரு பத்திரிகையில் வெளிவந்த பின்வருஞ் செய்தி உறுதிப்படுத்துகிறது. "சென்னையில் விழா நடந்தது போல் சென்னை மாகாணத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பல ஊர்களிலும் திருவள்ளுவர் திருநாள் மிகவும் சிறப்பாகவும் எத்தகைய வேறுபாடின்றியும் கொண்டாடப் பட்டது."

## வேற்றுமைகளை நீக்குவோம்

எல்லாக் கட்சியினரையும் எல்லா மதத்தினரையும் ஒன்று படுத்திய பெருமை இத்திருவள்ளுவர் திருநாளுக்கு அப்பொழுது இருந்ததென்பதை அறியும்பொழுது தமிழைப் பேசும் மக்கள் யாவரும் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைவார்கள். இப்பொழுது இந்தத் திருநாளுக்குக்கூட யாவரையும் ஒன்றுபடுத்தும் ஆற்றல் இல்லாமற் போய்விட்டதோ என்று சந்தேகப்படுதற்கு அன்பர் விசுவநாதம் அவர்களுடைய கூற்றுக்களும் 'வைகாசி அனுடம் வேண்டாம் மாசி உத்தரமே வேண்டுமென்ற' பூசலைக் கிளப்பிய இரண்டொருவர் கூச்சலுமே சான்றாகும். தமிழ் மக்களிடையே கருத்து வேறுபாடு இருப்பது இயற்கையே எனினும் தமிழினத்தின் நன்மைக்காக, முன்னோர் காட்டிய நல்வழியில் நின்று,

தமிழினத்துக்குப் பெருமையளிக்கும் புலவரைப் போற்றும் பெரும் முயற்சியிலே வேறுபாடுகளைக் கைவிட்டு ஒற்றுமையாக ஈடுபட வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும். 'தமிழினத் துக்குத் தொண்டு செய்கிறோம், என்று கூறுகிறவர்கள் ஒற்றுமைக்கு வழிகாட்ட வேண்டுமேயன்றி, வேற்றுமையை உண்டாக்கும் முறையில் பேசுதலோ எழுதுதலோ கூடா தென்பதை அன்பர் விசுவநாதம் அவர்களும் ஏற்றுக் கொள்வார்கள்.

நம்முன்னோர் தம் பெருஞ் செயலைப் பின்பற்றாமலும், சிறந்த மரபைத் தழுவாமலும், நம்மினத்தின் ஒற்றுமையைச் சிதைத் துப் பழியையும் அழிவையும் தேடிக்கொள்ளும் நிலைமைக்கு நாம் வந்து விட்டோம். இந்த நிலைமையை மாற்ற இனியாவது யாம் எல்லோரும் முயலல் வேண்டும்.

## நிலைத்து விட்டநாளை மாற்றுதல் மரபாகாது

1935ஆம் ஆண்டிற் போலவே 1936ஆம் ஆண்டிலும் வைகாசி அனுடத்தைப் பல திருவள்ளுவர் கழகங்களும் சில சங்கங்களும் கொண்டாடியுள. சென்னையிலே திருவள்ளுவர் திரு நாட் கழகம் நடத்திய விழாவுக்கு டாக்டர் உ. வே. சாமிநா தையரும், தென்காசித் திருவள்ளுவர் கழகம் நடத்திய விழா வுக்குத் திருவள்ளுவர் திருநாட் கழகத் தலைவர் வி. கலியாண சுந்தரனாரும், கோவைத் தமிழ்ச் சங்கத்தின் விழாவுக்குத் துடிசை கிழார் அ. சிதம்பரனாரும் தலைமை தாங்கினர். 1937ஆம் ஆண்டில் திருவள்ளுவர் திரு நாட் கழகத்தின் விழா பாகனேரி யில் கோவை வழக்கறிஞர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் தலைமையில் நடந்தது.

தமிழ் நாட்டிலே இந்த நாள் நன்கு நிலைத்து விட்டது என் பதைச் செந்தமிழ்ச் செல்வி 1940ஆம் ஆண்டுப் பங்குனி மாதப் பரலிற் காணப்படும் பின் வரும் செய்தி புலப்படுத்துகிறது.

"1935ஆம் ஆண்டு சென்னைத் திருவள்ளுவர் திருநாட் கழகத்தார் சிறப்பாகத் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடித் தமிழ் நாட்டிலே புலவரைப் போற்றும் புதியதோர் உணர்ச்சியை எழுப்புவித்தனர். அது முதல் ஒவ்வோராண்டும் திருவள்ளுவர் திருநாள் செந்தமிழ் நாட்டிற் பல ஊர்களிலே தவறாமற் கொண் டாடப்பட்டு வருகின்றது."

வைகாசி அனுடத்தைத் திருவள்ளுவர் கழகங்கள் கொண் டாடி வருகின்றன என்பதைத் தமிழ் நாட்டுப் பேரறிஞர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களும் எடுத்துக் காட்டியுளர். அவரை முதற்றலைவராகக் கொண்ட தென்காசித் திருவள்ளுவர் கழகம் 1927 ஆம் ஆண்டிற்றொடங்கிச், சென்ற 26 ஆண்டுகளாக இந்த நாளையிடையீடுபடாமற் கொண்டாடி வந்துளது. அன்பர் விசுவநாதம் அவர்களும், இப்பொழுது தமிழ் நாட்டிலே திருக் குறளைப்போற்ற முற்பட்டுள்ள பலரும், யாமுங்கூடத் திருவள்ளு

வர் திருநாளைப் போற்ற முயலுவதற்கு முன்னர் திருவள்ளுவர், திருக்குறள் எனும் பெயர்களோடு கழகங்களைத் தொடக்கி நடத்திய நன் மக்கள்—திருவள்ளுவர் திருநாட் கழகம் என்ற பெரும் பெயருடன் ஒரு கழகத்தைத் தொடக்கிய தமிழ்ப் பேரறிஞர்கள் போற்றிவந்த நாளைக் கொண்டாட வேண்டாம் என்று தமிழ்ப் பகைவர்களும் துணிந்துகூற மாட்டார்கள். தமிழுக்கும், தமிழினத்துக்கும் தமிழகத்துக்கும் உண்மையிலேயே பெருமையளிக்க விரும்பும் எவரேனும் இந்த நாளைவிட்டு விடுங்கள் என்று கூறுவார்களா ?

## திருமயிலைக் கோயிலுங் கொண்டாடுகிறது

இன்னும் திருமயிலையிலே திருவள்ளுவர் கோயில் ஒன்று இருப்பதை யாவரும் அறிவர். அறிவிலும் வீரத்திலும் கற்பிலும் சிறந்தோரைத் தெய்வங்களாகப் போற்றுவதும் தமிழ் மரபேயாகும். தெய்வப் புலவருக்காகத் திருமயிலையில் நிறுவப்பட்ட கோயிலைப் பற்றி மறைமலையடிகள் பின்வருமாறு கூறியுள்ளார்.

" இன்றும் அவ்விருப்பை மரமும், அவர் தோன்றிய குடிலின் அடையாளமாக அம்மரத்தின் அருகே அவரது திருவுருவம் நிறுத்திய திருக்கோயிலொன்றுந் திருமயிலையிலிருக்கின்றன."

1837 ஆம் ஆண்டிலே திருத்தணிகைச் சரவணப் பெருமாள் ஐயர் பதிப்பித்த திருக்குறள் பதிப்பிலும் இக்கோயிலைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. இந்தக் கோயிலும் வைகாசி அனுடத்தையே வள்ளுவர் திருநாளாகக் கொண்டாடி வருகிறது.

## நாள்பற்றிய பல கருத்துக்கள்

வைகாசி அனுடத்துக்கு மாறுக அன்பர் விசுவநாதம் கூறும் காரணங்களை ஆராய்தற்கு முன்னர் திருவள்ளுவர் திருநாள் பற்றி அன்பர்கள் பலர் கொண்டுள்ள கருத்துக்களை எடுத்துக் காட்டுதல் பொருத்தம் உடைத்து. இவற்றுள்ளே பலவற்றைத் திருவள்ளுவர் ஆண்டு 1984, மாசி 19-இல் யாம் வெளியிட்ட எமது கழகத்தின் இரண்டாவது அறிக்கையிலே பின்வருமாறு குறிப்பிட்டும் உள்ளோம்.

" அன்பர்கள் சிலர், இந்த இரு நாளையும், மாசி உத்தரத்தையும், வைகாசி அனுடத்தையும், கொண்டாடினுலென்ன? என்றும் இவற்றுள் ஒரு நாளை அவர் தோன்றிய நாளாகவும், மற்றதை மறைந்த நாளாகவும் கொள்ளுதல் கூடாதோ ? என்றும், இந்த இரு நாட்களையும் விட்டு விட்டு, வேறொரு நாளைக் கொண்டாடத் தொடங்கினுல் என்ன ? என்றும், வைகாசி மாதத்தில் ஒரு நட்சத்திரத்தை ஏன் கொள்ள வேண்டும், ஒரு திகதியைக் கொண்டானுலென்ன? என்றும் திருவள்ளுவர் ஆண்டைத் தை மாதம் முதலாம் நாளிலிருந்து கணிக்கிறோம்; ஆதலின் அந்த நாளையே கொண்டாடினுலென்ன ? என்றும் இன்னும் பலவாறும் எழுதியுள்ளர்."

இந்த அறிக்கையை வெளியிட்ட பின்னரும் அன்பர்கள் சிலர் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். திருவள்ளுவர் திருக்குறளை அரங்கேற்றிய நாள் வைகாசி விசாகமாதலின் அதனைக் கொண்டாடுதல் நல்லது என்கிறார் ஒருவர். ஆண்டின் தொடக்கத்தில் தை முதல் நாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடு கிறோம், ஆகையால் ஆடிப் பெருக்குடன் ஒரு நாளை யூலை மாதத்தில் வள்ளுவர் திருநாளாகத் தமிழினத்தின் பெருநாளா கக் கொண்டாடுதலும் நல்லது என்கின்றனர் சிலர்.

## வைகாசி அனுடத்தின் சிறப்புக்குரிய காரணங்கள்

இவ்வாறு திருவள்ளுவர் திருநாள் பற்றிப் பல்வேறு கருத் துக்கள் நம்மிடையே இருக்கின்றன. இந்நிலைமையில் யாவரும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக ஒரு நாளைத் தெரிந்துகொள்ளுதல் இயலாதென்பதைச் சிறாரும் அறிவர். எனினும் யாவரையும் ஒன்றுபட்டுக் கொண்டாடச் செய்வதற்காக இவற்றுள் மிகப் பொருத்தமான ஒரு நாளைக் கொண்டாடச் சொன்னால் அதற்கு மாறுபட்டகருத்து உடையவர்கள் யாவரும் தமிழினத்தின் ஒற்று மையைக் கருதிவிட்டுக் கொடுத்தல் செய்யத்தக்கதே. இதைத்தான் செய்யுமாறு வைகாசி அனுடத்துக்கு மாறான கருத்து உடையவர்கள் யாவரை யும் கேட்டுள்ளோம். இந்த நாளை யாம் கொண்டாடுமாறு கேட்ப தற்குரிய காரணங்களை மீண்டும் தொகுத்து ஈண்டுத் தருகிறோம். நடு நிலைமையுடன் ஆராய்வார் யாவரும் இவற்றைத் தக்க காரணங்களெனவே கொள்வர்.

(1) பல ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் இதனைக் கொண் டாடி வந்துள்ளனர்.

(2) 1935இல் திருவள்ளுவர் திருநாட் கழகத்தினர் இத னைக் கொண்டாடினர். அவ்வாண்டிலே அவர்களின் கேள்விப் படி இந்த நாள் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் கொண்டா டப்பட்டது.

(3) மறைமலையடிகள், கலியாணசுந்தரனார், வேங்கடசாமி நாட்டார் முதலிய தமிழ்ப் பேரறிஞர்களுடைய ஆதரவைப் பெற்றுள்ளது.

(4) கால் நூற்றாண்டுக்கு மேலாக இடையீடின்றித் தமிழ கத்துள்ள திருவள்ளுவர் கழகங்களாற் கொண்டாடப்பட்டு வரு கிறது.

(5) திருமயிலைத் திருவள்ளுவர் கோயிலிலும் பல்லாண்டு களாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

(6) திருவள்ளுவர் தொடர் ஆண்டை நிலைநிறுத்தவும் திருக்குறளின் கருத்துக்களைப் பரப்பவும், திருக்குறள் நாட் குறிப்பை 1922 இலேயே வெளியிடவும் முயன்ற சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் போற்றப்பட்டுள்ளது.

(7) மேற்படி கழகப் பஞ்சாங்கத்திலும், பிற பஞ்சாங்கங்களிலும் குறிக்கப்பட்டு வருகிறது.

(8) சென்ற ஆண்டிலே தமிழ் மக்கள் வாழும் இடமெங்கும் நூற்றுக்கணக்கான சங்கங்களாற் கொண்டாடப்பட்டுளது.

(9) சென்னை, திருச்சி, கொழும்பு, சிங்கப்பூர் வானொலி நிலையங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) தமிழ் மக்கள் வாழும் நாடுகளிலுள்ள பல கட்சிகளையுஞ் சார்ந்த நாற்பதுக்கு மேற்பட்ட பத்திரிகைகளினால் ஆதரிக்கப்பட்டுளது.

(11) இப்பொழுது தமிழகத்திலும் பிற நாடுகளிலும் வாழும் பல தமிழ்ப் பேரறிஞர்களின் ஆதரவையும் பெற்றுளது.

(12) இந்நாள் நட்சத்திரமாக இருப்பதால் தைத் திங்கள் முதல் நாளை—சங்கிராந்தி நாளை—ஏற்றுக் கொண்டவர்கள் யாவரும் எவ்வித தடையுமின்றி ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவும், நம் முன்னோர் தம் கொள்கையைத் தழுவியதாகவும் இருக்கிறது.

(13) இலங்கையில் அரசினர் விடுமுறை நாளாகவும் அமைந்துளது.

## திருவள்ளுவர் தொடர் ஆண்டு.

அன்பர் விசுவநாதம் குறிப்பிடும் திருவள்ளுவர் தொடராண்டு தமிழ் நாட்டிலே நிலைத்துவிட்டது என்பதை யாவரும் மறுக்கமாட்டார்கள்; இதனை அழிக்க இனி எவராலும் முடியாது. தெய்வப் புலவர் எனத் தமிழ் மக்கள் போற்றும் திருவள்ளுவர்க்குப் பெருமையளிக்கும் முறையில் இத்தொடராண்டை ஏற்படுத்திய பெருமையை மதித்துப் போற்ற வேண்டியதும், இந்தத் தொடராண்டையே வழங்கவேண்டியதும் தம்மைத் தமிழர் என்று கூறும் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

தமிழ்த் திருநாளெனவும், தமிழர் திருநாளெனவும், பொங்கற் புதுநாள் எனவும் பலவாறு போற்றப்படும் தைத்திங்கள் முதல் நாளிலிருந்து திருவள்ளுவர் ஆண்டைத் தொடங்குவது பொருத்தமானதே. ஆனால், திருவள்ளுவர் ஆண்டின் முதல் நாளாகிய தைமுதல் நாளிற்றான் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாட வேண்டுமென்று கூறுவது மரபுக்கு மாறானது; திருவள்ளுவர் ஆண்டை நிலைநாட்டிய மறைமலையடிகள் போன்றார் கருத்துக்கும் மாறானது.

## தமிழ்த் திருநாள்

தை முதல் நாள் தமிழ்த் திருநாள் என்றும், தமிழர் திருநாளென்றும், தமிழர் தம் புத்தாண்டு நாள் என்றும், பொங்கற்றிருநாள் என்றும், மகர சங்கிராந்திப் பண்டிகை என்றும், உத்தராயண புண்ணிய காலம் என்றும் பலவாறு போற்றப்படுகின்றது. இந்தக் காரணங்களாற் போற்றப்படும் திருநாளையே வள்ளுவர் திருநாளாகவும் போற்றி

னல் வள்ளுவருக்குரிய தனி நாளாக இதனை மக்கள் யாவருங் கருதமாட்டார்கள். பெரும்பாலும் தை முதல் நாள் பொங்கற் றிருநாள் என்பது தான் தமிழ் மக்களிடையே திருவள்ளுவர் தொடர் ஆண்டை வழங்கத் தொடங்குதற்கு முன்னரும், தமிழர் புத்தாண்டு நாளைச் சிலர் கொண்டாடுதற்கு முன்னரும், நிலைத்துள்ளகருத்தாகும். இன்னும் பொங்கற்றிருநாளைக் கொண்டாடவேண்டுமென்று அறிக்கைகள்விட்டு ஆர்வத்தை உண்டாக்கியவர்கள் சென்னைத் தமிழறிஞர் கழகத்தாராவர். இவர்கள் 1941 ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் விட்ட அறிக்கையிலே தை முதல் வாரத்தைத் தமிழ் வாரமாகவுங் கொண்டாடுமாறு கேட்டுள்ளனர். இந்த அறிக்கையிலே ஐந்தாம் நாளைப் புலவர் தம் திருநாளாகக் கொண்டாட வேண்டும் என்றுங் குறிப்பிட்டுளர்.

இந்த வாரத்தைக் கொண்டாடிய இரண்டொரு சங்கங்கள் இந்த வாரத்தில் ஒரு நாளை வள்ளுவர் திருநாளாகவும் பின்னர் கொண்டாடியுளவேயன்றி முதல் நாளை - தைப்பொங்கற் புது நாளை வள்ளுவர் திருநாளாகக் கொண்டாடவில்லை.

இத்தமிழ்வாரக் கொண்டாட்டங்களிலே பங்குபற்றிய பல அறிஞர்கள் இப்பொழுது எமது கழகத்தின் முயற்சியை ஆதரித்து வைகாசி அனுடத்தையே வள்ளுவர் திருநாளாகக் கொண்டாட வேண்டுமென்றும் எழுதியுளர்:

தெய்வப் புலவராகவும், உலகப் புலவராகவும் விளங்கும் திருவள்ளுவரைக் கொண்டாடுதற்குத் தனிச்சிறப்புடையதொரு நாள் வேண்டும் என்பதை அறிஞர்கள் யாவரும் ஏற்றுக் கொள்வர். ஆகவே பல காரணங்களுக்காகப் போற்றப்படும் தைத் திங்கள் நாளை வள்ளுவர் திருநாளாகக் கொள்ளாது பல ஆண்டுகளாகத் திருவள்ளுவருக்கே உரியதாகக் கொண்டாப்பட்ட வைகாசி அனுட நாளைக் கொண்டாடுதல் எவ்வாற்ருனும் ஏற்றமுடையதே. திருவள்ளுவருடைய பெருமையையும் நினைவையும் தமிழ் மக்களுடைய உள்ளத்தில் நிலைநாட்டுதற்கு இதுவே மிகப் பொருத்தமான நாளாகும்.

## நட்சத்திரத்தை வெறுக்கவேண்டாம்

இனித் தனித் தமிழ்க் கொள்கையுடையார் அனுடம் வடமொழி என்று வெறுப்படைய வேண்டியதில்லை, அனுடத்தைப் பனைநாள் [புறநானூறு 234] என்று கூறிக் கொண்டாடுமாறு இவர்களைக் கேட்டுக்கொள்கிருேம். நாள்களையும் கோள்களையும் அடிப்படையாகக் கொண்டு கூறப்படும் சோதிடப் பலன்களை மக்கள் வெறுக்கலாம் ; வேண்டாம் என்று ஒதுக்கலாம். ஆனல் சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள்முதலியவற்றைத் தமிழருக்குரியனவல்ல என்று கருதி அவற்றை வெறுத்தலும், வேண்டாம் என்று கூறுதலும் அறிவுடையார் செயலாகாது. பழந்தமிழ்

மக்களின் கொள்கைகளையும் வரலாறுகளையும் நன்கு அறிந்தவர்கள் நட்சத்திரங்களிலேயே விழாக்களைக் கொண்டாட வேண்டுமென்பர். சங்ககாலத் தமிழ் மக்கள் நட்சத்திரங்களிலேயே விழாக்களைக் கொண்டாடியுளர். (அகம் 441, 86, பரிபாடல் 11, இறையனார் அகப்பொருளுரை)

உலகத்திலே பழம்பெரும் நாகரிகமுடையவர்களாயிருந்த பல நாட்டு மக்களும் நாள், மாதம், ஆண்டு முதலியவற்றைக் கணிக்க முற்பட்டிருக்கிறார்கள். இதற்குச் சூரியன் சந்திரன் முதலிய கோள்களையும் நட்சத்திரங்களையும் பூமியின் சுழற்சியையுமே ஆதாரமாகக் கொண்டிருக்கிறார்கள்; இதனை வானநூற் கலையாகவும் வளர்த்திருக்கிறார்கள். நமது தமிழ் மக்களும் இந்த வானநூற் புலமையிலே மிக்கிருந்தார்கள் என்பதைச் சங்க நூல்கள் நமக்குக் காட்டுகின்றன. பண்டைத் தமிழரசர்கள் தாம் பிறந்த நட்சத்திரத்தைக் கொண்டாடி வந்தனர் என்பதற்குத் தொல்காப்பியமே சான்று பகர்கிறது. முத்தொள்ளாயிரம் முதலிய நூல்களின் பாடல்களில் தமிழ்நாட்டு முடியுடை மூவேந்தர்களுக்கும் உரியனவாகச் சில நட்சத்திரங்கள் கூறப்படுகின்றன. இவற்றைத் தொல்காப்பியப் புறத்திணையியல் 36ஆம் சூத்திர உரையிற் காண்க,

## தமிழரின் வானநூற் புலமை

வானநூற் புலமையிலே சிறந்து விளங்கிய அறிஞர்களைக் கணியர் என நம் முன்னோர் வழங்கினர். இத்தனித் தமிழ்ச் சொல்லின் பொருளைக் "கற்றோன்றி மண் தோன்றாக் காலத்தே முற்றோன்றி மூத்த குடி" எனத் தமிழர் பழமையைக் கூறும் புறப்பொருள் வெண்பாமாலை விளக்குகிறது. (பு. பொ. வெ. 8-20) இந்தக் கணியருடைய கணிக்கும் ஆற்றலைக் கேட்போரெல்லாம் வியப்பெய்தத்தக்க முறையிலே விளக்கிக் காட்டும் புறநானூற்றடிகளை ஈண்டுத் தருகிறோம்.

> "செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
> பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும் வளிதிரி தருதிசையும்
> வறிது நிலைஇய காயமும் என்றிவை
> சென்றளந் தறிந்தோர் போல என்றும்
> இனைத் தென் போரும் உளரே."

சங்க காலப் புலவர்கள் பலர் கணியர்களாக இருந்திருக்கிறார்கள். தமிழர்கள் யாவரும் கூறிக் கூறிப் பெருமிதம் அடையும், "யாதும் ஊரே யாவருங் கேளிர்" எனும் செய்யுளைப் பாடிய பூங்குன்றனாரும் கணியன் பூங்குன்றனார் எனவே வழங்கப்படுகிறார்.

நட்சத்திரத்தைக் கொண்டாடுவது தான் தமிழ் மரபு எனவும் திதி, திகதிகளைக் கொண்டாடுவது பிறநாட்டார் மரபு எனவும் அறிஞர்கள் கருதுகின்றனர். வானநூற் குறியீட்டுச் சொற்கள் தமிழிலே நிறையவுள. கோள்களையும் இராசிகளையும் நட்சத்திரங்களையுங் குறிக்கும் தமிழ்ச் சொற்கள் பலவாகும். அனுடத்தைக் குறிப்பதற்கு மாத்திரம் பனை, புல், தேள், நட்பு நாள் முதலிய பல சொற்களுள.

ஆகவே நாள்களையும் கோள்களையும் ஆதாரமாகக்கொண்டு காலத்தைக் கணிப்பதிலும் நம் முன்னோர் சிறந்து விளங்கினர் என்பதை நாம் மறத்தல் கூடாது. தை மாதம் முதல் நாளை மாத்திரமன்றி ஏனைய தமிழ் மாதங்களின் முதல் நாளையுங் கணித்து அறியாமல் – பஞ்சாங்கங்களின் உதவியில்லாமல்— அறிந்துகொள்ளுதல் முடியாது. இந்த நாட்களை எல்லாம் குறிக்கும் நாட் குறிப்புக்களையும், நாட் காட்டிகளையும் அமைப்போர் பஞ்சாங்கத்தின் உதவியின்றி இவற்றைக் குறித்தல் முடியவே முடியாது. அன்பர் விசுவநாதம் அவர்களுடைய மொழியிற் கூறினால் பஞ்சாங்கத்திலே “ தேடாமல் ” குறிக்க முடியாது.

ஆண்டுதோறும் இவ்வளவு சிரமப்படுகிறவர்களுக்கு வைகாசி மாதத்தில் அனுட நட்சத்திரம் எப்பொழுது என்பதை யறிந்து முன்னரே நாட்குறிப்புக்களிலும், நாட்காட்டிகளிலுங் குறித்தல் எவ்விதமான சிரமத்தையும் அளிக்காது. நாட் குறிப்புக்களையும் நாட்காட்டிகளையும் பஞ்சாங்கங்களையும் வெளியிடுவோர் யாவரையும் ஆண்டுதோறும் வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாகக் குறித்துவிடும்படி கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு செய்யின் அவர்கள் தொல்காப்பியர் காலத் தமிழர் தம் கொள்கையை இன்றும் என்றும் நிலைக்கச் செய்தவர்கள் ஆவார்கள். அன்றியும் வள்ளுவர் திருநாளை ஆண்டுதோறும் யாவரும் இலகுவில் அறிதற்கும் உதவி செய்தவர்களாவார்கள்.

## முடிபுரை

இதுகாறுங் கூறியவற்றால், வள்ளுவர் ஆண்டின் முதல் நாளாகிய பொங்கற் புதுநாள் வெவ்வேறு காரணங்களாற் போற்றப்படுவதால் வள்ளுவருக்கு மாத்திரமே உரியதாகக் கொண்டாடப்படுவதற்கு வேறு ஒரு நாள் வேண்டுமென்பதும், நட்சத்திரத்தைக் கொண்டாடுவது பழந்தமிழர் கொள்கையென்பதும், தமிழ் மாதங்களின் முதற் றிகதியைத் தேடி யறிந்து நாட்காட்டிகளையும், நாட் குறிப்புகளையும் அமைப்போர் எவ்வித சிரமுமின்றி வைகாசி அனுடம் இன்ன நாள் என்பதைக் குறிக்கலாமென்பதும், தமிழ்த் தை மாதத்தின் முதல் நாளை ஏற்றுக் கொண்டவர்கள் எவரும் நட்சத்திரம் வேண்டாம், காலக் கணிதம் (பஞ்சாங்கம்) வேண்டாம் என்று கூறல் முடியாது என்பதும், வைகாசி அனுடமே பதின் மூன்று காரணங்களால் திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடத்தக்க தென்பதும் நன்கு விளக்கப்பட்டன.

ஆகவே தமிழைப் பேசும் மக்கள் யாவரையும் இந்நாளையே திருவள்ளுவர் திருநாளாக எவ்வித மாறுபாடுமின்றி ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு யாவரும் கொண்டாடினால், திருவள்ளுவர் திருநாளை அரசினர் விடுமுறை நாளாக்க எந்த அரசாங்கமும் பின்னிற்காதன்றோ ! வாழ்க தமிழ் மறை ! வாழ்க உலகம் !!

# திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடிய சங்கங்கள்

சென்ற இரண்டாண்டுகளில் வைகாசி அனுடத்தைத் திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடிய சங்கங்கள் பலப்பலவாகும். இவற்றுளே கொண்டாடியதாகவும், கொண்டாடுவதாகவும், எமக்கு அறிவித்தவற்றையும், யாம் அறிந்தவற்றையும் மாத்திரமே இங்கே குறிப்பிடுகிறோம்.

## இலங்கை

**யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்.**

தலைவர் ---அமைச்சர் உயர் திரு. சு. நடேசன், பேச்சாளர்கள்--திரு அ. செ. சுந்தரராச ஐயங்கார், திரு வை. இராமசாமி.

**கொழும்பு சைவ மங்கையர் கழகமும், கொழும்பு விவேகானந்த சபையும், இலங்கை வானொலித் தமிழ்க்கலை மன்றமும்.**

தலைவர் --- திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை, சி. சி. எஸ். பேச்சாளர்கள் - வித்துவான் க. வேந்தனர், திருவாளர்கள் மு. கணபதிப்பிள்ளை, சு. பொன்னம்பலம், திருமதி பு. சச்சிதானந்தம் பி. ஏ.,

**கொழும்பு விவேகானந்த சபை.**

தலைவர்கள் -- திரு. வே. அ. கந்தையா, பி. எஸ் ஸி., திரு கோ. ஆழ்வாப்பிள்ளை, சி. சி. எஸ். பேச்சாளர்கள் - திருவாளர்கள் க. இராமச்சந்திரா, சோ. நடராசன் பி. ஏ., வித்துவான் க. வேந்தனர், வித்துவான். கு. அருணசலக் கவுண்டர், திரு. ஆ. முத்துசிவன் எம். ஏ.,

**கொழும்பு கொம்பெனித் தெரு, சைவ முன்னேற்றச் சங்கம்**

தலைவர் - திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா நீதிமன்றத் தலைவர்; பேச்சாளர்கள் ---திரு வ. செல்லத்துரை, திரு க. ஆறுமுகம்.

**கொழும்பு, திருவள்ளுவர் நாடக சபா.**

தலைவர்--- ரா. ச. பொன்னம்பலம்; பேச்சாளர்கள் பலர்.

**நெல்வீதி, அரசினர் மத்திய கல்லூரித் தமிழ் மன்றம்.**

தலைவர் --- திரு. எம். பாலசுந்தரம்; பேச்சாளர் பலர்,

**பாரதி கழகம்.**

தலைவர்--திரு. கு. இராமச்சந்திரன் ;பேச்சாளர் பலர்.

**உனுப்பிட்டி, இந்து சன்மார்க்க சங்கம்.**

தலைவர்---திரு. த. மயில்வாகனம்; பேச்சாளர்கள் - திருவாளர்கள்- இ. சி. சோதிநாதன், பெருமாள் பிள்ளை, எஸ். பாலக்கிருஷ்ணன், திருமதி பா. இலட்சுமணன் பி. எ.

**கலாநிதி மாணவர் மன்றம், கொழும்பு.**

தலைவர்-திரு. ஆர். ராஜாமணி, பேச்சாளர் பலர்.

**மாணவர் கலாபிவிருத்தி மன்றமும், பொதுமறை மாணவர் மன்றமும்.**

தலைவர்-திரு. எம். பாலசுந்தரம்; பேச்சாளர்கள் - பண்டிதர் அமரகவி, பண்டிதர் திரு. வி. ஆறுமுகம், ஆசிரியர் எம். கந்தசாமி, செல்வி பி. இராஜேஸ்வரி, திரு ஆர். தம்பிராஜா, செல்வி எம். கே. காந்தி, செல்வன் அற்புதராஜா குரூஸ்.

**களுத்துறைக் கதிர்காமத் தொண்டர் சபை.**

தலைவர்-திரு. க. சிதம்பரப் பிள்ளை; பேச்சாளர் - பண்டிதர் க. மயில்வாகனம்.

**காந்தி கழகம், காலி.**

தலைவர்-திரு. மீ. கருப்பையா பிள்ளை; பேச்சாளர்கள்-திருவாளர்கள் கு. வி. செல்லத்துரை, வே. தியாகராஜவேல், ச. சிவராமன்.

**காந்தி சங்கம், கண்டி.**

தலைவர்-திரு. ஏ. தெட்சணாமூர்த்தி; பேச்சாளர்கள் - திருவாளர்கள் எஸ். வி. கதிரேசன், கே. அண்ணாமலை, சைவப் புலவர் வி. எஸ். சுந்தரலிங்கம், பேராசிரியர் வி. செல்வநாயகம்.

**பணிய கணக்கு இராப் பள்ளிக்கூட மாணவர் சங்கம்.**

தலைவர்-திரு பழம்நீ; பேச்சாளர்கள்-திருவாளர்கள் சோமசந்திரன், சுந்தரலிங்கம், சங்கிலி பொன்னுத்துரை, சுப்பையா.

**ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கப் பாடசாலை மாணவர் மன்றம், கல்முனை.**

தலைவர் - சுவாமி கூடஸ்தானந்தா; பேச்சாளர்கள் - திருவாளர்கள் கே. ஆர். அருளையா, மு. கிருஷ்ண பிள்ளை, எஸ். கே. தெய்வநாயகம், பண்டிதர் ச. பூபால பிள்ளை.

**ஏறாவூர் இளமெழுத்தாளர் சங்கம்.**

தலைவர்-திரு. பாலச்சந்திரன் டி. ஆர். ஓ.; பேச்சாளர்கள் திருவாளர்கள் கோ. கோணேச பிள்ளை, மி. மு. சாலி, மு. அகமது லெவ்வை, பண்டிதர் த. கிருஷ்ணபிள்ளை.

**ஆண்டி மடு இறக்காமம் மறுமலர்ச்சி மன்றம்.**

தலைவர்-டாக்டர் பரமானந்தம்; பேச்சளர் பலர்;

**நல்லூர் இளைஞர் கலாபிவிருத்திச் சங்கம்.**

தலைவர் - திரு. ச. முத்துலிங்கம்; பேச்சாளர்கள் - திருவாளர்கள் வ. முருகேசு, போ. இராமசாமி, அ. செல்லத்துரை, ந. சிவசுப்பிரமணியம், ந. ஜெயபால சிங்கம், செ. சங்கர லிங்கம், மு. ஆலால சுந்தரம்.

**நல்லூர் காமாட்சியம்பாள் சன சமூக நிலையம்.**

தலைவர்-முதலியார் சி. முத்துத்தம்பி; பேச்சாளர்கள்-திருவாளர்கள் சி. வன்னிய சிங்கம் எம். பி., ரீ. முருகேச பிள்ளை, புதுமை லோலன்.

•

**நல்லூர் சங்கிலியன் மன்றம்.**

தலைவர்- என். வி. சிவப்பிரகாசம்; பேச்சாளர் பலர்.

**அச்சுவேலி வடக்கு ஸ்ரீ முருகன் சன சமூக நிலையம்.**

தலைவர்-திரு. எஸ். வீரசிங்கம்; பேச்சாளர்கள் - திருவாளர்கள் கே. துரை ரத்தினம் பி. ஏ., ஆர். வி. கந்தையா, என். சிவபாதம், கே. பாலசுந்தரம்.

**அச்சுவேலி கலாஜோதி சனசமூக நிலையம்.**

தலைவர் - திரு. எஸ். மயில்வாகனம்; பேச்சாளர் - திரு. பி. சண்முகம்.

**அச்சுவேலி தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வர சன சமூக நிலைய வள்ளுவர் கழகம்.**

தலைவர்-திரு. சி. சிவசம்பு; பேச்சாளர் - திரு. த. கிருஷ்ண ராஜா.

**பண்ணாகம் வடக்கு அம்பாள் சன சமூக கிராம அபிவிருத்திச் சங்கம்.**

தலைவர்-திரு. சி. செல்வத்துரை; பேச்சாளர்கள் - பண்டிதர்கள் அ. ஆறுமுகம், அ. சண்முகநாதன், வித்துவான் பொன். முத்துக்குமரன் பி. ஓ. எல்.

**குப்பிழான் சன சமூக நிலையம்.**

தலைவர்-பொ. சுந்தர சர்மா; பேச்சாளர்கள்-பண்டிதர்கள் வே. சங்கரப் பிள்ளை, க. பொன்னுத்துரை, இ. நமச்சிவாயம், திரு. நம. சிவப்பிரகாசம்.

**இணுவில் இளந்தாரி கோவில் சன சமூக நிலையம்.**

தலைவர்-நீதியரசர் உயர்திரு. சி. எஸ். பார் குமாரகுல சிங்கம், கியூ.சி.; பேச்சாளர்கள்-திருவாளர்கள் ஆர். என். சிவப் பிரகாசம், வித்துவான் நா. சிவபாத சுந்தரம், செல்வி சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு, திருவாளர்கள் எஸ்.கே. சுப்பிரமணியம், ச. அம்பிகைபாகன் பி. ஏ.

**கரணவாய் தெற்குச் சன சமூகநிலையம்.**

தலைவர்-திரு. ரி. சிவகுருநாதர் ; பேச்சாளர்கள்-ஆசிரியர் கே. மாணிக்கம், பண்டிதர் ஆர். கே. முருகேசு.

**திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்.**

தலைவர்-திரு. ஏ. சுந்தரராஜ ஐயங்கார் பி,ஏ.; பேச்சாளர்கள்-பண்டிதர் மு. சின்னத்தம்பி பி.ஏ., திரு. வ. பொன்னையா பி. ஏ. பி. எச் டி., பண்டிதர் சோ. இளமுருகனார், திரு. அ. கதிரமலை நாதன்.

**திருநெல்வேலி கிழக்கு வைரவ கோவில் வாசல் சமூக சேவைச் சங்கம்.**

பேச்சாளர்-பண்டிதர் சி. பரமேஸ்வரன்.

**கரம்பன் மேற்கு ஆனந்த வாசக சாலை நிலையம்.**

தலைவர்-பண்டிதர் சோ. தியாகராச பிள்ளை ; பேச்சாளர்கள்-ஆசிரியர் ஆ. சபாரத்தினம், செல்வி செ. கமலாதேவி, திரு. ச. சிவசம்பு, எம். ஜோசெப்.

**எருக்கலம்பிட்டி முகமதியா சன சமூக நிலையம்.**

தலைவர்-திரு. கே. எம். சாகுல் கமீது ; பேச்சாளர்கள்-பண்டிதர் ஐ. ஆ. நல்லையா, திருவாளர்கள் ஏ. செய்யதுக் காசிம், அ. மு. அபுபக்கர், மு. அப்துல் கயூம், எஸ். ஏ. எம். மெகையதீன், அப்துல் காதர்.

**தையிட்டி சன சமூக நிலையம்.**

தலைவர்-டாக்டர் எஸ். வி. சீனிவாசகம் ; பேச்சாளர்கள்-திருவாளர்கள் வி. வன்னியசிங்கம் எம். பி., கே. பி. முத்தையா, சி. நவரத்தினம், கே. வி. இராசரத்தினம், என். சிவபாதம், நாவேந்தன், வி. பொன்னம்பலம், ஏ. அமிர்தலிங்கம், செல்வி பத்மாபஞ்ச நாதேஸ்வரம்.

**சங்கானை மறுமலர்ச்சி மன்றம்.**

தலைவர்-பண்டிதர் சி. வேலுப் பிள்ளை. பேச்சாளர் பலர்.

**பரந்தன் மணிவாசக மன்றம்.**

தலைவர்-திரு. க. வைதீஸ்வரக் குருக்கள் ; பேச்சாளர்-திரு. த. க. மகாலிங்கம்.

**மாதகல் இளைஞர் சங்கம்.**

தலைவர்-திரு. வ. கந்தசாமி; பேச்சாளர்கள்-திருவாளர்கள் எம். சபாரத்தினம், கே. பி. முத்தையா, ஈ. மகாதேவா, ரி. திருநாவுக்கரசு, கே. சச்சிதானந்த சிவம், கே. வி. இராசரத்தினம், வி. வி. வையிரமுத்து.

**பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை மாணவர் மன்றம்.**

தலைவர்-பண்டிதர் பொ. கிருஷ்ண பிள்ளை; பேச்சாளர்கள்-வித்துவான் கே. கார்த்திகேசு, திருவாளர்கள்-பி. தெய்வேந்திரன், கே. சிவராமலிங்கம்.

**ஏழாலை மேற்குப் பாரதி சன சமூக நிலையம்.**

தலைவர்-திரு. கி. சபாரத்தினம்; பேச்சாளர்கள்-சென்றர் நாகலிங்கம், பண்டிதர் க. சச்சிதானந்தம், திருமுருகவேள்.

**சரசாலை மத்திய சமூக சேவா சங்கம்.**

தலைவர்-திரு. ச. கைலாய பிள்ளை; பேச்சாளர்கள்-பண்டிதர் க. சிவகுருநாதன், பண்டித மணி சி. கணபதிப் பிள்ளை, திருவாளர்கள் ரி. வி. தியாகராசா, ஜெ. ஈ. வர்ணகுல சிங்கம், அ. அமிர்தலிங்கம் பி. ஏ.

**சரவணைக் கிராம முன்னேற்றச் சங்கம்.**

தலைவர்-சித்தாந்த அறிஞர் திரு. வே. சோமசுந்தரம்; பேச்சாளர்கள் நாகேசுவரி வித்தியாசாலை ஆசிரியர்களும் மாணவரும்.

**வேலணை காந்தீய வாலிபர் சங்கம்.**

தலைவர்-பண்டிதர் சு. ஏரம்பு; பேச்சாளர்கள் - பண்டிதர் க. இராசையா, திரு வ. பொன்னம்பலம், திரு எஸ். காராள பிள்ளை.

**நயினாதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை.**

தலைவர்-திரு ச. க. கந்தையா; பேச்சாளர்கள்-திரு வே. கந்தையா, திரு. இ. க. கணபதிப் பிள்ளை.

**ஊரதீவு சன சமூக நிலையம்.**

தலைவர்-திரு சி. நல்லதம்பி; பேச்சாளர்கள்-திருவாளர்கள் ச. சொக்கலிங்கம், சி. நா. பாலசிங்கம், பொ. சபாரத்தினம்.

**மண்டைதீவு இளைஞர் முத்தமிழ் மன்றம்.**

தலைவர்-திரு க. கைலாசபிள்ளை; பேச்சாளர்கள்-திருவாளர்கள் க. சிவஞானம், வி. நவரத்தினம், பொன். அ. கனகசபை, வ. ஆறுமுகம், தி. பஞ்சாட்சரம், பண்டிதர் செ. துரைசிங்கம்.

**திருகோணமலைத் திருவள்ளுவர் கழகம்.**

தலைவர்கள்-ஸ்ரீ சச்சிதானந்த மாதா, திரு என். ஆர். இராஜ வரோதயம், திரு த. ஏகாம்பரம்; பேச்சாளர்கள்-திருவாளர்கள் பொ. கந்தையா, பொ. சுப்பையாபிள்ளை, த. ஏகாம்பரம், பண்டிதர் சி. வைரமுத்து, பண்டிதை செல்வி. சி. இராசலட்சுமி, கழகப் புலவர் பெ. பொ. சிவசேகரம், பண்டிதர் ஆர். வடிவேலு.

**முந்தல் ஸ்ரீ கமலாம்பிகை வித்தியாசாலை.**

தலைவர்-பண்டிதர் மா. மாணிக்கம்; பேச்சாளர்-செல்வி. இ. மகேஸ்வரி;

**கலா வளர்ச்சிக் கழகம், உடப்பு.**

தலைவர் - திரு ந. சிற்றம்பலம்; பேச்சாளர்கள் - ஆசிரியர் திரு சி. பூவடப்பன், திருமதி தெ. தங்கத்துரை அம்மையார், பண்டிதர் திரு மா. மாணிக்கம், செல்வி அ. மகேஸ்வரி, திரு ஐ, ஆ. இராமசுவாமி, திரு அ. பரமநாதர்.

**தம்பிலுவில் சன சமூக நிலையம்.**

தலைவர்-திரு அ, வி. மயில்வாகனம்; பேச்சாளர்கள்-உயர் திரு சுவாமி கூடஸ் தாநந்தஜீ, திரு வி. குமாரசுவாமி, செல்வி க. அருணசலம்.

**அளவெட்டி ச்தானந்த வித்தியாசாலை.**

தலைவர்-திரு இ. முருகேசு; பேச்சாளர்-செ. கதிரவேலு.

**மறவன்புலோ கிராம முன்னேற்றச் சங்கம்**

தலைவர்-திரு நா. பொன்னம்பலம்; பேச்சாளர்-திரு க .கனக சபை.

**களிபுரம் திருவள்ளுவர் விழாச் சபை.**

தலைவர்-தேச ஊழியன் நா. சேனுதிராசா; பேச்சாளர்கள்-திரு சு. சண்முகரத்தினசர்மா, வழக்கறிஞர் வே. நாகலிங்கம், பண்டிதர் சி. கணேசனர்.

**மகாவத்தை அரசினர் பாடசாலைப் பெற்ருர் ஆசிரியர் சங்கம்.**

தலைவர்-திரு இ. திருநாவுக்கரசு பி. எஸ்ஸி. பேச்சாளர்கள்-திருவாளர்கள் அன்பர் பூபதி தாசர், சோ. நடராசன், பி. ஏ, கே. இராமசாமி, கே. எஸ். நடராசன், பி. ஏ, பண்டிதை திருமதி அமிர்தாம்பிகை சதாசிவம், பி. ஏ.

**ஏழாலை மகாஜன சபை,**

தலைவர் திரு. ந. சிவஞான் சுந்தரம், டி. ஆர்.ஓ., பேச்சாளர்கள் திரு. கோ. வைத்திலிங்கம், செல்வி. மகேஸ்வரி சம்

பந்தர், பண்டிதர்கள் ச. இராமச்சந்திரன், ச. பொன்னுத்துரை வித்துவான் க. கி. நடராஜன்.

**அனுராதபுரம் விவேகானந்த சபை.**

தலைவர்- நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை; பேச்சாளர்- திரு. கே. சிவராமலிங்கம், திரு. வி. தில்லைநாதன்.

**அச்சுவேலி கிழக்கு சன சமூக நிலையம்.**

தலைவர்- திரு எஸ். மயில்வாகனம்; பேச்சாளர் பலர்.

**நீர்வேலி, சுப்பிரமணிய சன சமூக நிலையம்.**

பேச்சாளர் திரு. வேலாயுதபிள்ளை,

**கொழும்பு, விவேகானந்த வித்யாலய மாணவர் சங்கம்.**

தலைவர்- திரு. கோ. இ. ராமசாமி சர்மா, பேச்சாளர்கள்-- பண்டிதர் க. சிவகடாட்சம், திரு. இ, சி. சோதிநாதன், செல்வி வி. சின்னதம்பி, திரு ஆ. மயில்வாகனம்.

**திருவள்ளுவர் கழகம் பெருமாள் கோயிலடி (யாழ்ப்பாணம்).**

தலைவர் : பண்டிதர் க, கி. நடராசன் பி.ஓ. எல்.; பேச்சாளர்- வழக்கறிஞர் எம். பாலசுந்தரம், பண்டிதர் ஆ. சின்னத்தம்பி, வழக்கறிஞர் ஏ. அமிர்தலிங்கம், திரு. வன்னியசிங்கம் எம். பி.

**அனுராசபுரத் தமிழ்க் கழகம்.**

தலைவர் : வண. பிதா எவ் ஜே. ஸ்ரானிஸ் லோஸ்; பேச்சாளர்கள் -- திரு. எம். கிருஷ்ணபிள்ளை, பேராசிரியர் கு. அருணுசலக்கவுண்டர்.

**புலோலி நெசவுத் தொழிலாளர் சங்கம்.**

தலைவர் : திரு. பொ. கதிரேசு, பேச்சாளர்: ஆசிரியர் திரு. சிவலிங்கம்.

**புங்குடு தீவு வல்லன் சன சமூக நிலையம்.**

பேச்சாளர்கள்: திருவாளர்கள் த. துரைசிங்கம், க. அம்பலவாணர், பண்டிதர் வீ. வ. நல்லதம்பி,

**கொடிகாமம் பாரதி சன சமூக நிலையம்.**

தலைவர்: மு. கந்தையா; பேச்சாளர்கள்: திருவாளர்கள் க. ஐயாத்தம்பி, ப. கந்தசாமி, க. நடராசா, மு. கதிர்காமு சி. கதிர்வேலு,

**உடுவில் தெற்கு கலைவாணி சன சமூக நிலையமும் இளைஞர் சங்கமும்.**

தலைவர் : திரு. சி. சுப்பிரமணியம் ; பேச்சாளர் பலர்.

**பாலேக்குளி சன சமூக நிலையம் (மன்னர்).**

தலைவர்: திரு. ஏ. யே. காசிநாதர்; பேச்சாளர்-எஸ். யோன் மார்க் ஜே. பி.

**ஓமந்தை கலாநிதிச் சன சமூக நிலையம்.**

பண்டிதர் சே. சிவலிங்கம் பேசினர்.

ஆவரங்கால் கிராம முன்னேற்றச் சங்கம்.

சிலாபம் தமிழ் வளர்ச்சிக் கழகம்.

சங்கானை, தொட்டிலடிச் சன சமூக நிலையம்.

மாத்தளை மகாத்ம காந்தி சபை.

அம்பாரை இந்து சமயக் குழுவினர்.

சுதுமலை சைவமங்கையர் கழகமும் கி. மு. சங்கமும் ச. சமூ. சே. சங்கமும்.

## இந்தியா

**திருவள்ளுவர் ஆலயம், மயிலாப்பூர்.** தலைவர்கள்: திரு சி. இராசகோபாலாச்சாரியார்; திருவாளர்கள் ஓ. பி. ராமசாமி செட்டியார்; சி. நரசிம்மன் எம், ஏ, பி. எல்.; ஆ. கசபதி நாயகர் பி. ஏ., பி. எல்.; வி. சி. பழனிச்சாமிக் கவுண்டர்; சி. சுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்.; எம். மாணிக்கவேலு; பேச்சாளர்கள்: பேராசிரியர்கள் ரா. பி. சேதுப்பிள்ளை, எம். இராசமாணிக்கம், ஈ. கே. நடேச சர்மா, ஏ. கே. பரந்தாமனர், பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார், மூ. ஆ. துரையரங்கசாமி, திருவாளர்கள் ம. பொ. சிவஞானம் எம். எல். சி., கி.வா. ஜகந்நாதன் எம். ஏ., எல். சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ., எல். ரி., வண. ஆ. அருள்தங்கையா, ஆசிரியர் இளவழகனர், இராவ்பகதூர் கே. கோதண்டபாணி பிள்ளை, திருப்புகழ்மணி ரி. எம். கிருஷ்ணசாமி ஐயர்.

**தென் தியாகராஜநகர் திருவள்ளுவர் கழகம்.** தலைவர்: திரு. ரி. எஸ். பழனியப்ப பிள்ளை; பேச்சாளர்கள்: திருவாளர்கள் எம். நடேசமுதலியார் பீ. ஏ., எல். ரி., சே. கிருஷ்ணய்யர் பீ. ஏ., எல். ரி., இராஜசேகரன்.

**தென்காசித் திருவள்ளுவர் கழகம்.** தலைவர்கள்: தெய்வ சிகாமணி அருணசல தேசிக சுவாமிகள், திரு புரிசை சு. முருகேச முதலியார், திரு அ. சீனிவாசராகவன்; பேச்சாளர்கள்:

திருவாளர்கள் ரா. பி. சேதுப்பிள்ளை, எஸ். மகராசன், என். அசன்கனி சாய்பு, அ. த. ப. திருஞான சம்பந்தன், தி. சுந்தரமூர்த்தி, வி. சிவக்கொழுந்து, ச. தண்டபாணி தேசிகர், திருமதி. தே. தியாகராசன்.

**புதுச்சேரி மங்களகான சபா.** தலைவர்: பேராசிரியர் மு. இராசாக்கண்ணனார்; பேச்சாளர்: பண்டிதர் திருமுருகனார். அன்பர்களுக்கு அறு சுவையுண்டியும் அளிக்கப்பட்டது.

**புதுக்கோட்டை திருக்கோகரண நிலையம்.** தலைவர் திரு. வீரப்ப செட்டியார்: பேச்சாளர்: பேராசிரியர் திரு. சி இலக்குவனார் எம். ஏ., எம். ஓ. எல்., பாலகவி திரு. இராமநாதன் செட்டியார், திரு. கலைப்பித்தன்.

**சென்னைத் திருவள்ளுவர் மன்றம்.** தலைவர்: திருவாளர் தட்சணாமூர்த்தி; பேச்சாளர்கள்: புலவர். ம. பாலகிருஷ்ணன் திருவாளர்கள் த. ஜகதீசன், வேங்கடசாமி, பா. சீனிவாசன், கா. தே. சங்கர நாராயணன், சு. கணேசமூர்த்தி.

**குன்னூர் பாரதி பழஞ்சிக வாலிபர் மன்றம்.** தலைவர் திரு. ஆர். வரதராஜர்; பேச்சாளர்கள்: திருவாளர்கள் ஆர் கொழுந்தையன், கா. ந. திருவேங்கிடம், எஸ். வி. இராமகிருஷ்ணன், ஆர். சுப்பிரமணியம், தி. பொ. கோவிந்தன்.

**தேவகோட்டை திருவள்ளுவர் சங்கம்.** தலைவர்: திரு. சொ. முருகப்பா; பேச்சாளர்கள்: வித்துவான் திரு. இராம பெரியகறுப்பன், வித்துவான். முடியரசன், ஆசிரியர் சி. இலக்குவனார் எம். ஏ., எம். ஓ. எல்.

**தியாகராஜநகர் இந்திப்பிரச்சார சபை.** பேச்சாளர்: திரு. ம. பொ. சிவஞான கிராமணியார்.

**திருவள்ளுவர் கழகம் மதுரை.** தலைவர்: கௌரவ சு, நடேசன் பி. ஏ., பி. எல்., பேச்சாளா பலர்.

**சேலம் திருக்குறள் பிரச்சார சபை.** தலைவர்: திரு. அண்ணாவி கவுண்டர்; பேச்சாளர். திரு. கே. ஆர். செல்லப்பிள்ளை.

**புதுக்கோட்டை வார வழிபாட்டுக் கழகம்.** தலைவர்: வித்துவான் திரு வி. தி. ஸ்ரீநிவாச ஐயங்கார்; பேச்சாளர்கள்: வித்து

வான் இரங்க இராமானுஜம், சிந்தாந்த செல்வமணி ஸ்ரீ பிருந்தா தேவி, சிதம்பரம் சுப்பிரமணிய சுவாமிகள்.

**தேவகோட்டைத் திருவள்ளுவர் சங்கம்.** தலைவர்கள்: திரு வண்ணமலை ஆதீனம் தெய்வத்திரு தெய்வ சிகாமணி அருணை சல தேசிக பரமாச்சாரிய சுவாமி, திரு தெ. பொ. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை; பேச்சாளர்கள். திரு! முத்து வெங்கடாசலமய்யார், திரு ஈசான சிவாச்சாரியார், திரு கி. வா. ஜகன்னாதன்.

**சென்னை ஒய். எம். சி. ஏ.** தலைவர்: ம. பொ. சிவஞான கிராமணியார்; பேசசாளர்கள்: ஆ. கசபதி நாயகர், சி. ஆர். லக்ஷ்மி நரசிம்மன், எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்.

**கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம்.** தலைவர்; த. சிங்காரம் பேச்சாளர்: சீனிவாசன்.

**பழையமாம்பலம் தமிழரசுக் கழகம்.** தலைவர்: ஆ. கோ. வேங்கடராமாநுசம்; பேச்சாளர்: அ. கு. பாலகிருஷ்ணன், பெ. சு. மணி; த. மி. பட்டாபிராமன்.

**குண்டக்கல் தமிழ்ச் சங்கம்.** தலைவர்: சி. சுப்பிரமணியம்; பலர் பேசினர்.

சித்தூர் தமிழர் நல உரிமைக் கழகம்:
மறைமலை மன்றம்.
வேலூர் பாட்டுக் கழகம்.
கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம்.
மறைமலையடிகள் நூல் நிலைய வாசகர்கள்.
திருவல்லிக்கேணி தமிழரசுக் கழகம்.
தென்னிந்திய திருநெல்வேலிச் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.
பம்பாய் பாண்டுங் தமிழ் மன்றம்.
பம்பாய்த் தமிழ்ச் சங்கம்.
பங்களூர் மத்திய கல்லூரி.
காரைக்குடி திருக்குறள் கழகம்.
மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை.

உடுமலைப் பேட்டை, இராயவரம், சின்ன சேலம், கோயம் புததூர், காரைக்குடி, திருவையாறு முதலிய விடங்களிலுங் கொண்டாடப்பட்டது.

## பர்மா

அகில பர்மாத் தமிழர் சங்கம்.

## மலாயா

**கோலாலம்பூர் சமயப் பிரசார சபை.** தலைவர் - சுவாமி சத்தியானந்தா அவர்கள் ; பேச்சாளர்-திருவாளர்கள் சு. பழனி வேல் பிள்ளை, கு. அழகிரிசாமி, ஏ. ஆறுமுகனார், முருகு சுப்பிர மணியன், செல்வி சுபாஷினி, (திருக்குறள் போட்டி வைத்துப் பரிசில்களும் வழங்கினார்கள்.)

**மலாயா தமிழ்ப்பண்ணை சிலாங்கூர்க் கிளை.** தலைவர் - திரு. சு. பழனிவேற் பிள்ளை ; பேச்சாளர்கள்-சுவாமி சத்தியா னந்தா திரு. க. இராமநாதன், திரு. கு. அழகிரிசாமி.

**மலாயா தமிழ் இளைஞர் சங்கம்**—தலைவர் - திரு அ. இராமாநுஜாச்சாரியார் ; பேச்சாளர்கள்-செல்வி வள்ளிக்கண்ணு, திருவாளர்கள் ஆழி அருள்தாஸ், சி. ஆர். நரசிம்மராஜ்.

**சிறம்பான் தமிழ்ப் பண்ணைக் கிளை.** தலைவர்-திரு. எஸ். ஓ. கே. உபைதுல்லா ; பேச்சாளர்கள்-திருவாளர்கள் சி. சிவ சுப்பிரமணியம், பீ. ஓ. கே. நடராசபிள்ளை.

சிங்கப்பூர் தமிழர் சங்கம்.

சிங்கப்பூர் தமிழர் எழுத்தாளர் சங்கம்.

## தென் ஆபிரிக்கா

**யோகேனஸ்பேக் திருவள்ளுவர் மறைக்கழகம்**-தலைவர்-திரு. சி. கே. பிள்ளை ; பேச்சாளர்கள்-திருவாளர்கள் ஏ. ஆர். பதி, சுப்பைய நாயக்கர், கோவிந்தர், நா. மாணிக்க நாயுடு, திரு மதி சௌந்தரி படையாட்சி. இராமலிங்க சுவாமிகள் திருக் கூட்டத்தாருடன் மாதர் சங்கமும் பங்கு பற்றியது.

டர்பன், டிரான்ஸ்வால் முதலிய இடங்களிலும் விழாக் கொண்டாடப்பட்டது.

* * * * *

“வள்ளுவருக்கு இலங்கைத் தமிழ் மக்கள் வணக்கம். ஊரெங்கும் விழா, விரிவுரை, ஊர்வலம். குறளின் பெருமை குவலயம் எங்கும் பரவச் செய்க.” **—தமிழ் முரசு, 5—6—53.**

“தமிழ் மறைக் கழகத்தின் தீவிர பிரசாரங் காரணமாகத் திருவள்ளு வர் தினத்தை யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் சிறப்பாகக் கொண் டாடுவதில் அதிக உற்சாகம் காணப்பட்டது. இவ்விழாவை நடத்தத் தவறிய கிராமம் எதுவுமே யாழ்ப்பாணத்தில் கிடையாதென்று சொல்லி விடலாம்.” **—ஈழகேசரி, 23—5—54.**

“இலங்கைத் தமிழ் மறைக் கழகத்தின் பெருமுயற்சியால் தமிழ் மக்கள் வாழும் இடமெங்கும் வைகாசி அனுடம் வள்ளுவர் தினமாகக் கொண்டாடப்பட்டது.” **—சுதந்திரன், 6—6—54.**

# தமிழ்மறைக் கழகத்தின் திருக்குறள் மாநாடுகள்

ஆண்டு தோறும் திருவள்ளுவர் திருநாளின் போது ஒவ்வோரிடத்தி லுள்ள சங்கத்தின் ஆதரவில் திருக்குறள் மாநாடுகளை நடத்தி வருகிறோம்.

## கழகத்தின் முதலாவது திருக்குறள் மாநாடு

திருகோணமலைத் திருவள்ளுவர் கழக ஆதரவில்,28, 29, 30-5-53 இல் திருகோணமலை இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. டாக்டர் வ. பொன்னையா, பி. ஏ., பி. எச். டி, அவர்கள் மாநாட்டைத் தொடக்கி வைத்தார்கள். தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத் தினம் எம். ஏ., பி. ஓ. எல். அவர்களும், வழக்கறிஞர் பொன், இரகுபதி பி. ஏ. அவர்களும், என். ஆர். இராஜவரோதயம் எம். பி., அவர்களும், கே. சிவபாலன் பி. ஏ., அவர்களும், தலைமை தாங்கினார்கள். தமி ழகத்திலிருந்து மாநாட்டுக்கு அழைக்கப் பட்டவர்களாகிய தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் எம். எல். சி, பேராசிரியர் அ. ச. ஞானசம் பந்தன் எம். ஏ., சோம. லெ. இலக்குமணச் செட்டியார் பி. ஏ., என்பவர்களுடன், சுவாமி சச்சிதானந்த யோகி, த. ஏகாம் பரம், வித்துவான், பொன். முத்துக்குமாரன். புலவர் மணி. ஏ. பெரிய தம்பிப் பிள்ளை, திருமதி கமலபூஷணி திருநாவுக்கரசு, பண்டிதர்கள் க. மயில்வாகனன், ஆர். வடிவேலு, ஐ. சரவணமுத்து, டாக்டர் சு. வித்தி யானந்தன் எம். ஏ., நா. கணபதிப்பிள்ளை, பெ. பொ. சிவசேகரன் என்போர்களும் சொற்பொழிவாற்றினார்கள். திருக்குறட் சுவடி ஊர்வலம், இசைவிருந்து, நாடக அரங்கு முதலிய நிகழ்ச்சிகளும் மாநாட்டில் நடை பெற்றன.

## இரண்டாவது திருக்குறள் மாநாடு

நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்க ஆதரவில், கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் 16, 17, 18,-5-54 இல் நடைபெற்றது. துணைநீதி அமைச்சர் வே. குமாரசாமி பி. ஏ., அவர்கள் மாநாட்டைத் தொடக்கி வைத் தார்கள். தமிழ்மறைக்கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். ஏ., பி. ஓ. எல்., அவர்களும் பண்டிதர் திரு. க. சபாஆனந்தர் பி. ஏ., பி. ஓ. எல்., அவர்களும் திரு. வி. செல்வநாயகம் எம். ஏ., அவர்களும் தலைமை தாங்கினார்கள். தமிழகத்திலிருந்து வந்த பேராசிரியர் ஆ. முத்து சிவன் எம். ஏ. வித்துவான் கு. அருணாசலக் கவுண்டர் என்பவர்களுடன், வித்துவான் சி. ஆறுமுகம், திருமதி ஞானம் இரத்தினம் பி. ஏ., வித்துவான் க. வேந்தனார், எஸ். எம். கமால்தீன் பி. ஏ., எஸ். ஜெகன்னாதாச்சாரியார் எம்.ஏ., வித்துவான் மு. கந்தையா, அ. அமிர்தலிங்கம் பி. ஏ. பண்டிதர் மு. ஆறுமுகன், ச. சேதுகாவலர் எம். ஏ. முதலியோரும் சொற்பொழிவாற்றி னார்கள். திருக்குறட் சுவடி ஊர்வலம், இசைவிருந்து, நாடக அரங்கு முதலி யனவும் நிகழ்ந்தன.

## மூன்றாவது திருக்குறள் மாநாடு

அனுராசபுரத் தமிழ்க் கழக ஆதரவில் . அனுராசபுரத்தில் 4, 5-6-55 ஆம் நாட்களில் நடைபெறும். தமிழ்நாட்டுப் பேரறிஞர்களும் ஈழநாட்டுப் பேரறிஞர்களும் பங்குபற்றுவார்கள்.

# திருக்குறள் மாநாட்டுத் தலைமையுரை

(திருகோணமலையில், திருவள்ளுவர் கழக ஆதரவில் திருவள்ளுவர் திருநாளிற் (28-5-53) றொடங்கி நடந்த, தமிழ்மறைக் கழகத்தின் முதலாவது திருக்குறள் மாநாட்டில் **தமிழ்மறைக் கழகத் தலைவர் கா. பொ. இரத்தினம்** நிகழ்த்திய உரையின் சுருக்கம்.)

இத்திருக்குறள் மாநாட்டை இவ்வளவு சிறப்பாக நடத்தும் இம் மாநகரின் மக்கள் யாவர்க்கும் நன்றி கூறுகின்றேன். இவர்களுடைய ஒற்றுமை உணர்ச்சியும், தமிழ்ப் பண்பும், திருக்குறட் பற்றும் போற்றத்தக்கன. எமது தமிழ்மறைக் கழகத்தின் முதலாவது மாநாட்டை இங்கே சிறப்பாக நடத்துதற்கு முன்வந்த திருவள்ளுவர் கழகத்தாருடைய பெருந்தொண்டு இங்கு வந்திருக்கும் இந்தியப் பேரறிஞர்களையும் ஈழத்துப் பேரறிஞர்களையும் வியப்படையச் செய்துவிட்டது. பல மாதங்களாக முயற்சிசெய்து இப்பெரும் பணியைச் சிறப்பாக நிறைவேற்றியுள்ள திருவள்ளுவர் கழகத்தாருக்கு எமது கழகம் மாத்திரமன்றித் தமிழ்மக்கள் யாவருமே நன்றிகூறக் கடமைப் பட்டவர்களாவர். இம் மாநாட்டை நடத்துவது மாத்திரமன்றி இங்குள்ள மக்கள் யாவரையும் தத்தம் வீடுகளிலும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடவுஞ் செய்த இக் கழகத்தாரின் பெருஞ் செயலை எவ்வாறு போற்றுவது? விடாமுயற்சியின் சிறப்பை—உண்மைத் தொண்டின் பயனை—இன்று இங்கே காணும் வாய்ப்பு இங்குள்ளார் யாவர்க்கும் கிடைத்துளது.

"அருமையுடைத் தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்."

என்று வள்ளுவர் கூறியதனை இக் கழகத்தார் மெய்ப்பித்துளர்.

## தமிழ்மறையின் தனிச்சிறப்பு.

பல்லாயிரம் ஆண்டுகளாகச் சிறந்த நாகரிக வாழ்வை நடத்திய தமிழ்மக்கள் இவ்வுலகத்திலே இன்பமாக எவ்வாறு வாழலாம் என்று ஆராய்ந்தார்கள். அவர்கள் தம் ஆராய்ச்சியின் முடிவாக, அனுபவத்தின் பயனாகப் பல உண்மைகளை அறிந்தார்கள். இந்தப் பேருண்மைகளை—வாழ்வாங்கு வாழும் வழிகளை—நமக்கு எடுத்துக் கூறும் திருநூலே திருக்குறளாகும். இதனால், இந் நூல் தமிழினத்தின் மதிப்பொணாத அருநிதியாய்த் திகழுகிறது. சாதி, மத, நிற வேறுபாடுகளின்றி எல்லா மக்களும் எக்காலத்தும்

போற்றுதற்குரிய நன்னூல் இவ்வுலகில் இஃதொன்றே. தமிழின் பெருமையையும், தமிழினத்தின் சிறப்பையும், தமிழ்ப் பண் பாட்டின் செம்மையையும், தமிழறிஞரின் சிந்தனையின் உயர் வையும் எடுத்துரைக்கும் இத்தெய்வ நூலுக்கு இணையான நூல் உலகிலுண்டோ? சிந்திக்கும் வன்மை உள்ளவர்களையும், உணரும் ஆற்றல் படைத்தவர்களையும் ஈர்த்து ஈர்த்து இன்புறுத் தும் இந்தச் சிந்தனைக் களஞ்சியத்தின் பெருமையினை அளவிட் டுரைத்தல் முடியுமா? பல துறையாக விரிந்து செல்லும் வாழ்வில் ஏற்படுஞ் சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல் இப் பொதுமறையின் தனிச் சிறப்பன்றோ! நன்மைக்கும் - தீமைக்கும், அறத்துக்கும் - மறத்துக்கும், தன்னலத்துக்கும் - பிறர் நலத்துக்கும், மனிதப் பண்புக்கும் - மிருகப் பண்புக்கும் ஏற்படும் போராட்டத்திலே மனிதன் வெற்றிகண்டு மனிதனாக—அமரனாக—வாழ வழிகாட் டும் அறநூல் இஃது என்பதை அறியாதார் உளரோ?

பகையை, அன்பினாலன்றிப் பகையினால் ஒழிக்க முடியாது; தீமையை, நன்மையினாலன்றித் தீமையினால் அழிக்க முடியாது என்பனபோன்ற பேருண்மைகளை அழுத்தந் திருத்தமாக எடுத் துப் பறைசாற்றும் நமது தமிழ் மறையின் சிறப்பை எவ்வாறு கூறலாம்!

பண்புடைமை.

இந்த உலகம் இன்பமாக இயங்குதற்கும் அமைதியாக நடப்பதற்கும் பண்புடையவர்கள் பெருகவேண்டும்; பண்புடை யவர்கள் இவ்வுலகில் இன்றேல் இந்த உலகமே அழிந்துவிடும் என்பதை,

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்."

எனும் குறள் கூறுகிறது. எவ்வளவு கூரிய அறிவுடையோரும் பண்பில்லாதவர்களாயிருப்பின் அவர்கள் மரத்தைப் போன்ற வர்கள் என வள்ளுவர் பெருமான் கூறுகிறார்.

"அரம் போலுங் கூர்மையரேனு மரம் போல்வர்
மக்கட் பண்பு இல்லா தவர்."

பண்பிலாதாரின் அறிவு மாத்திரமன்றி அவர்தம் செல்வமும் பயனற்றதென்பது வள்ளுவர் கருத்து.

## தீமைக்கும் நன்மை.

தீமைகளைச் செய்கிறவர்களிடத்தும் யாம் பண்பு உடையவர்களாய் நடக்கவேண்டும். இவ்வாறு நடவாமை இழிவான செயலாகும். தீமை செய்கின்றவர்களுக்கும் நன்மை செய்தலையே வள்ளுவர் உயர்ந்த பண்பாக—சால்பின் பயனாக—தலையாய அறிவாக—மாசற்றார் குறிக்கோளாகப் பல விடங்களிலே கூறுகிறார்.

> "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக் கால்
> என்ன பயத்ததோ சால்பு."
>
> "அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
> செறுவார்க்கும் செய்யா விடல்."
>
> "கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
> செய்யாமை மாசற்றார் கோள்."

ஒருவன் தன்னைத் திருத்தி அன்பும் பண்பும் உடையவனாக வாழ்ந்தால் அவனுடைய குடும்பம் செம்மைப்படும்; அவன் வாழும் ஊர் சிறக்கும்; அவனுடைய நாடு நலம்பெறும்; உலகமே உயர்வடையும். இதுதான் வள்ளுவருடைய அடிப்படையான கொள்கையாகும். இதனாலேயே, ஒருவன் மேற்கொண்டொழுக வேண்டிய சிறந்த பண்புகளையும் அவன் நீக்கவேண்டிய தீய குணங்களையும் அவர் எடுத்து விளக்கியுளர்.

## உன்னிடத்தும் நீ அன்பு வை.

வீடும் நாடும் நலமுற அவர் கூறும் சட்டதிட்டங்கள் அவற்றைப் படிப்போர், கேட்போர் தம் உள்ளங்களைத் தொடத் தக்கன; "இதுவரை உண்மை தெரியாது அலைந்தோம், அல்லற் பட்டோம், உமிக்குத்திக் கை ஓய்ந்தோம், இப்பொழுது உண்மையை அறிந்தோம், இனி இன்பமடையலாம், அன்புடன் அமைதியாக வாழலாம்" என்று எண்ணச் செய்வன; எண்ணி, எண்ணி நல்வாழ்வு வாழச்செய்வன.

பிறரிடத்து அன்பு வை, பிறருக்குத் தீமை செய்யாதே, என்று மாத்திரம் வள்ளுவர் கூறவில்லை. 'உன்னிடத்தும் நீ அன்பு வை; உனக்கும் நீ தீமை செய்யாதே; உன்னைக் காக்கும் முறையை அறிந்துகொள்; நோயின்றித் துன்பமின்றி வாழும் வகையைத் தெரிந்துகொள், உனக்கு நன்மை செய்கிறாயா என்று ஆராய்ந்து பார்' என்றுங் கூறுகிறார்.

"தன்னைத் தான் காதலனாயின் எனைத் தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்."

"தீப்பால தான் பிறர்கட் செய்யற்க நோய்ப் பால
தன்னை அடல்வேண்டா தான்."

"நோய் எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்."

"அருங் கேடன் எனப தறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்."

"தன்னைத்தான் காக்கிற் சினங்காக்கக் காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்."

இவைபோன்ற குறள் மணிகள் எத்தகையோருடைய உள்ளத்தையும் உருக்கி உண்மையையுணரச் செய்யுமன்றோ!

## பிறர் குற்றம்போல் தங்குற்றங் காணல்.

மக்கள் பலர், பிறருடைய குற்றங்களைக் கண்டு அவற்றைப் பரப்புவதிலேயே தம் நேரத்தையும் ஆற்றலையும் வீணாக்குகின்றனர். இத்தகையோர் தம்மிடத்துள்ள குற்றங்களையும் காண்பாராயின் இந்த உலகத்தில் தீமையுண்டாகுமா என்று கேட்கும் வள்ளுவர் வாய்மொழி புலப்படுத்தும் பேருண்மையை இனியாகுதல் மக்கள் உணருவார்களா!

"ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு."

'தீதுண்டோ' எனுஞ் சொல் எவ்வளவு உருக்கத்தையும் இரக்கத்தையும் பிறப்பிக்கிறது. இக்குறளைப் பன்முறை படித்துப் பாருங்கள். உங்கள் உள்ளம் உங்களை அறியாமலே உயர்வடையும்; உண்மையிற்றிளைக்கும்.

"தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்."

எனும் வள்ளுவர் வாய்மொழியைப் படித்தவுடன் உணர்ச்சி பெறாத உள்ளமுடையவர்களை மக்களென்று கூறலாமா?

## அன்பு அறிவு முதலியவற்றின் அடையாளம்.

"யாம் சிறந்த அன்புடையோம், உயர்ந்த அருளுடையோம், பரந்த அறிவுடையோம், நல்ல சால்புடையோம், விழுமிய ஒழுக்கம் உடையோம், பெரிய கல்வி உடையோம், நல்ல குலம் உடையோம்," என்றெண்ணியுஞ் சொல்லியும், இவற்றின்

காரணமாகப் பிறராற் பாராட்டப்பட்டும் வாழ்வோர், இவற்றின் அடையாளங்களாக வள்ளுவர் கூறுவனவற்றைக் கேட்டறிந் துணர்ந்தவுடன் இவற்றுள் ஒன்றேனும் தங்களிடம் இல்லை என்று கூறும் நிலைமைக்கு வந்துவிடுவார்கள். தமது இழிந்த நிலைமையை—பொய்த்து உயிர் வாழுதலை—உணர்வார்கள். உண்மையாக வாழ—உள்ளத்தாற் பொய்யாது வாழ விரும்பு வார்கள்.

" தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும் "

என்பது உண்மை ; முழுதும் உண்மை என்று பறைசாற்றுவார் கள், பண்புடையவர்களாய் வாழ முயல்வார்கள். அன்பு, அருள், அறிவு, சால்பு, ஒழுக்கம், கல்வி, குலம் முதலியவற்றுக்கு அடையாளங்களாக வள்ளுவர் கூறுவனவற்றுட் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறேன். இவற்றை, நாடோறும் மக்கள் நினைத்துக்கொண்டால் நல்வாழ்வு வாழலாம் ; பண்புடை யவர்களாகலாம்.

" அன்பிலார் எல்லாந் தமக்குரியர் **அன்புடையார்**
என்பும் உரியர் பிறர்க்கு "

" அல்லல் **அருள்ஆள்வார்க்கு** இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி "

" **அறிவினன்** ஆகுவதுண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை "

" இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ **சால்பு** "

" **ஒழுக்க முடையவர்க்** கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல் "

" **கற்றதனால்** ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின் "

" நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் **குலம்**வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு "

## காந்தியடிகள் போற்றினர்.

வள்ளுவர் தந்த இந்தத் தமிழ்மறையின் பெருஞ் சிறப் புக்களை உணர்ந்தே இன்று வரையும் தமிழ்ப் புலவர்கள் வழி வழியாக இதனைப் போற்றி வந்திருக்கிறார்கள் ; பிறநாட்டார் பலர் தத்தம் மொழியில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். வள்ளுவர் கூறியபடி உள்ளத்தாற் பொய்யாதொழுகி உலகத்தார் உள்ளத்

தெல்லாம் நிறைந்து விளங்கிய காந்தியடிகள் திருக்குறளைப் படித்தறிதற்காகத் தமிழைக் கற்றார். அவருடைய அடிச்சுவட்டினைப் பின்பற்றி வாழ்பவரும், பூதான இயக்கத்தின் தலைவராய் உலகத்தையே ஆச்சரியமடையச் செய்து வருபவருமாகிய ஆச்சார்ய விநோபாஜி நாடோறும் இதனை ஓதி வருகிறார்.

இனி வருங் காலத்தில் நமது தமிழினம்—ஏன் உலக மக்கள் யாவருமே—இன்பமாகவும் அமைதியாகவும் நல்வாழ்வு வாழ வேண்டுமெனின் எல்லாருடைய எண்ணமும் சொல்லும் செயலும் திருக்குறள் வகுத்த நெறியிலே செல்லல் வேண்டும். பிறநாட்டினருக்கு வழிகாட்டும் முறையில் நாம் நமது தமிழ் மறையைப் போற்றி அது வகுத்த நெறியிலே நின்றொழுகி இன்பமடைய முதலில் முயற்சி செய்தல் வேண்டும். சாதி மத வேறுபாடின்றித் தமிழினைப் பேசும் மக்கள் யாவரும் ஒன்று சேர்ந்து தமிழ்ப் பண்பாட்டின் களஞ்சியமாக—யாவர்க்கும் பொதுவான நெறியைப் புகலும் பொதுமறையாக—விளங்கும் திருக்குறளைப் போற்றுவோம்; அதனுடைய ஆசிரியரின் பெருஞ் செயலை நினைவு கூர்வோம்.

## வையகமெங்கும் வள்ளுவன் புகழ் பரப்புவோம்

ஒரு நாளேனும் திருக்குறளைப்பற்றி எண்ணாமல், திருக்குறள் என்றொரு சிறந்த நூல் இருக்கிறதென்றுகூட அறியாமல், அறிந்தும் அதன் அருமை பெருமைகளை உணராமல், அதனைப் படித்தும் அது வகுக்கும் பொதுநெறியில் ஒழுகாமல் வாழும் மக்களுக்கு அந்நூலின் அருமை பெருமைகளை அறிவித்தற்கும், அதனில் அவர்களை ஈடுபடச் செய்தற்கும் எமது தமிழ்மறைக் கழகம் எண்ணியது. வையகமெங்கும் ஒரு நாளிலே திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாட வேண்டுமென்றும், ஒவ்வொரு வீட்டிலுங் கொண்டாட வேண்டுமென்றுங் கேட்டு அறிக்கைகள் வெளியிட்டோம்.

தமிழறிஞர்கள் மாத்திரமன்றிச் சங்கங்களும் பத்திரிகைகளும் எமது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கின; கல்கி, சுதந்திரன், ஈழகேசரி, செந்தமிழ்ச் செல்வி, தமிழ் நாடு, ஆத்மசோதி, தர்ம சக்கரம், வீரகேசரி, சமூகத் தொண்டன் முதலிய பத்திரிகைகள் தலையங்கம் முதலியன எழுதியும் உற்சாகமூட்டின. ஈழத்திலும் தமிழகத்திலும் மாத்திரமன்றி மலாயா, பர்மா, தென்னாபிரிக்கா முதலிய இடங்களிலும் வாழும் தமிழ் மக்கள் இன்று

திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுகிறார்கள். எமது வேண்டு கோட்கிசைந்து திருச்சி, சென்னை, இலங்கை, சிங்கப்பூர் வானொலி நிலையங்கள் இன்று விசேட நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன. தமிழில் மாத்திரமன்றி ஆங்கிலம், சிங்களம், தெலுங்கு முதலிய மொழிகளிலும் திருக்குறளையும் அதன் ஆசிரியரையும் பற்றிய பேச்சுக்கள் ஒலிபரப்பப்படுகின்றன. எமது சிறு முயற்சி இவ்வளவு பெரும் பயனை அளித்ததற்குக் காரணம் மக்கள் பலருக்குத் திருக்குறளிலுள்ள ஆர்வமேயாகும். இந்த ஆர்வத்தை எல்லாரிடத்தும் உண்டாக்கி எல்லா மக்களையும் உண்மை வழியில் இன்ப வாழ்வு வாழச் செய்வது பேரறிஞர் தங் கடனாகும்.

இவ்வாண்டிலே பெரும்பாலும் எல்லா ஊர்களிலும் திரு வள்ளுவர் திருநாளைக் கொண்டாடச் செய்துவிட்டோம். எம் முடன் ஒத்துழைத்த பத்திரிகைகளுக்கும், சங்கங்களுக்கும், தமிழ்ப் பேரறிஞர்களுக்கும், வானொலி நிலையங்களுக்கும் நன்றி கூறுகிறோம். அடுத்த ஆண்டிலே திருவள்ளுவர் திருநாளை ஒவ்வொரு நாட்டிலும மாத்திரமன்றி ஒவ்வொரு வீட்டிலும் கொணடாடச் செய்தல் வேண்டும். இதற்குத் திருக்குறளிலீடுபட்ட அன்பர்கள் யாவரையும் உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். சமயப் பூசல், சாதிப்பூசல், இனவேற்றுமை, பணவேற்றுமை முதலிய பல காரணங்களாற் பிளவுபட்டுக்கிடக்குந் தமிழினத்தை ஒன்று படுத்தும் ஒரு திருநாளாக—தமிழினைப் பேசும் மக்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து கொண்டாடும் ஒரு நன்னாளாக—இந்த வளளுவர் திரு நாளை பொலிவதாக! வாழ்க தமிழ்மறை! வாழ்க உலகம்!

★ ★ ★

## இணையற்ற ஞான நூல்

[அல்பேர்ட் சுவைட்சர் என்பவர் எழுதிய 'இந்திய சிந்தனை' என்ற நூலில், திருக்குறளைப் பற்றிக் குறிப்பிட்ட கருத்துக்களிற் சிலவற்றைக் கீழே காண்க. அல்பேர்ட் சுவைட்சர் நோபல் பரிசுகள் பல பெற்ற பேரறிஞர். தத்துவம், சமயம், சங்கீதம் எனும் மூன்றிலும் டாக்டர் பட்டம் பெற்றவர். ஜெர்மன் தேசத்துத் தோன்றிய இந்த ஞானியார் மத்திய ஆபிரிக்காவுக்குச் சென்று அங்கு ஒரு வைத்தியசாலையை நிறுவிக் குஷ்ட நோயாளருக்குச் சிகிச்சை செய்து வருகிறார். இயேசு கிறித்துவின் அவதாரமென அறிஞராற் போற்றப்படுகிறார்.]

பகவத் கீதையிலே கர்மத்தின் முதன்மையைப் பற்றிச் சொல்லப்பட்டுளது. எனினும், பகவத் கீதையின் கூற்று ஒழுக் கத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. பற்றற்ற, விருப்பு வெறுப்பற்ற கர்மத்தைச் செய்வதால் பரதத்துவத்தை அடை யலாம் என்பதே பகவத் கீதையின் கொள்கை. கடவுளிடத்திலே

மனிதன் அன்பு செலுத்தவேண்டும் என்பது பகவத் கீதையின் குறிக்கோள். மனிதன் மனிதனுக்குக் காட்டும் அன்பினால் கடவுளை அடையலாம் என்ற கருத்துப் பகவத் கீதையில் இல்லை. அன்பு சமூகத் தொண்டாக மாறவேண்டும் என்ற கருத்துத் திருக்குறளிலேதான் வற்புறுத்தப்படுகிறது.

மனுதர்ம சாத்திரத்திற் கூறப்பட்டிருப்பது போலக் குறளிலும் ஒழுக்கத்தினால் மனிதனுக்குப் பயன் கிடைக்கிறது என்ற கருத்துக் கூறப்படுகிறது. பிறவிக் கடலிலிருந்து விடுபடுதற்கும், அடுத்த பிறப்பில் உயர்ந்த நிலையை அடைதற்கும் முயலுதல் வேண்டும் என்று குறளுங் கூறுகிறது. இதனோடு பகவத் கீதையிலும் ஒருபடி மேலே செல்கிறது குறள். கைம்மாறு கிடைத்தாலும் கிடைக்காவிடிலும் நல்ல செயலைச் செய்வதால் மனத்துக்கு இன்பம் உண்டாகிறது. ஆகையால், நல்ல செயல்களைச் செய்யவேண்டுமென்னும் உண்மையைக் குறள் கூறுகிறது. 'மக்கள் கர்மத்திலே ஈடுபட வேண்டியிருக்கிறது; இதுதான் இயற்கை நியதி' என்று சோர்வுடன் கூறுகிறது பகவத் கீதை. இது வறண்ட கொள்கை. இதற்கு மாறாகக் குறள், 'செயல்களினாற் பிறருக்குத் தொண்டாற்றி நன்மை செய்யமுடியும், ஆகையாற் செயலில் ஈடுபடு' என்று முழங்குகிறது.

பகவத் கீதை ஒவ்வொருவருடைய சாதிக்குமுரிய கடமைதான் கடமை என்று போதிக்கிறது. குறளோ எது நன்மையோ அதைச் செய்வதுதான் கடமை என்று கூறுகிறது. செயலில் ஈடுபடுவதால் மக்களுக்கு இன்பம் உண்டாகின்றது என்ற கருத்தை இந்திய இலக்கியத்தில் வேறெங்குங் காணல் முடியாது. இக் கருத்தை வள்ளுவர் பெருமான் அழுத்தந் திருத்தமாகக் கூறியிருக்கின்றார்.

உலகம் ஒரு மாயை என்ற கொள்கையில் உள்ள நல்ல அம்சங்களை எல்லாம் ஏற்றுக்கொண்டு அதனோடு அன்பை அடித்தளமாகக் கொண்ட தொண்டு அவசியம் என்பதையும் வள்ளுவர் வற்புறுத்துகிறார். ஒழுக்கமே மக்களுடைய உயர்ந்த குறிக்கோளாக இருக்கவேண்டும் என்பதை மிகுந்த துணிவுடன் அவர் கூறியிருக்கின்றார். ஒவ்வொருவரும் தமக்குத்தாமே செய்யவேண்டிய கடமை என்ன? மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன? என்பனவற்றைப் பற்றியும் அழகாக வள்ளுவர் பேசுகிறார். **உலக இலக்கியத்திலே இவ்வளவு சிறந்துயர்ந்த ஞானம் வேறொரு நூலிலும் கூறப்படவில்லை எனலாம்.**

கிறித்து பிறந்த காலத்திலேயே 'உலகம் உண்மையானதுதான், மாயை அன்று,' என்ற கொள்கை இந்தியாவிற் பரவி இருந்தது. பகவத் கீதை, பௌத்த நூல்கள் முதலியவற்றில் இக்கொள்கை இல்லை. எனினும் குறளாசிரியர் வாயிலாக இக்கொள்கை எங்கும் மெல்ல மெல்லப் பரவிப் பின்னர்ச் சமயத் தலைவர்களினால் வளர்க்கப்பட்டுளது.

# வள்ளுவன் சொல்லே வேதம்

[புலவர் பெருமக்கள் பலருடைய கருத்துக்கள்.]

"ஒருவன்
செய்திகொன்றோர்க்கு உய்தியில்லென
அறம் பாடிற்றே". —ஆலத்தூர் கிழார்.

"தெய்வந்தொழாஅள் கொழுநற் றெழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை". —சாத்தனர்.

"சமயக் கணக்கர்தம் மதிவழிகூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவன்".

—கல்லாடனர்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாரும்
தொழுதுண்டு பின்செல்வாரென்றே இத் தொல்லுலகில்
எழுதுண்ட மறையன்றே!" —கம்பர்.

"நால்வர்சொல் சைவ வேதம் நளிர்குருகூரன் சொல்லைப்
போல்வலார் சிலர்தாம் சொல்லும் பொருவில் பாகவதர் [வேதம்
வால்வளை யுலவும் வீதிமயிலை வள்ளுவன் சொல் யார்க்கும்
கீழ்மையை அகற்றி மேன்மை அருளும் நல் வேதமாமே"

—புலவர் புராணம்.

"தெய்வ வள்ளுவன் வான் மறை தந்ததும்" —பாரதியார்.

"தமிழ் வேதமாகிய திருக்குறள்.—தமிழ் வழங்கும் நிலமெங்கும்
நல்லறிவுச்சுடர் கொளுத்திய தெய்வப்புலமைத்
திருவள்ளுவ நாயனார்." —ஆறுமுக நாவலர்.

"திருக்குறள் பொருளின்பம் அகப்படக்கொண்டு அறங்கூறி
வீட்டியல்புநன்று நாட்டிய தத்துவ ஞான நூலாம் உத்தர
வேதமென்பது தெற்றென உணர்ந்துகொள்க."

—சபாபதி நாவலர்.

சந்தான ஞான குரவராகிய உமாபதிசிவம் நெஞ்சுவிடு தூது என்னுந் திவ்விய நூலிலே,

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவரென்று நிலைத்தமிழின்
றெய்வப்புலமைத் திருவள்ளுவனு ருரைத்த
மெய்வைத்த சொல்."

எனத் திருக்குறளைப் பிரமாணமாக வெடுத்தோதி யருளியமை திருக்குறள் தமிழ் வேதமென்பதற்குச் சான்றாகும்.''

—சு. சிவபாத சுந்தரம்

''பொருவறப் புகன்ற புகலருந் தெய்வத்
திருக்குறளென்னுஞ் செந்தமிழ் வேதம்
பலருரை செய்ய நிலவியது,'' -சி. தியாகராசச் செட்டியார்

'' வள்ளுவனார் வாய்மொழி போன் மன்பதை யாவும் பேணுந்
தெள்ளுமறை யொன்றுளதோ தேர்.''
''மும்மை யுலகிற்கு முப்பாலை ஒப்பதொரு
செம்மைமறை யின்றாந்தெளி.''

-நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

'' இம்மட்டோ! திருக்குறள் தோன்றியதும் மக்கள் எல்லோரும் அதனைத் தமிழ் மறை என்றும் பொதுமறை என்றும் போற்றினர். அந்தணர் மூடிவைத்த ஆதி மறை எமக்கு வேண்டாமென்றனர்.'' -மணி திருநாவுக்கரசு முதலியார்.

'' ஒரு சமயத்தையும் சாராது பொது நூலாய் மூன்று புருடார்த்தங்களையும் யாரும் பகுத்துணர்ந்து நற்கதி பெற உலகிலெங்கும் எப்பாஷையிலுங் கிடையாத இரத்தினச் செப்புப் போன்ற சிறந்த நூல் இதுவே. சகல வேத உபநிடதங்களின் சாரம் இதுவே. எச்சமயத்தோரும் சிரமேற்கொண்டு களித்துப் போற்று நூல் இதுவே. இதற்கு இணையான முதல் நூல் எங்கும் எப்பாஷையிலும் இல்லை.'' -திவான்பகதூர் வி. கிருஷ்ணமாச்சாரியார்.

'' திருக்குறள் என்னும் தெய்வத் தமிழ் மறை நூல் அறம்பொருள் காமம் என்னும் முப்பகுதியினையும் உணர்த்துவதோடு வீட்டைப் பற்றியும் இலை மறை காய்போல் விளக்குவதாகும்''

-கா. நமச்சிவாய முதலியார்.

''திருக்குறள் தமிழ் மொழியிற் பிறந்த ஒரு பெரும் பொதுமறை. உலகைக் கூறுபடுத்தும் பொருள்கள் அதன் கண் இல்லை. உலகை ஒருமைப் படுத்தும் செவ்விய பொருள்கள் அதன்கண் மிளிர்கின்றன. இப்பெரிய பொது மறையை மன்பதை பயின்று ஒருமை இன்பத்தை நுகர்வதாக.'' -திரு. வி. கலியாண சுந்தரனார்.

'' இன்ன இயல்பினில் இயை பொது மறைச்சீர்
என்னுலெங்ஙன மியம்புதலிலும் ?''

-கா. ரா. கோவிந்தராச முதலியார்.

'' இத் திருக்குறள் தமிழில் வெளியாய நூல்களுள் அறம் பொருள் இன்பங்களை எப்பாலவரும் இயைந்து ஏற்குமாறு முறை படக் கூறுவது பற்றித் தலைமை பெற்றுத் தமிழறிந்தார் யாவ ராலும் வேதம் போன்று போற்றப்பட்டடு வருதல் குன்றின் மேலிட்ட விளக்காம்.'' -ஆசிரியர் கோ. வடிவேலுச் செட்டியார்.

"பண்டைத் தமிழ் மறைகள் மறைந்த பின் அவை கூறிய அறம் பொருள், இன்பம், வீடென்னும் நான்கினையுந் தெள்ளி திற்றெரிக்கும் பொது மறை திருவள்ளுவர் நூலேயாமென் றுணர்க."
-கா. சுப்பிரமணியபிள்ளை.

"செவிக்கும் வாய்க்கும் சிந்தைக்கும் இனியவாய சிறந்த சொற்செறிவும் இருவினையும் நீக்கும் அருமருந்தனைய பொருட் பொலிவும் பொருந்தி விளங்கும் நமது தமிழ் வேதத்தின் அமிழ்த மய மான நீதி ஒழுக்கங்களையும் பொருள் நுணுக்கங்களையும் அறிந் தனுபவித்து ஆனந்தமடைவதே மக்கட் சிறப்பின் மாண்பய னாகும்." -திருக்குறட் குமரேச வெண்பா ஆசிரியர் செகவீர பாண்டியன்.

"உலகமெங்கணும் சிறப்புற்று நிற்பது திருவள்ளுவர் இயற் றிய தமிழ் மறை என்பது யாவர்தாம் அறியார்? இது நிகர்க்குஞ் செவ்விய நூலினை வேறு எம்மொழியாயினும் பெற்ற பெருமை யுடைத்தாயிற்றோ!"
-வி நாடிமுத்துப் பிள்ளை.

"தமிழ் மறை நூற் றனிப்பயனுந் தகைமை கொடு
[முப்பாலாய்த்
தமிழ் மறையாந்திருக்குறளைத் தனிச்சிறப்பாய் எமக்களித்தாய்."
-அ. நடராச பிள்ளை

"உலகம் போற்றும் ஒப்பிலா நூலாம் திருக்குறள் என்னுந் தீந்தமிழ் மறையைப் போற்றுவதல்லது புகழ முயல்வது சூரியன் காட்டச் சுடர் விளக்கேந்துந் தன்மையேயாகும்"
-புலவர் மயிலை சிவ. முத்து.

"தமிழர்தம் அறிவினுற்றலையும், கல்விப் பெருக்கினையும் எந்நாட்டினரும், எம்மொழியினரும் எச்சமயத்தாரும் எஞ்ஞான் றும் இனிதுணர்ந்து போற்றற்குரிய நன்னிலைக் களனுயிலங்கு வது அவர் தாமியற்றியளித்த தெய்வத் திருமறையாம்."
-பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்.
(அமைச்சர், திருவள்ளுவர் திருநாட் கழகம்.)

"......தமிழ் நாட்டிலே தோன்றிய திருவள்ளுவர் எந்நாட்ட வர்க்கும் எந்நாளும் பயன்படும் வகையில் தமிழ் மறையாகிய திருக் குறளை எழுதிப் போந்தனர். இம் மறை ஏனைய மறைகளுள் அடங்குவதின்றித் தனி நின்றுயர்ந்து சிறப்புப் பெற்று விளங்கு கின்றது."
-பேராசிரியர். ரா. பி. சேதுப்பிள்ளை.

"வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர் நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே—என்றும்
உத்தமராகி ஒழுகுவமே."

-கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை.

## தமிழ் மறைக் கழகக் காப்பாளர்

அமைச்சர் சு. நடேசன், பி. ஏ., பி, எல்.

## தமிழ் மறைக் கழக ஆதரவாளர்கள்

(சேர்ந்த கால முறைப்படி)

1. பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன், எம். ஏ., சென்னை.
2. சோம. இலக்குமணச் செட்டியார், நெற்குப்பை.
3. டாக்டர் மா. இராசமாணிக்கம், எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச் டி. பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை.
4. ச. சிவகுமாரன் எம். ஏ., பொதுச் செயலாளர், சைவ சித்தாந்த மகா சமாசம், சென்னை.
5. ம. பொ. சிவஞானம், தலைவர், தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை.
6. வித்துவான் செ. வெங்கடராமச் செட்டியார், ஏஸ். வி. ஜி. கல்லூரி, திருப்பதி.
7. சு. குமாரசுவாமி ஆச்சாரி, எம். ஏ., தமிழ்க் கல்லூரி, மயிலம்.
8. டாக்டர் மு. வரதராசன், எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச்டி. பேராசிரியர் பச்சையப்பன் கல்லூரி, சென்னை.
9. ஆர். தேசிகன், பி. ஏ., பி. எல் பாண்டிச்சேரி.
10. பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன்செட்டியார், அண்ணமலைப் பல்கலைக் கழகம்.
11. "பால கவி" வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் தருமபுர ஆதீன வித்துவான், தேவகோட்டை.
12. சி. இலக்குவனார், எம். ஏ., எம். ஓ. எல்., புதுக்கோட்டை.
13. திருக்குறள் வி. முனிசாமி, எம். பி., புதுத்தெல்லி.
14. புலவரேறு அ. வரத நஞ்சைய பிள்ளை, சேலம்.
15. அ. முத்துசாமிப் பிள்ளை, பி. ஏ., பெரியகுளம், மதுரை.
16. கவிஞர் புத்தனேரி, ரா. சுப்பிரமணியன், சென்னை-2.
17. கா. இராமநாதன், பி. ஏ., பி. எல்., கோலாலம்பூர்.
18. பொ. திருகூடசுந்தரம், சென்னை-17.
19. சர்தார். அ. வேதரத்னம், வேதாரணியம்.
20. ஏ. சி. சண்முக நயினர், பி. ஏ., பி. எல்., தென்காசி.
21. வித்துவான், கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., பி. எல்., பேராசிரியர், அண்ணமலைப் பல்கலைக் கழகம்.
22. ந. சஞ்சீவி, எம். ஏ., சென்னைப் பல்கலைக் கழகம்,
23. பு. ஆலால்சுந்தரன், எம். ஏ., பேராசிரியர் கிறித்துவக் கல்லூரி, தாம்பரம்.
24. சுப. அருணுசலம், பள்ளத்தூர், இராமநாதபுரம்.
25. ச. மு. பிள்ளை, தலைவர், சரஸ்வதி சபை டர்பன், தென் ஆபிரிக்கா.
26. தே. ஆ. சிறீநிவாசன், திருவாடுதுறை ஆதீன வித்துவான், கூடலூர்.
27. செல்வி, ஆ. ரா. இந்திரா, எம். ஏ., பேராசியை எதிராச் கல்லூரி, சென்னை.
28. வித்துவான், கி. வா. ஜகந்நாதன், எம். ஏ., பி. ஓ. எல்., ஆசிரியர் 'கலைமகள்' சென்னை.

---

[கழகத்தின் ஆதரவாளர்களாயிருந்த கல்கி ஆசிரியர் ரா. கிருஷ்ண மூர்த்தி, பேராசிரியர் ஆ. முத்துசிவன், சாத்தூர் வழக்கறிஞர், து. சு. கந்த சாமி முதலியார் என்போர்தம் மறைவு குறித்து வருந்துகிரேும்.]

29. **வித்துவான், அ. கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., பி. எல்., பி. ஓ. எல்.,** பேராசிரியர், அரசினர் கல்லூரி, கும்பகோணம்.
30. **அ. இராகவன்,** திருநெல்வேலி, தென்னிந்தியா.
31. **வித்துவான், கு. அருணசலக் கவுண்டர்,** பேராசிரியர், இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.
32. **அ. ஜெபரத்தினம், எம். ஏ.,** பேராசிரியர், சென்ற் ஜோன்ஸ் கல்லூரி, பாலம் கோட்டை.
33. **எஸ். மீனாட்சிசுந்தரம்,** கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு.
34. **வித்துவான், கே. ரி. நீலகண்டன், எம். ஏ.,** சேலம்,
35. **ஆ. அருளப்பன், பி. ஏ.,** பேராசிரியர், புனித சவேரியார் கல்லூரி, பாலம் கோட்டை.
36. **ந. சரோஜினிதேவி, எம். ஏ.,** தமிழ் விரிவுரையாளர், அழகப்பா மகளிர் கல்லூரி, கோட்டையூர்.
37. **எஸ். உருத்திரபதி, எம். ஏ.,** பேராசிரியர்,மத்திய கல்லூரி,பெங்களூர்.
38. **மகா வித்துவான், ச. தண்டபாணி தேசிகர்,** விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.
39. **அவ்வை டி. கே. சண்முகம்,** அவ்வையகம், சென்னை-6
40. **புரிசை, சு. முருகேச முதலியார்,** திருவண்ணுமலை.
41. **புலவர், மு. கோவிந்தசாமி பி. ஓ. எல்.,** தலைவர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி.
42. **மோ. அ. துரை அரங்கசாமி, எம். ஏ., எம். ஓ. எல்.,** விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம்.
43. **ரெ. முருகையா,** துணை ஆசிரியர் 'விந்தியா', பம்பாய்.
44. **என். சுப்பு ரெட்டியார், எம். ஏ., பி. எஸ்சி., எல். ரி,** விரிவுரையாளர், அழகப்பாப் பயிற்சிக் கல்லூரி, காரைக்குடி.
45. **வ. சுப்பையா பிள்ளை** ஆட்சியாளர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1.
46. **என். முத்துராமலிங்கம்,** துணைச் செயலாளர், அகில பர்மாத் தமிழர் சங்கம், இரங்கூன்.
47. **த. கிருஷ்ணமூர்த்தி,** இராமகிருஷ்ண புத்தகாலயம், நாடி, பீச்சித் தீவு.
48. **கே. மீனாட்சிசுந்தரம், எம். ஏ.,** விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.
49. **புலவர் மயிலை சிவமுத்து,** தலைவர் தமிழாசிரியர் கழகம், சென்னை-1.
50. **அழ. வள்ளியப்பா,** தலைவர் குழந்தை எழுத்தாளர் சங்கம், சென்னை-17.
51. **பேராசிரியர் முத்து இராசாக்கண்ணனார் பி. ஓ. எல்.,** கலைக்கல்லூரி, சென்னை.
52. **வித்துவான், க. நயினர் முகம்மது,** உடுமலைப்பேட்டை.
53. **டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார்,** எம். ஏ., பி. எச்டி. பேராசிரியர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

## தமிழ்மறைக் கழக உறுப்பினர்கள்

(சேர்ந்த கால முறைப்படி)

1. **வித்துவான் பண்டிதர் கா. பொ. இரத்தினம், எம். ஏ., பி. ஓ. எல்.,** விரிவுரையாளர், அரசினர் ஆசிரிய கலாசாலை, கொழும்பு.
2. **ஆசிரியர் இ. சி. சோதிநாதன்,** கொழும்பு-13.
3. **பண்டிதர் க. மயில்வாகனம்,** தலைமை ஆசிரியர், விவேகானந்த வித்தியாலயம், நீர் கொழும்பு.

4. பண்டிதர் மு. ஆறுமுகன், ஆசிரியர், அரசினர் மத்திய கல்லூரி, கொழும்பு-6.
5. ஆசிரியர் கு. வி. செல்லத்துரை, தலைமை ஆசிரியர் விவேகானந்த வித்தியாலயம், கொழும்பு-13.
6. எஸ். டி. சிவநாயகம், ஆசிரியர் "சுதந்திரன்" கொழும்பு-13.
7. வித்துவான் ச. சபாபதி, தலைமை ஆசிரியர், அரசினர் தமிழ்ப் பாடசாலை, கொழும்பு-9.
8. ஆசிரியர் ம. கைலாய பிள்ளை, கொழும்பு-13.
9. ந. ப. பாலசந்திரன், கொழும்பு-1.
10. ஆசிரியர் பெ. பொ. சிவசேகரன், தனசக்தி, திருகோணமலை.
11. வித்துவான் பண்டிதர் க. கிருஷ்ண பிள்ளை, தும்பளை, பருத்தித்துறை.
12. ஆசிரியர் ஐ. சரவணமுத்து, தம்பலகாமம்.
13. ஆசிரியர் பொ. கந்தையா, திருகோணமலை.
14. பண்டிதர் அ. ஆறுமுகம், பண்ணுகம்.
15. ஆசிரியர் மு. செல்லையா, காந்தி நிலையம், அல்வாய்.
16. ஆசிரியர் செ. கந்தையா, கொக்குவில்.
17. ச. அம்பிகைபாகன், பி.ஏ., முதல்வர், வைத்தீசுவர வித்தியாலயம், யாழ்ப்பாணம்.
18. ஆசிரியர் அ. சிவஞானம், சரசாலை.
19. வித்துவான் க. ந. இரத்தினவேல், ஊரெழு, சுன்னுகம்.
20. புலவர் நா. சிவபாத சுந்தரன், தொல்புரம்.
21. வித்துவான் பொன். முத்துக்குமாரன், பி.ஓ.எல்., சுளிபுரம்.
22. ஆசிரியர் வி. நாராயண பிள்ளை, கரவெட்டி.
23. வித்துவான் பண்டிதர் சி. இ. கந்தசாமி, புலோலி கிழக்கு.
24. பண்டிதர் வீ. வ. நல்லதம்பி, புங்குடு தீவு.
25. வித்துவான் பண்டிதர் க. வேந்தனர், வேலணை.
26. ஆசிரியர் வை. கார்த்திகேசு, டாழ்ப்பாணம்.
27. ஆ. தியாகராசா, எம். ஏ., எம். லிற்., முதல்வர், இந்துக் கல்லூரி, காரைநகர்.
28. வைத்திய கலாநிதி ஆ. சின்னத்துரை, திருகோணமலை.
29. வித்துவான் பண்டிதர் க. நடராசா எம். ஏ., பி.ஓ. எல்., கரவெட்டி.
30. வித்துவான் பண்டிதர் சி. சுப்பிரமணியம், அல்வாய்.
31. ஆசிரியர் ஐ. ஆ. இரமசாமி, தலைமை ஆசிரியர், அரசினர் தமிழ்ப் பாடசாலை, உடப்பு.
32. வழக்கறிஞர் வே. நாகலிங்கம், ஜே.பி., யு.எம்., வட்டுக் கோட்டை.
33. பண்டிதர் ஆ. சி. நாகலிங்கம் பிள்ளை, சுதுமலை.
34. பண்டிதர் மா. மாணிக்கம், வேலணை.
35. வித்துவான் சி. ஆறுமுகம், புங்குடு தீவு.
36. பண்டிதர் க. வை. குருக்கள், பரந்தன்.
37. பண்டிதர் க. முருகேசு, கரணவாய்.
38. திருமதி ஞானம் இரத்தினம், பி.ஏ., கல்வி நிகழ்ச்சி உதவியாளர் வானெலி நிலையம், கொழும்பு-7.
39. ஆசிரியர் க. பே. முத்தையா, ஆசிரியர் 'சமூகத்தொண்டன்' சுண்டிக்குழி.
40. இ. இரத்தினம், பி.ஏ., அரசினர் அலுவலாளர், கொழும்பு-9.
41. செல்வி நா. காசிப் பிள்ளை, பி.ஏ., முதல்வி, சைமங்கையர் கல்லூரி, கொழும்பு-6.
42. சைவப்புலவர் வ. செல்லையா, கொழும்பு-4.
43. தி. ச. வரதராசன், ஆசிரியர், "ஆனந்தன்" யாழ்ப்பாணம்.

44. **பண்டிதர் க. சபா. ஆனந்தர், பி.ஏ., பி.ஓ.எல்,** முதல்வர் **கதிரேசன்** கல்லூரி, நாவலப்பிட்டி.
45. **திருமதி கமலபூஷணி திருநாவுக்கரசு, பி.ஏ.,** மட்டக்களப்பு.
46. **ஆசிரியர் நா. முத்தையா,** ஆசிரியர், 'ஆத்மசோதி' நாவலப்பிட்டி
47. **ஆசிரியர் க. நடராசன்,** அக்கரைப்பற்று.
48. **சு. பொன்னம்பலம்,** உயர்நீதி மன்ற மொழிப்பெயர்ப்பாளர், கொழும்பு.
49. **திருமதி மகேசுவரி பாலகிருஷ்ணன், பி.ஏ.,** கொழும்பு-4.
50. **ஆசிரியர் அ. கணேயா,** அரசினர் மத்திய கல்லூரி, **கெக்கிருவ.**
51. **சி. க. நடராசா,** கொழும்பு-9.
52. **வித்துவாட்டி ப. நாகலிங்கம்,** கொழும்பு-4.
53. **பண்டிதர் சு. திருஞானம்,** இரத்தோட்டை.
54. **பண்டிதை இ. புனிதவதி,** நயினதீவு.
55. **ஆசிரியர் இ. மருதையனர்,** வேலணை.
56. **வித்துவான் பண்டிதர் வி. சீ. கந்தையா,** மட்டக்களப்பு.
57. **ஆசிரியை திருமதி க. கந்தையா,** அரசினர் ஆசிரிய கலாசாலை, மட்டக்களப்பு.
58. **திரு. கி. இலக்குமணன், எம்.ஏ.,** றேயல் கல்லூரி, கொழும்பு-7.
59. **ஆசிரியர் சி. நா. பாலசிங்கம்,** புங்குடுதீவு.
60. **எஸ். எம். கமால்தீன், பி.ஏ.,** நகர நூல்நிலையம், கொழும்பு.
61. **பண்டிதர் ம. கந்தையா.** தொண்டைமானுறு.
62. கு. **பூர்ணனந்தன், பி.ஏ.,** கொழும்பு-13.
63. **ச. ஆறுமுகராசா, பி.ஏ.,** பதுளை.
64. **வித்துவான் க. முருகேசன்,** கொழும்பு-6.
65. **ஆசிரியர் வை. முத்துக்குமாரசாமி,** கொழும்பு 13.
66. **பண்டிதர் செ. சிவலிங்கம்,** அரசினர் பாடசாலை, **ஓமந்தை.**
67. **பண்டிதர் த. பொ. கார்த்திகேசு,** அற்றுலுகம அரசினர் **தமிழ்ப்** பாடசாலை, பண்டாரகம.
68. **ஆசிரியர் ஆ. க. சுப்பிரமணியம்,** அரசினர்தமிழ்ப் பாடசாலை, நெல்வீதி, கொழும்பு.
69. **ஆசிரியர் த.வே . தியாராகசா** தலைவர் சரசாலைக் கிராமச்சங்கம், [சாவகச்சேரி.
70. **ஆசிரியர் தி. சி. தில்லைச் சிவன்,** வேலணை.
71. **ஆசிரியர் வை. முத்துலிங்கம்,** கட்டுக்கலைஅரசினர் தமிழ்ப் பாடசாலை, கண்டி.
72. **ஆசிரியர் பொ. கந்தையா,** சஹிராக் கல்லூரி கொழும்பு 10.
73. **பண்டிதர் செ. பழனித்துரை,** கொக்குவில்.
74. **செ. வேலாயுதபிள்ளை பி. ஏ.,** ஆட்சிமொழி அலுவலகம், கொழும்பு.
75. **செல்வி இராதா சோமசுந்தரம் பி. ஏ.,** இந்துமகளிர் கல்லூரி, வண்ணர்பண்ணை.
76. **செல்வி சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு,** அரசினர் (மகளிர்) ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.
77. **ஆசிரியர் எம். எஸ். எம். அரிஸ்,** காலி.
78. **டாக்டர் வ. பொன்னையா, பி. ஏ., பி. எச்டி.,** விரிவுரையாளர், அரசினர் ஆசிரிய கலாசாலை, கொழும்பு.
79. **ஆசிரியர் அ. விசுவநாதன்,** அளவெட்டி.
80. **வித்துவான் பண்டிதர் க. கி. நடராசன், பி. ஓ. எல்.,** வண்ணர் பண்ணை, யாழ்ப்பாணம்.
81. **ஆசிரியர் சு. அருணசலம்,** மாத்தளை.

82. வி. செல்வநாயகம், எம். ஏ., விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை.
83. திருமதி. பு. சச்சிதானந்தம், பி. ஏ., சைவமங்கையர் கல்லூரி [கொழும்பு-6.
84. கை. சிவபாதம், வித்தியாதரிசி, நீர் கொழும்பு.
85. அ. வி. மயில்வாகனம், பி. ஏ., பி. எஸ் ஸி., கல்வி உத்தியோகத்தர், இரத்தினபுரி.
86. பண்டிதர் செ. துரைசிங்கம், நீர்வேலி.
87. பண்டிதர் செ. நடராசா, கொக்குவில்.
88. மு. பாலசுந்தரம் சித்திர ஆசிரியர், கொழும்பு-9.
89. திருமதி நல்லம்மா சேனாதிராசா, எம். ஏ., பி. எஸ்ஸி., வேலணை.
90. பண்டிதர் சு. இராமசாமி, அச்சுவேலி.
91. ஆசிரியர் பொ. கனகரத்தினம் களுத்துறை.
92. அ. சே. சுந்தரராஜன், பி. ஏ., இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.
93. கே. கணேஷ், தலத்து ஓயா.
94. வித்துவான் ச. இராசரத்தினம், கொழும்பு-9.
95. பண்டிதர் க. போ. ஆசிநாதன், பருத்தித் துறை.
96. வித்துவான ந. அந்தோனிப்பிள்ளை, யாழ்ப்பாணம்.
97. பண்டிதர் க. வேலுப் பிள்ளை, சாவகச்சேரி.
98. பண்டிதர் நா. கந்தையா, நெடுந்தீவு.
99. பண்டிதர் க. சிவசம்பு அளவெட்டி.
100. பண்டிதர் க. நாகலிங்கம் அளவெட்டி.
101, வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம், கொழும்பு-13.
102. பண்டிதர் பொ. சின்னத்துரை, பருத்தித்துறை.
103. வித்துவான் ஸ்ரீ ஜகநாதாச்சாரி, எம். ஏ., அனுராசபுரம்.
104. எம். எம். சுந்தரம், எம். ஏ., பி. எஸ் ஸி., வித்தியாதரிசி, பெல்மதுளை.
105. சோ. நடராசா, பி. ஏ., தேர்வுப் பகுதிக் கண்காணிப்பாளர், [கொழும்பு
106. வே. சதாசிவம், பி. ஏ.,எம். லிற்,, இறத்மலானை.
107. தி. மாணிக்கவாசகன், பி. ஏ., வித்தியாதரிசி, நாவலப்பிட்டி.
108. ஆசிரியர் கோ. கோணேசபிள்ளை, மண்டூர்.
109. இசைப்புலவர் என். சண்முகரத்தினம், உடுவில்.
110. கி. பி. அரன், ஆசிரியர் 'வீரகேசரி' கொழும்பு.
111. பண்டிதர் க. வீரகத்தி, வெல்லம்பிட்டியா,
112. பண்டிதை செல்வி. அ, தங்கம்மா, கொழும்பு—12.
113. வித்துவான் க, கார்த்திகேசு பி, ஏ., இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்
114. பண்டிதர் சின்னதுரை., அளவெட்டி.
115. பொ. நவரத்தினம், எம். ஏ., காரைநகர்.
116. வித்துவான் பொன். கனகசபை, புங்குடுதீவு,
117. இராஜ அரியரத்தினம், ஆசிரியர் 'ஈழகேசரி' சுன்னாகம்.
118. பண்டிதர் பொ. கிருஷ்ண பிள்ளை, அரசினர் ஆசிரிய கலாசாலை, பலாலி.
119. சி. பொ. சிவபாதம், பி, ஏ., வித்தியாதரிசி, அனுராசபுரம்.
120. கலைப்புலவர் க. நவரத்தினம், யாழ்ப்பாணம்.
121. ஆசிரியர் ந. தம்பிரத்தினம், தலைவர், அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம், யாழ்ப்பாணம்.
122. மு. கணபதிப் பிள்ளை, ஆட்சிமொழி அலுவலுகம், கொழும்பு.
123. ஆசிரியமணி ம. வைத்தியலிங்கம், தலைவர், வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம்.

**எமது நிலையத்தில் தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர் களின் நூல்கள் தொடர்ந்து வெளிவருகின்றன.**

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன், பேராசியர் எஸ். வையாபுரிப் பிள்ளை, பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், பேராசிரியர் அ. ச. ஞானசம்மந்தம், பேராசிரியர் க. அன்பழகன், "சோமலெ", "மாசி", டாக்டர் பா. நடராசன், கல்கி ஆசிரியர் "சோமு", கு. ராஜவேலு எம். ஏ., ந. சஞ்சீவி எம். ஏ., போ. குருசாமி எம். ஏ., தில்லை-வில்லாளன், இராதாமணுளன், ஆசைத்தம்பி, அறிஞர் அண்ணு, திருச்சி விசுவநாதம், மறைமலை அடிகள், வ. உ. சிதம்பரம் பிள்ளை முதலிய அறிஞர்களின் நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறேம்.

**எமது வெளியீடுகள் பல துறைகளிலும் வருகின்றன.**

கவிதை, காவியம், இசை, இலக்கியம், குழந்தை இலக்கியம், நவீனம், சிறுகதை, நாடகம், மருத்துவம், பிரயாணம், கைத்தொழில், பொருளாதாரம், வாழ்க்கை வரலாறு, சுய சரிதங்கள், சமையற்கலை தையற்கலை பற்றிய பல துறை நூல்களும், பௌத்தம், சமணம், கிறித்தவம் பற்றிய பல சமய நூல்களும், இத்தாலி, நார்வே, ஆங்கிலம், மராத்தி, ஹிந்தி முதலிய மொழிகளின் மொழி பெயர்ப்பு நூல்களும் வருகின்றன.

*எமது பெரிய விலைப்பட்டிக்கு எழுத வேண்டுகிறேம்.*

**பாரி நிலையம்,**

59, பிராட்வே :: சென்னை-1.

---

# ஸ்ரீ லங்கா அச்சகம்

**234, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.**

★ ***எங்கள் பிரசுரங்கள் :***

(1) ஒலிபரப்புக்கலை—சிவபாதசுந்தரம் ரூபா 6-0-0

(2) **Advaita Vedanta**— Sivathondan Circle ரூபா 3-0-0

(3) கதிர்காம வேலர்—மா. வே. திருஞானசம்பந்தப் பிள்ளை செய்த உரையுடன் சதம் 50

(4) திருவாசகப் பேருரை—பண்டிதமணி சு. நவநீதகிருஷ்ண பாரதியார்

(5) பூகோளப் பாடப் பயிற்சி
- ஆரும் வகுப்பிற்குரியது சதம் 65
- ஏழாம் வகுப்பிற்குரியது சதம் 75
- எட்டாம் வகுப்பிற்குரியது (அச்சில்)

## படித்துப் பயன் பெறவேண்டிய நூல்கள்

**தலைவர் ராஜாஜியின் நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| வியாசர் விருந்து | 10 | 0 | 0 |
| ,, மலிவுப் பதிப்பு | 6 | 8 | 0 |
| அறநூல்கள் | 5 | 0 | 0 |
| கதைகள் | 4 | 0 | 0 |
| கட்டுரைகள் | 4 | 0 | 0 |
| கண்ணன் காட்டிய வழி | 2 | 0 | 0 |
| ஆத்ம சிந்தனை | 1 | 8 | 0 |
| பஜ கோவிந்தம் | 1 | 0 | 0 |
| வேதாந்த தீபம் | 1 | 4 | 0 |
| உபநிஷதப் பலகணி | 1 | 0 | 0 |
| ஸோக்ரதர் | 1 | 8 | 0 |
| நிரந்தரச் செல்வம் | 1 | 8 | 0 |

**அமரர் 'கல்கி'யின் நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| அலை ஓசை | 12 | 8 | 0 |
| திருவழுந்தூர் சிவக்கொழுந்து | 1 | 12 | 0 |
| இடிந்த கோட்டை | 2 | 0 | 0 |
| காரிருளில் ஒரு மின்னல் | 1 | 12 | 0 |
| இலங்கைப் பிரயாணம் | 1 | 12 | 0 |
| நாட்டுக்கொரு புதல்வர் | 1 | 12 | 0 |
| பாரதி பிறந்தார் | 3 | 0 | 0 |
| வீணை பவானி | 2 | 12 | 0 |
| மூன்று மாதக் கடுங்காவல் | 2 | 12 | 0 |
| அமர வாழ்வு | 2 | 4 | 0 |
| சாரதையின் தந்திரம் | 3 | 4 | 0 |
| கணையாழியின் கனவு | 1 | 12 | 0 |

## பாரதி பதிப்பகம்

**தியாகராய நகரம் : : சென்னை-17.**

தந்தி : "பிறின்ரேஸ்" போன் : **117**

## விவேகானந்த அச்சகம்

**யாழ்ப்பாணம்.**

★

நவநாகரிக முறையில் சகலவித அச்சுவேலைகள், றபர்ஸ்ராம்பு வேலைகள், குறித்த காலத்தில், குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

★

எழுத்துக்கள் தயாரிப்பதிலும், றபர்ஸ்ராம்பு செய்வதிலும் வட-இலங்கையில் பிரசித்தி வாய்ந்த ஸ்தாபனம்.

★

கிளை

## விவேகானந்த அச்சகம்

228-232, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு,

தந்தி : "விவேபிரஸ்" போன் : **7733**

*தமிழ் உபபாடப் புத்தகங்கள்*

புதிய பாடத் திட்டத்திற்கேற்ப எழுதியவை.

## தேச பக்த மாலை

வித்துவான் எம். சண்முகம் பிள்ளை எழுதியது.

எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ. பி. எல்.

அவர்களின் முகவுரையுடன் கூடியது.

| | | |
|---|---|---|
| மகாத்மா காந்தி | அணா | 10 |
| கவியரசர் தாகூர் | ,, | 8 |
| தேசீய கவி பாரதியார் | ,, | 8 |
| கவியரசி சரோஜினி | ,, | 8 |
| தேசீய கவிமணிகள் | ,, | 8 |
| நமது நேருஜி | ,, | 12 |
| ஜனாதிபதி ராஜேந்திர பிரஸாத் | ,, | 8 |

ஆர். அனந்தநாராயணன், பி.ஏ.,எல்.டி. எழுதியவை.

| | | |
|---|---|---|
| வீர சிவாஜி | ,, | 10 |
| சுவாமி விவேகானந்தர் | ,, | 12 |
| ராணா பிரதாப சிம்மன் | ,, | 10 |

வித்துவான் என். கே. ரங்காச்சாரியார் எழுதியது.

| | | |
|---|---|---|
| இந்திய சுடர் மணிகள் | ,, | 6 |
| பீர்பால் கதைகள் | ,, | 4 |

## பி. ஜி. பால் & கம்பெனி

*புத்தக வியாபாரிகள் :: சென்னை-1.*

*இவை வரதர் வெளியீடுகள் :*

18—5—55ல் வெளிவருகிறது :

## 'இலக்கியவழி'

பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை

அவர்களின் சிறந்த கட்டுரைகளின் தொகுப்பு.

அறிஞர்களின் பாராட்டுகள் பெற்ற மொழிநூல்:

## 'தமிழ் மரபு'

வித்துவான் பொன். முத்துக்குமாரன் பி.ஓ.எல்.

அவர்கள் எழுதியது.

உயர் வகுப்பு மாணாக்கருக்கு உறுதுணையானது.

விலை ரூபா 3—0—0 ★ தபாற் செலவு வேறு.

*விற்பனை உரிமையாளர் :*

## ஆனந்தா அச்சகம்

222, காங்கேசன்துறை வீதி :: யாழ்ப்பாணம்.

# இன்ப நிலையத்தின் புதிய வெளியீடுகள்!

## மா. பொ. சி. எழுதியவை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முரசு முழங்குகிறது! | ... | ரூ. | 1 | 8 | 0 |
| இலக்கியச் செல்வம் | ... | ரூ. | 2 | 8 | 0 |
| வீரபாண்டியக் கட்டபொம்மன் | ... | ரூ. | 1 | 12 | 0 |
| கப்பலோட்டிய தமிழன் | ... | ரூ. | 1 | 12 | 0 |

## நாமக்கல் கவிஞர் எழுதியவை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திருக்குறள் புது உரை (உயரிய பதிப்பு) | ... | ரூ. | 10 | 0 | 0 |
| திருவள்ளுவர் திடுக்கிடுவார்! | ... | ரூ. | 1 | 8 | 0 |
| வள்ளுவரின் உள்ளம் | ... | ரூ. | 1 | 12 | 0 |

## பெ. தூரன் எழுதியவை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொன்னியின் தியாகம் | ... | ரூ. | 2 | 8 | 0 |
| இளந் தமிழா | ... | ரூ. | 2 | 0 | 0 |
| தங்கச் சங்கிலி | ... | ரூ. | 2 | 0 | 0 |

## 'லக்ஷ்மி'—எஸ். திரிபுரசுந்தரி எழுதியவை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குழந்தை வைத்தியம் (2-ம்பதிப்பு) | ... | ரூ. | 3 | 4 | 0 |
| சூர்யகாந்தம் | ... | ரூ. | 6 | 0 | 0 |
| மிதிலா விலாஸ் | ... | ரூ. | 6 | 0 | 0 |

தமிழிலுள்ள எல்லாப் புத்தகங்களும் எங்களிடம் கிடைக்கும்.

# இன்ப நிலையம்

மயிலாப்பூர் : : சென்னை-4.

---

*கழகவழி வெளிவந்துள்ள*

## திருக்குறள் பதிப்புக்கள்

திருக்குறள் பரிமேலழகர் உரை — கலிகா 5 0 0
ரெக்சைன் ரூ. 8 8 0 (ரெக்சைன் விளிம்பு மடிப்பு) 10 8 0

திருக்குறள் பொழிப்புரை — பேராசிரியர் கா. சுப்பிரமணிய-பிள்ளை.
கலிக்கா ரூ. 2 8 0 — ரெக்சைன் 5 0 0

திருக்குறள் தெளிவுரை — டாக்டர் மு. வரதராசன் 1 4 0
கலிக்கா ரூ. 1 12 0 — ரெக்சைன் 3 8 0

திருக்குறள் மூலம் (2-1/4" × 1-1/2" அளவு)
ராப்பர் ரூ. 0 8 0 — ரெக்சைன் 2 0 0

திருக்குறள் மூலம் (டபுள் கிரவுன் 1/64 அளவு) 0 10 0
கலிக்கா ரூ. 0 12 0 — ரெக்சைன் 2 0 0

திருக்குறள் மூலம் (டவுள் கிரவுன் 1/32 அளவு)
ராப்பர் ரூ. 0 12 0 — கலிக்கா 1 0 0

*திருநெல்வேலித் தென்னிந்திய*

## சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,

தலைமை : திருநெல்வேலி. — கிளை : 440, பிராட்வே, சென்னை 1.

CONNEMARA PUBLIC LIBRARY

CONNEMARA PUBLIC LIBRARY, MADRAS-8

DATE LABEL

CALL No. 031.1 B6T, T:9 ACC. No. 65798

Date of release for loan........................

This book should be returned on or before the date last marked above. An overdue charge of 6 Paise will be levied for each day the book is kept beyond that date.